




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:241 | 17-03-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

17.03.2026 பங்குனி 3
செவ்வாய் கிழமை

-------------------

சூரிய உதயம் 6.20

-------------------

**திதி:**
இன்று காலை 8.57 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.

-------------------

**நட்சத்திரம்:**
இன்று அதிகாலை 5.55 வரை அவிட்டம் பின்பு சதயம்

-------------------

**யோகம் :**
இன்று காலை 7.46 வரை சித்தம் பின்பு சாத்தியம்.

-------------------

**கரணம்**
இன்று காலை 8.57 வரை வணிசை பின்பு இரவு 8.42 வரை பத்திரை பின்பு சகுனி

-------------------

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.17 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

-------------------

**சந்திராஷ்டமம் :**
இன்று அதிகாலை 5.55 வரை புனர்பூசம் பின்பு பூசம்

-------------------

**நல்ல நேரம்**
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.

-------------------

**இராகு காலம்**
பிற்பகல் 3.00 – 4.30.

-------------------

**எமகண்டம்**
காலை 9.00 – 10.30. .

-------------------

**குளிகை**
பிற்பகல் 12.00 – 1.30.

-------------------

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# தமிழகம் முழுவதும் 2,106 பறக்கும் படை வீரர்கள் கண்காணிப்பு: ரூ.1.26 கோடி பறிமுதல்

**சென்னை, மார்ச் 17:**

தமிழகம் முழுவதும் 2,106 பறக்கும் படை வீரர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவர்கள் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறினார்.

தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் சென்னையில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் தேர்தல் நடைமுறைகள் முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பின்படி, ஏப்ரல் 23-ஆம் தேதி மாநிலம் முழுவதும் வாக்குப்பதிவு நடைபெறும்.

இதற்கான வேட்புமனுத் தாக்கல் மார்ச் 30-ஆம் தேதி தொடங்குகிறது. மார்ச் 31, ஏப்ரல் 3 மற்றும் ஏப்ரல் 5 ஆகிய தேதிகள் பொது விடுமுறை என்பதால், அந்த நாட்களில் மனுக்கள் பெறப்படமாட்டாது. இதன் காரணமாக, தமிழகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்ய மொத்தம் 5 நாட்கள் மட்டுமே அவகாசம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வேட்புமனுத் தாக்கல் செய்ய கடைசி நாள் ஏப்ரல் 6-ஆம் தேதியாகும். இதனைத் தொடர்ந்து ஏப்ரல் 7-ஆம் தேதி மனுக்கள் பரிசீலனை



செய்யப்படும். மனுக்களைத் திரும்பப் பெற விரும்புவோர் ஏப்ரல் 9-ஆம் தேதிக்குள் அதைச் செய்தாக வேண்டும். இறுதியில், மே 4-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். ஒட்டுமொத்த தேர்தல் நடவடிக்கைகளும் மே 6-ஆம் தேதியுடன் நிறைவடையும்.

### ரூ.1.26 கோடி பறிமுதல்

தமிழகத்தில் தற்போது மொத்தம் 5.69 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இதில் பெண் வாக்காளர்கள் (2.90 கோடி) ஆண் வாக்காளர்களை விட (2.78 கோடி) எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர். மேலும் 7,656 மூன்றாம் பாலினத்தவர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தேர்தலை நியாயமான முறையில் நடத்த, முறைகேடுகளைத் தடுக்க 216 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. வருமான வரித்துறை உள்ளிட்ட 23 அமலாக்க முகமைகள் கண்காணிப்புப் பணியில் இணைந்துள்ளன. குறிப்பாக, டிஜிட்டல் பணப்பரிமாற்றங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. நேற்று மாலை முதல் இதுவரை நடத்தப்பட்ட சோதனைகளில் சுமார் 1.26 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து இன்று மாலை 3 மணிக்கு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தலைமைத் தேர்தல் அதிகாரி முக்கிய ஆலோசனை நடத்துகிறார். இதில் தேர்தல் நடத்தை விதிகள் மற்றும் செலவினக் கட்டுப்பாடுகள் குறித்து விவாதிக்கப்படும். பிரச்சார நேரத்தைப் பொறுத்தவரை, காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் பிரசார அனுமதியை தேர்தல் ஆணைய இணையதளம் மூலமே பெற வேண்டும். வேட்புமனுக்களை காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை தாக்கல் செய்யலாம்.

வாக்குச்சாவடிகளுக்கு வரும் வாக்காளர்கள் தங்களது செல்போன்களைப் பாதுகாப்பாக வைக்கத் தேவையான வசதிகள் செய்யப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கோடை வெயிலைக் கருத்தில் கொண்டு அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நிழற்குடைகள், குடிநீர் மற்றும் தடையற்ற மின்சார வசதிகள் (AMF) உறுதி செய்யப்படும். வாக்காளர்கள் தங்களது பெயர் மற்றும் வார்டு விபரங்களை இப்போதே சரிபார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். புகார்களைத் தெரிவிக்க 'C-Vigil' செயலி தயார் நிலையில் உள்ளது.

சுமார் 3.2 லட்சம் அரசு அலுவலர்கள் மற்றும் 50 கம்பெனி மத்திய பாதுகாப்புப் படைகள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# விஜய் அரசியலுக்கு வந்ததே முதலமைச்சர் ஆவதற்குத் தான்

**கோவை, மார்ச் 17:**



கோவை விமான நிலையத்தில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் இன்று நிருபர்களை சந்தித்தார். அப்போது அவரிடம் தமிழக வெற்றிக்கழகம் என்.டி.ஏ. கூட்டணியில் இணைந்தால் விஜய்க்கு துணை முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்று தகவல்கள் வருகிறதே என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்து அவர் கூறியதாவது:-

முதலமைச்சராக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தான் அனைத்தையும் விட்டு மக்கள் பணிக்காக விஜய் அரசியலுக்கு வந்துள்ளார். தற்போது அவர் செல்லும் இடமெல்லாம் மக்கள் அதிக அளவில் திரண்டு வருகிறார்கள். இது தமிழகத்தில் மாற்றம் வேண்டும் என்று மக்கள் விரும்புவதையே காட்டுகிறது.

தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்ற மன நிலையில் மக்கள் உள்ளனர். அந்த மாற்றத்தை கொண்டு வரக்கூடிய திறன் விஜய்க்கு மட்டுமே உள்ளது. தமிழகத்தில் உள்ள 234 சட்டசபை தொகுதிகளிலும் போட்டியிடும் வகையில் சிறந்த வேட்பாளர்கள் தமிழக வெற்றிக்கழகத்தில் உள்ளனர். தமிழக வெற்றிக்கழகம் மற்றும் என்.டி.ஏ. கூட்டணி குறித்து இதுவரை எந்த விதமான கருத்து பரிமாற்றமும் நடைபெறவில்லை.

மாநிலத்தில் சட்டம் -ஒழுங்கு நிலைமை சரியாக இல்லை. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. பொதுமக்கள் அச்சத்துடன் வாழும் சூழலே நிலவுகிறது. டெல்லியில் நடந்த சி.பி.ஐ. விசாரணையில் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு த.வெ.க. தலைவர் விஜய் உரிய பதிலை அளித்துள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் தயார்

முன்னதாக ஈரோடு மாவட்டம், கோபி செட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதியில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் மூத்த தலைவருமான கே.ஏ. செங்கோட்டையன், கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, வேட்டைக்காரன் கோவில் மற்றும் நஞ்சகவுண்டன்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் அவர் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டு, வாக்காளர்களிடம் ஆதரவு கோரினார். நஞ்சகவுண்டன்பாளையத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின்போது, 300-க்கும் மேற்பட்டோர் கட்சியில் இணைந்தனர்.

புதிதாக இணைந்த உறுப்பினர்களுக்குப் பொன்னாடை போர்த்தி செங்கோட்டையன் அவர்களை வரவேற்றார். பின்னர் அங்கு கூடியிருந்த மக்களிடையே பேசுகையில், பல்வேறு கட்சிகள் நடத்திய கருத்துக்கணிப்புகள் அனைத்தும், விஜய்க்குப் பொதுமக்களின் ஆதரவு வலுவாக இருக்கிறது.

தமிழகம் முழுவதும் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் போட்டியிடத் தகுதியான வேட்பாளர்கள் தங்கள் கட்சியில் தயாராக உள்ளதாகவும், தமிழக வெற்றிக் கழகம் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கவில்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்; அத்துடன், விஜய் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்பார் என்ற நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார்.

# ஒடிசா மாநிலம் கட்டாக் நகரில் அரசு மருத்துவமனையில் தீ: 10 நோயாளிகள் பலி, 11 பேர் காயம்; ரூ.25 லட்சம் நிதியுதவி

**புவனேஸ்வர், மார்ச் 17:**

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்று அதிகாலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 11 பேர் காயம் அடைந்தனர்.

நெஞ்சை உலுக்கும் இந்த தீ விபத்து குறித்த விவரம் வருமாறு: ஒடிசா மாநிலம் கட்டாக் நகரில் எஸ்சிபி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில் இன்று (திங்கள்) அதிகாலை முதல் தளத்தில் தீப்பற்றியது. இதையடுத்து மருத்துவனை ஊழியர்கள் நோயாளிகளை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

விபத்து பற்றிய தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு தீயணைப்பு படையினர் விரைந்தனர். நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.



இந்த விபத்தில் நோயாளிகள் 10 பேர் உயிரிழந்தனர். நோயாளிகளை பாதுகாப்பாக மீட்டுச் சென்றபோது மருத்துவமனை ஊழியர்கள் 11 பேர் தீக்காயமடைந்தனர்.

இறந்தவர்களில் பெரும்பாலோர் ஐசியுவில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் என்று போலீசார் தெரிவித்தனர்.

ஐசியுவில் சிகிச்சை பெற்று வந்த மற்ற நோயாளிகள், ஒடிசாவில் உள்ள வேறு ஒரு அரசு மருத்துவனைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த சம்பவம் குறித்த செய்தி கிடைத்ததும், முதல்வர் மோகன் மஜி, சுகாதாரத்துறை அமைச்சர் முகேஷ் மகாலிங்குடன் உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்தார். மேலும், அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளையும் அவர் சந்தித்து ஆறுதல் கூறினார். காயமடைந்த நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

### ரூ.25 லட்சம் நிவாரணம்

பின்னர் நிருபர்களிடம் முதல்வர் மோகன் மஜி கூறியதாவது:

23 நோயாளிகள் வேறு மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் ரூ.25 லட்சம் நிவாரணம் வழங்கப்படும். காயமடைந்த நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். தீ விபத்துக்கான சரியான காரணம் தற்போது தெளிவாகத் தெரியவில்லை. விரிவான விசாரணை நடத்தி காரணத்தை கண்டறிய அதிகாரிகள், போலீசாருக்கு உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு மோகன் மஜி கூறினார்.

# எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுக்கு சாகித்திய அகாதெமி விருது!



**சென்னை, மார்ச் 17:**

தமிழ்ச் சிறுகதையின் தடங்கள் என்ற புத்தகத்துக்காக அவருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இலக்கியத்திற்காக வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றாக சாகித்திய அகாதெமி விருது கருதப்படுகிறது.

நாட்டின் அதிகாரப்பூர்வமான 24 மொழிகளில், கவிதை, சிறுகதை, நாவல், இலக்கிய ஆய்வு படைப்புகளில் சிறந்த படைப்புகள் தேர்வு செய்யப்பட்டு, அந்தந்த மொழிகளில் எழுத்தாளர்கள் இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

முன்னதாக 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது அறிவிப்பு நிகழ்ச்சி கடந்த டிசம்பர் மாதம் நடைபெற இருந்தது.

ஆனால், விருதுகளை இறுதி செய்வதில் இழுபறி நீடித்ததால் அந்த நிகழ்ச்சி கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டது. இதனால், செய்தியாளர்களுடனான சந்திப்பையும் சாகித்திய அகாதெமி நிர்வாகிகள் ரத்து செய்திருந்தனர். இன்று சாகித்திய அகாதெமி, அதிகாரப்பூர்வமாக விருது பட்டியலை வெளியிட்டுள்ளது.

தமிழில் 2024 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதை, திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சியும் 1908 (ஆய்வு நூல்) புத்தகத்துக்காக எழுத்தாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரவுடி தொப்பை கணேசனை என்கவுன்டரில் சுட்டுக்கொன்ற போலீசார்

**சென்னை, மார்ச் 17:**

மாதவரம் ரவுண்டானா அருகே கடந்த ஜனவரி மாதம் 30ம் தேதி வீடு புகுந்து உரிமையாளர்களை கட்டிப் போட்டு, ரூ. 25 லட்சம் ரொக்கம், 15 சவரன் நகை கொள்ளையடித்த வழக்கில் ஏற்கனவே சிலர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் கொள்ளை சம்பவத்தில் ரவுடி தொப்பை கணேசன் மூளையாக செயல்பட்டது தெரிய வந்துள்ளது. இதையடுத்து அவரை தேடி வந்த நிலையில், மாதவரம் ரவுண்டானா பகுதியில் இன்று அதிகாலை போலீசார் சுற்றி வளைத்தனர்.

அந்த நேரத்தில் காவலர்களை தாக்கிவிட்டு தொப்பை கணேசன் தப்பி ஓட முயன்றுள்ளார். இதனால் பாதுகாப்பிற்காக போலீசார் நடத்திய துப்பாக்கிச்



சூட்டில் தொப்பை கணேசன் சம்பவ இடத்திலேயே உயரிழந்தார்.

பிரபல ரவுடியாக அறியப்பட்ட சேராவின் கூட்டாளியாக அறியப்படும் தொப்பை கணேசன் மீது, 15-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளது. ஒரு வருடத்திற்கு முன்பாக கூட திருத்தணி அருகே அறிவழகன் என்பவரை துப்பாக்கி சூடு நடத்தி கைது செய்த போலீசார், அவர் அளித்த தகவலின் பேரில் வேறொரு வழக்கில் தொப்பை கணேசனை கைது செய்து இருந்தனர்.

அதன் பிறகு ஜாமீனில் வெளியே வந்து தலைமறைவாக இருந்த அவர், இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

என்கவுன்டரில் பலியான தொப்பை கணேசனின் உடல் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. ரவுடி தொப்பை கணேசன் தாக்கியதில் காயம் அடைந்த சப்இன்ஸ்பெக்டர் சுப்பிரமணி, காவலர் தினேஷ் ஆகியோர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் மாதவரம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் தேதி அறிவித்த மறுநாளே, மாநில தலைநகர் சென்னையில் இந்த என்கவுன்டர் நடத்தப்பட்டு இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால், ஒட்டுமொத்த நிர்வாக அதிகாரமும் தேர்தல் ஆணையம் வசம் உள்ளது குறிப்பிடத்தக்கது.







## திருக்குறள் குறள்-561

**தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங் கொறுப்பது வேந்து**



செய்த குற்றத்தை தக்கவாறு ஆராய்ந்து மீண்டும் அக் குற்றம் செய்யாத படி குற்றத்திற்குப் பொருந்துமாறு தண்டிப்பவனே அரசன் ஆவான்

## சிந்திக்க ஒரு நொடி



தேவையற்ற விஷயங்களை சிந்தித்துக் கொண்டே இருந்தால் தேவை உள்ள விஷயங்களை சிந்திக்க நேரம் இருக்காது

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## விசுவாவசு வருஷ மாசி ப்ரம்மோத்ஸவம்



மேற்குமாம்பலம்-ஸ்ரீபாஷ்யகாரஸ்ரீசெங்கமலவல்லிநாயிகா ஸமேத சென்ன ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் விசுவாவசு வருஷ மாசி ப்ரம்மோத்ஸவம். பத்தாம் நாள் காலை ஸ்ரீ பெருமாள்- தோளுக்கினியான்ள்

## திருவோணம் நட்சத்திரத்தை முன்னிட்டு சத்தியநாராயணர் பூஜை சிறப்பு வழிபாடு



**கடலூர் ,மார்ச் 17:**
கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் திருவோணம் நட்சத்திரத்தை முன்னிட்டு சத்தியநாராயணர் பூஜையில் ஆர்ய பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் பூஜையும்,மகா தீபாராதனையும் நடைபெற்றது. அனைவரும் சத்யநாராயணார் பூஜையில் கலந்து கொண்டு சத்யநாராயணரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பொறுப்பேற்பு!



**விழுப்புரம், மார்ச் 17:**
விழுப்புரம் மேற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளராக மு. ஜவ்வாது உசேன் பொறுப்பேற்றுக் கொண்டார். இவருக்கு மேற்கு காவல் நிலையத்தில் பணிபுரியும் உதவி ஆய்வாளர்கள் மற்றும் தலைமை காவலர்கள், முதல் நிலை காவலர்கள், இரண்டாம் நிலை காவலர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

## ஸ்ரீ யதோக்தகாரி பங்குனி பிரம்மோத்ஸவம்



ஸ்ரீ யதோக்தகாரி பங்குனி பிரம்மோத்ஸவம், நான்காம் நாள் சந்திரப்ரபை (15-03-2026)

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறாது

**புதுக்கோட்டை, மார்ச் 17:**
தமிழக சட்டமன்ற தேர்தல்-2026 அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் (15.03.2026) முதல் அமலுக்கு வந்ததையொட்டி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கட்கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாதந்தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மற்றும் மாதந்தோறும் நடைபெறும் மாற்றுத்திறனாளிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆகியவை தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் வரை நடைபெறாது.



பொதுமக்கள் தங்களின் மனுக்களை அளிக்க வசதியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு பெட்டி வைக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனுக்களை அளிக்க வரும் பொதுமக்கள் மேற்குறிப்பிட்ட மனு பெட்டியில் தங்களது மனுக்களை செலுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் கட்டுப்பாட்டு அறை ஆய்வு



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தலுக்காக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் உயர்திரு இரா. இராம்பிரதீபன் அவர்கள், திட்ட இயக்குனர் Dr. இரா. மணி அவர்கள் தேர்தல் கட்டுப்பாட்டு அறையை ஆய்வு மேற்கொண்டார்கள்.
தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திருவோணம் சுவாமி புறப்பாடு



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீஅலமேலு மங்கா ஸமேத ஸ்ரீப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாளுக்கு நேற்று (15.03.2026) திருவோணத்தை முன்னிட்டு காலை திருமஞ்சனம் கண்டருளால், மாலை சுவாமி பிரகார புறப்பாடு சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதாரர்கள் செய்து இருந்தனர்.
**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## சென்னையில் இஃப்தார் நோன்பு திறக்கும் விழா: அதிமுக பொதுச் செயலாளர், முன்னாள் முதல்வர் எடப்பாடி யார் பங்கேற்பு




**சென்னை மார்ச். 17:**
அதிமுக பொதுச் செயலாளர் முன்னாள் முதல்வர், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் புரட்சித்தமிழர் எடப்பாடியார் தலைமையில், அஇஅதிமுக சார்பில், சென்னையில் இஃப்தார் நோன்பு திறக்கும்விழா 15 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. எம்ஜிஆர் மன்றமாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஜாகிர் உசேன் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடியாரை நேரில் சந்தித்து இஃப்தார் நோன்பு திறக்கும் விழாவில் ஆசி பெற்றார்.

## திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் உண்டியல் காணிக்கை



திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் உண்டியல் திறக்கப்பட்டதில் ரூ.74.79 லட்சம் ரொக்கம், 162 கிராம் தங்கம், 2.89 கிலோ வெள்ளி காணிக்கையாக கிடைத்தது.

## சமூக வலைதளங்களில் பரவி வரும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை



புதுச்சேரியில் வீட்டு உபயோக சமையல் எரிவாயு (எல்.பி.ஜி) சிலிண்டர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சமூக வலைதளங்களில் பரவி வரும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என்றும், வீட்டு பயன்பாட்டிற்கான சிலிண்டர்கள் வழக்கம்போல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை விளக்கம் அளித்துள்ளது.



காஞ்சிபுரம் மாவட்டம் புத்தேரி ஊராட்சிக்கு உட்பட்ட சாலபோகம் பகுதியில் ஏற்கனவே ஆபத்தான நிலையில் இருந்த அங்கன்வாடி கட்டிடமானது புதிதாக காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சிவிஎம்பி.எழிலரசன் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 15,50,000 ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 13-ஆம் தேதி திறக்கப்பட்டது.

## கிரிவலம் செல்லும் பக்தர்களுக்கு இலவச பேருந்து




**திருவண்ணாமலை மார்ச் 17:**
திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தின் சார்பில் கிரிவலம் செல்லும் பக்தர்களின் வசதிக்காக ஐந்து இலவச பேருந்து சேவையை மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## ஆர் கே நகர் 1வது சர்க்கிள் பொறுப்பாளர்



ஆர் கே நகர் 1வது சர்க்கிள் பொறுப்பாளராக என்னை நியமனம் செய்த வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவர் திருமதி மதுரம்மா கனி பாரூக் அவர்களுக்கு ஆர் கே நகர் 1வது சர்க்கிள் சார்பாக சர்க்கிள் நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் அனைவரும் நன்றி தெரிவிக்கின்றோம். இந்த பொறுப்பாளர் பதவிக்கு பரிந்துரை செய்த அண்ணன் டி வி துரைராஜ் அவர்களுக்கும் வட சென்னை மாவட்ட நிர்வாகிகளுக்கும் சர்க்கிள் நிர்வாகிகளுக்கும் வட்ட நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் எம் மோகன் குமார் ஆர் கே நகர் 1வது சர்க்கிள்.

## தண்டரை கிராமத்தில் அணைக்கட்டு திறப்பு விழா



**திருவண்ணாமலை, மார்ச் 17:**
கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி தண்டரை கிராமத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அணை கட்டினை மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பறக்கும் படை பரிசோதனையில் 2 லட்சம் ரூபாயை பறிமுதல்



**பல்லடம், மார்ச் 17:**
பல்லடம் அருகே உடுமலை சாலை பிரிவு சித்தம்பலம் பகுதியில் பறக்கும் படை பரிசோதனையில் 2 லட்சம் ரூபாயை பறிமுதல் செய்துள்ளனர். உடுமலைப்பேட்டையில்இருந்து கோவை மருத்துவமனைக்கு சென்று கொண்டிருந்ததாக மௌலேஷ் மற்றும் அவரது மனைவி நந்தினி மற்றும் அவர்கள் தாயாருடன் காரில் சென்று கொண்டிருந்தபோது கணக்கில் இல்லாமல் வங்கி அட்டையை மட்டும் வைத்துக்கொண்டு பணம் பெற்று வந்ததாக ஸ்டேட்மெண்ட் உடன் பல்லடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரி சரவணன் முன்னிலையில் காண்பித்து பணத்தை திரும்பக் கூறி மன்றாடினர்.

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## இவர்கள் கூறுவதென்ன?

### உண்மையான அதிமுக அங்கே தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது: தம்பிதுரை



திமுகவில் தான் அதிமுக ஒரு பக்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என அதிமுக மாநிலங்களவை உறுப்பினர் தம்பிதுரை தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திமுகவில் தற்போது அமைச்சர்களாக இருப்பவர்களில் பலரும் அதிமுக பாசறையில் பயிற்சி பெற்றவர்கள் தான். இதில் குறிப்பாக அனிதா ராதாகிருஷ்ணன், எஸ்.முத்துசாமி, செந்தில் பாலாஜி, ரகுபதி, சேகர் பாபு, எ.வ. வேலு இவர்கள் அனைவருமே அதிமுகவிலிருந்து சென்றவர்கள்.

இவர்கள் அங்கு அமைச்சர்களாக உள்ளனர். ஒரு வகையில் பார்த்தால் உண்மையான அதிமுக அங்கே தான் ஒரு பக்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. திமுகவில் அவர்களுக்குத் தேவையான ஆட்கள் இல்லாததால் தான் அதிமுகவில் பயிற்சி பெற்றவர்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தற்போது அதிமுகவில் இருப்பவர்கள் அனைவரும் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா மற்றும் பழனிசாமி ஆகியோரின் உண்மையான விசுவாசிகள். இங்கே இருப்பவர்கள் எதற்கும் அஞ்சாமல் அதிமுக வெற்றிக்காக உழைப்பவர்கள். பழனிசாமியின் தலைமையிலான தற்போதைய கூட்டணியே சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெறும். மற்ற கட்சிகளின் கூட்டணிகள் குறித்து எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

### திமுக கூட்டணியில் நீடிப்பதா, வேண்டாமா? - வேல்முருகன் பரிசீலனை

திமுக கூட்டணியில் கூடுதல் இடங்களைவிட எங்களின் கோரிக்கைகள் முக்கியம். இதை நிறைவேற்றவில்லை எனில் கூட்டணியில் தொடர்வதா அல்லது வேண்டாமா என முடிவு செய்வோம் என்று தமிழக வாழ்வுரிமைக்கட்சி தலைவர் தி.வேல்முருகன் தெரிவித்தார்.

தமிழக வாழ்வுரிமைக்கட்சி தலைவர் தி.வேல்முருகன் கூறியதாவது: நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் எங்கள் கட்சிக்கு கூடுதல் இடங்கள் கேட்டு திமுகவின் பேச்சுவார்த்தை குழுவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தோம். ஆனால், இப்போது வரை கூடுதல் இடங்கள் பற்றி தகவல் கிடைக்கபெறவில்லை.

கூடுதல் இடங்கள் தரவில்லை, கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை என்ற நிலையை திமுக எடுக்குமெனில், திமுக தலைமையிலான கூட்டணியில் தொடர்வதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கட்சியின் அரசியல் தலைமைக்குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். எனவே, கோரிக்கையை ஓரிரு நாட்களில் நிறைவேற்ற முன்வருகிறதா, இல்லையா என தெரிந்து அதற்கு ஏற்ப இறுதி முடிவு எடுக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### “எங்களை காரணம் காட்டுவது நியாயமல்ல”: செல்வப்பெருந்தகை விளக்கம்

“காங்கிரஸுக்கு கூடுதல் தொகுதிகள் கொடுத்தது போல எங்களுக்கும் வேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சிகள் கேட்பது நியாயம் இல்லை” என தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்திருக்கிறார்.

திமுக கூட்டணியில் கூடுதல் தொகுதிகளை கம்யூனிஸ்ட் கட்சிகள் எதிர்பார்க்கின்றன. ஆனால் கூட்டணிக்கு புதிதாக கட்சிகள் வந்திருப்பதால் திமுக தர மறுக்கிறது. இதனால் தொகுதி ஒப்பந்தம் இன்னும் இறுதியாகாத சூழல் நிலவுகிறது. இதற்கிடையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம், “காங்கிரசுக்கும் திமுகவுக்கும் கூடுதல் தொகுதிகள் வழங்கப்படும் போது இடது சாரி கட்சிகளுக்கு கூடுதல் தொகுதிகள் தரமுடியாது என்று சொல்வதில் எந்த ஒரு நியாயமும் இல்லை” என்றார்.

இதற்கு நேற்று பதிலளித்த செல்வப்பெருந்தகை, “நாங்கள் ஒரு தேசிய கட்சி. திமுக எங்களுக்கு 110, 63, 41, 25 என தொடர்ச்சியாக தொகுதிகளை குறைத்தது. எனவே இந்தமுறை 41 தொகுதிகள் வேண்டும் என எங்களது தலைமை கேட்டது. ஆனால் அதையும் குறைத்துதான் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மூன்று தொகுதிகள் அதிகமாக கொடுத்ததை மனநிறைவோடு வாங்கியிருக்கிறோம். இப்படியான சூழலில் காங்கிரஸுக்கு கூடுதல் தொகுதிகள் கொடுத்தது போல எங்களுக்கும் வேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சிகள் கேட்பது நியாயம் இல்லை. உங்களுடைய உரிமையை கேளுங்கள். முதல்வருக்கு மனம் இருக்கிறது; இருந்தால் கொடுப்பார். எங்களுடைய வேதனையை தோழமை கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும்” என்றார்.

## வேட்புமனு தாக்கல் நேரம் முதல் பறக்கும் படைக்கு அறிவுரை வரை - தேர்தல் முன்னேற்பாடுகள் பற்றி அர்ச்சனா பட்நாயக் விளக்கம்



சோதனைகளின்போது பொதுமக்களை தொந்தரவு செய்யக்கூடாது என்று பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் தகுந்த ஆவணங்களை வைத்திருந்தால் பணத்தை உடனே திருப்பித்தர உத்தரவிட்டுள்ளோம் என தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “மார்ச் 30 முதல் ஏப்.6 வரை பொதுவிடுமுறை நாட்களைத் தவிர மற்ற நாட்களில் காலை 11 மணி முதல் பகல் 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம். உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் பணம் எடுத்துச் செல்லக் கூடாது. அப்படி எடுத்துச் செல்லப்படும் பணம் எங்கிருந்து பெறப்பட்டது என்பதற்கான ஆவணம் கட்டாயம் தேவை.

சோதனைகளின்போது பொதுமக்களை தொந்தரவு செய்யக்கூடாது என்று பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் தகுந்த ஆவணங்களை வைத்திருந்தால் பணத்தை உடனே திருப்பித்தர உத்தரவிட்டுள்ளோம்.

வாக்களிக்கும் இடத்தில் செல்போன்களுக்கு அனுமதி இல்லை. செல்போன்களை வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பாக வைக்க வசதி செய்து தரப்படும். வாக்குச்சாவடி விவரங்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். தமிழகத்தில், தோதலை முன்னிட்டு 2,106 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

டிஜிட்டல் முறை பணப் பரிவர்த்தனைகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் வந்ததில் இருந்து இதுவரை ரூ.1.26 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே பரப்புரை செய்யலாம்; ஆன்லைன் மூலம் மட்டுமே பரப்புரைகளுக்கு அனுமதி கேட்கப்பட வேண்டும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## “தனது அரசியல் எதிர்காலத்தை விஜய் சூனியமாக்கி கொள்ள மாட்டார்” - திருமாவளவன் கரிசனம்



தே.ஜ. கூட்டணியில் சேர விஜய் இணங்க மாட்டார். தனது அரசியல் எதிர்காலத்தை சூனியமாக்கிக் கொள்ள மாட்டார் என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விசிக தலைவர் திருமாவளவன் சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பாஜக, விஜய்யை தங்கள் கூட்டணியில் இணைக்க முயற்சிப்பதாக செய்திகள் வருகின்றன. விஜய்க்கு அழுத்தம் கொடுத்து அடிபணிய வைக்க முயற்சிகள் நடப்பதாக செய்திகள் வருகின்றன. நண்பர் விஜய் பாஜகவுக்கு அடிபணிந்தால் அவருடைய அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும்.

அது அவருக்கும் தெரியும், பிற மாநிலங்களில் பாஜக, சங் பரிவார் நயவஞ்சகமாக கூட்டணி கட்சிகளை வளைப்பது போன்ற யுக்தியை கையாள்வர். அதை தமிழகத்திலும் செய்ய பார்க்கின்றனர்.

நண்பர் விஜய் அதற்கு இணங்க மாட்டார். தனது எதிர்காலத்தை சூனியமாக்கி கொள்ள மாட்டார் என நான் நம்புகிறேன்.

இடதுசாரிகள் கூடுதல் தொகுதிகள் கேட்பதாக கூறுகிறீர்கள், கூட்டணி பேச்சுவார்த்தையின் போது கூட்டணி கட்சிகள் இடையே மாறுபட்ட, முரண்பட்ட கருத்துகள் வருவது இயல்புதான். ஆனாலும் இறுதியில் சுமூக தீர்வு காண்போம்.

இந்த கருத்துக்களால் கூட்டணியில் எந்த பாதிப்பும் ஏற்படாது. விடுதலை சிறுத்தைகள் கட்சி எத்தனை தொகுதிகளில் போட்டியிடும் என இரண்டொரு நாளில் தெரிந்து விடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## கூட்டணி குறித்து யாரிடமும் பேசவில்லை.. வதந்திகளை நம்ப வேண்டாம் - தவெக



தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23-ந்தேதி நடைபெறவுள்ள நிலையில், தவெக இதுவரையில் தனித்தே களமிறங்கியுள்ளது. கூட்டணி குறித்து அதிகாரப்பூர்வ தகவல் ஏதும் வெளியாகவில்லை.இதற்கிடையே, தேசிய ஜனநாயக கூட்டணிக்குள் தவெகவை இழுக்க முயற்சிகள் நடைபெற்று வருகிறது என்றும், விஜய்க்கு எதிர்க்கட்சித்தலைவர் அல்லது துணை முதல்-அமைச்சர் பதவி வழங்கப்படும் என்றும் கூறி பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளியாகிக்கொண்டே இருந்தன.

ஆனால் கூட்டணி தொடர்பான இத்தகைய பேச்சுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, தவெக இணை பொதுச் செயலாளர் சிடிஆர் நிர்மல் குமார் தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், 'கூட்டணி குறித்து யாரிடமும் பேசவில்லை.. வதந்திகளை நம்ப வேண்டாம்' என தெரிவித்துள்ளார். மேலும் அந்த பதிவில் அவர் தெரிவித்து இருப்பதாவது;

சமீபகாலமாக சில ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் அரசியல் லாபத்திற்காக திட்டமிட்டு சில பொய்யான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பாஜக/அஇஅதிமுக அல்லது சசிகலா, மருத்துவர் ராமதாஸ் ஆகியோரை தமிழக வெற்றிக்கழகத்துடன் தொடர்புபடுத்தி கூட்டணி பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதாகக் கூறப்படும் தகவல்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை.

குறிப்பிட்ட கட்சிகள் மற்றும் அரசியல் தலைவர்களுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தை,எந்த மட்டத்திலும் நடைபெறவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறோம். இதே போன்ற பொய்ச்செய்தி உத்தியை காங்கிரசு உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளோடு தொடர்புபடுத்தியும் கடந்த காலங்களில் கடைபிடிக்கப்பட்டதும் அது உண்மை இல்லை என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று.

இருப்பினும் பொதுமக்களிடையேயும், தொண்டர்களிடையேயும் தொடர்ந்து குழப்பத்தை விளைவிப்பதற்காகவே இத்தகைய ஆதாரமற்ற செய்திகள் திமுகவினரால் பரப்பப்படுகின்றன. பொறுப்புள்ள ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளப் பயனாளர்கள், செய்தியின் உண்மைத்தன்மையை ஆராயாமல் இத்தகைய வதந்திகளைப் பகிர வேண்டாம்! வாய்மையே வெல்லும்!”

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## “கூட்டணி கட்சிகளுக்கு தேமுதிகவால் பாதிப்பு இல்லை” - பிரேமலதா சொல்கிறார்



திமுக கூட்டணிக்கு நாங்கள் வந்ததால் மற்ற கட்சிகளுக்கு பாதிப்பு இல்லை என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா கூறியுள்ளார்.

காஞ்சிபுரம், உலகளந்த பெருமாள் மற்றும் காமாட்சியம்மன் கோயிலில் தேமுதிக பொது செயலாளர் பிரேமலதா, சுதீஷ் ஆகியோர் குடும்பத்துடன் சுவாமி தரிசனம் மேற்கொண்டனர். பின்னர், பிரேமலதா செய்தியாளர்களிடம் கூறியதாவது: சட்டப்பேரவை தேர்தலில் எங்கள் கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் கைப்பற்றி வெற்றி பெறும்.

தேமுதிக வருகையால் கூட்டணி கட்சிகள் யாருக்கும் பாதிப்பு இல்லை. அனைவரும் மகிழ்ச்சியாக, ஒற்றுமையுடன் இருக்கிறோம். ஒரிரு நாட்களில் யார், யாருக்கு எத்தனை தொகுதிகள், எந்தந்த தொகுதிகள் என்பது தெரியவரும்.

பின்னர், வேட்பாளர்களை அறிவிப்போம்.

நானும், விஜய பிரபாகரனும் தேர்தலில் போட்டியிட வேண்டுமென தொண்டர்கள் விரும்புகின்றனர். விரைவில் தேமுதிகவுக்கு எத்தனை தொகுதிகள் யார், யார் வேட்பாளர்கள் என்பதை அறிவிப்போம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## உட்கட்சி அரசியலால் விரக்தியில் புஸ்ஸி ஆனந்த்? கேட்டது சோழிங்கநல்லூர்.. கிடைத்தது தி.நகர்..

தவெக-வுக்குள் ஜான் ஆரோக்கியசாமியும், ஆதவ் அர்ஜுனாவும் இணைந்து புஸ்ஸி ஆனந்துக்கு எதிராக 'லாபி' செய்து வருவது ஆனந்த் தரப்பை நிலைகுலைய வைத்திருக்கிறது. இதன் உச்சக்கட்டமாக, சோழிங்கநல்லூரில் போட்டியிட விரும்பிய ஆனந்தை வலுக்கட்டாயமாக தி.நகருக்குத் தள்ளிவிடும் நிலைக்கு விஜய்யிடம் காய்களை நகர்த்தி வெற்றி பெற்றுவிட்டார்கள் ஜான் - ஆதவ் கூட்டணி என்கிறார்கள் விபரமறிந்தவர்கள்.

இதுகுறித்து தவெக உள்வட்டாரங்கள் பேசுகையில், “தவெக உருவாவதற்கு புஸ்ஸி ஆனந்த் அஸ்திவாரமாக இருந்ததால், அவருக்குக் கட்சியில் மிக முக்கியமான பொதுச்செயலாளர் பதவியைக் கொடுத்தார் விஜய். ஆனால், சமீபகாலமாக நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஜான் ஆரோக்கிய சாமி, ஆதவ் அர்ஜுனா இணைந்து ஆனந்துக்கு எதிராகத் திட்டமிட்டே காய் நகர்த்தி வருகிறார்கள்.

'புஸ்ஸி ஆனந்துக்குக் கட்சியின் அரசியல் வியூகங்களைப் புரிந்து கொள்ளத் தெரியவில்லை; மேடைகளில் பேசுவதற்கும் அவருக்குப் போதிய ஆளுமை இல்லை. அவருக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் கொடுத்தால் அது கட்சியின் ஒட்டுமொத்த தோல்விக்கே வழிவகுக்கும்' என அவர்கள் விஜய்யின் காதுகளைக் கவ்வி வருகிறார்கள்.

இதனால் சமீபகாலமாக தவெக நிகழ்ச்சிகளில் ஆனந்துக்கான முக்கியத்துவம் குறைக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில், ஆனந்த் தயாரித்த வேட்பாளர் பட்டியலை நிராகரித்த அந்தத் தரப்பு, 'பாஜக-வுடன் கூட்டணி வைக்க ஆனந்த் விரும்புகிறார்' என்கிற தகவலையும் பரப்பி வருவதாக ஆனந்த் தரப்பு கூறி வருகிறது. இதன் ஒரு பகுதியாகவே, சோழிங்கநல்லூரில் போட்டியிட விரும்பிய ஆனந்தை தி.நகர் தொகுதியில் முடக்கிவிட்டார்கள்.

ஆரம்பத்தில் ஆனந்த் எடுத்த ரகசிய சர்வேயில், சோழிங்கநல்லூர் தொகுதியில் போட்டியிட்டால் மட்டுமே வெற்றி நிச்சயம் என ரிசல்ட் வந்திருந்தது. தமிழகத்திலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட தொகுதி என்பதாலும், ஐடி ஊழியர்கள் அதிகம் நிறைந்த பகுதி என்பதாலும், அங்கு உறுப்பினர் சேர்க்கை மற்றும் கிளை அமைப்புகள் வலுவாக இருப்பதாலும் அந்தத் தொகுதியையே ஆனந்த் மலை போல நம்பியிருந்தார்.

மேலும், அங்கு இரண்டு முறை தொடர்ந்து வெற்றி பெற்ற திமுக எம்.எல்.ஏ அரவிந்த் ரமேஷ் மீது தொகுதிக்குள் நிலவும் அதிருப்தியும், அதிமுக-வில் கே.பி. கந்தனுக்குப் பெரிய அளவில் வரவேற்பு இல்லாததும் தனக்குச் சாதகமாக அமையும் என ஆனந்த் கணக்குப் போட்டிருந்தார். ஆனால், 'அங்கே சென்னை புறநகர் மாவட்டச் செயலாளர் சரவணனை நிறுத்தினால்தான் சரியாக இருக்கும்; அவருக்குத்தான் மக்கள் ஆதரவு இருக்கிறது' என ஆதவ் - ஜான் தரப்பு விஜய்யிடம் சொல்லியிருக்கிறது.

இதுதொடர்பாக புஸ்ஸி ஆனந்த் தரப்பு வட்டாரங்கள் கூறுகையில், “நிர்வாகிகள் மூன்று பேருக்குள் பிரச்சினை இருப்பதாகச் சிலர் திட்டமிட்டு அவதூறான கருத்துக்களைப் பரப்பி வருகிறார்கள். உண்மையில், தி.நகர் தொகுதியில் போட்டியிட வேண்டும் என்பது தான் புஸ்ஸி ஆனந்தின் தனிப்பட்ட விருப்பமாக இருந்தது. அந்த விருப்பத்தைத் தலைமையிடம் அவர் முறைப்படி தெரிவித்தார்; தலைவரும் அதற்குப் பச்சைக்கொடி காட்டியதையடுத்து, தற்போது அங்கு அவர் தீவிரமாகக் களப்பணிகளை மேற்கொண்டு வருகிறார். தமிழக வெற்றிக் கழகத்திற்குள் எந்தவிதமான கோஷ்டி பூசலும் இல்லை,” என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

## திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் அலைமோதிய பக்தர்கள்

**திருவண்ணாமலை, மார்ச் 17:**

திருவண்ணாமலையில் அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு ஞாயிற்றுக்கிழமை போன்ற விடுமுறை நாட்கள் மற்றும் விசேஷ நாட்களில் பக்தர்கள் அதிகளவில் வருகை தருவார்கள். இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் அருணாசலேஸ்வரர் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

பக்தர்கள் ராஜகோபுரம் வழியாகவும், அம்மணி அம்மன் கோபுரம் அருகில் அமைக்கப்பட்டு உள்ள காத்திருப்பு கூடத்தின் வழியாகவும் தரிசனத்திற்கு உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். ராஜகோபுரத்தின் வழியாக தரிசனத்திற்கு சென்ற பக்தர்களின் வரிசையானது வட ஒத்தவாடை தெரு வரை நீண்டு காணப்பட்டது. மேலும் அம்மணி அம்மன் கோபுரம் நுழைவு வாயிலுக்கு அருகில் உள்ள காத்திருப்பு கூடத்தில் பக்தர்கள் காத்திருந்து வரிசையில் சென்று சாமி தரிசனம் செய்தனர். பொது தரிசன வழியில் சென்ற பக்தர்கள் கோவிலில் சாமி தரிசனம் செய்ய சுமார் 3 மணி நேரம் ஆனதாக தெரிவித்தனர்.

நேற்று பகலில் வெயிலின் அளவு அதிகமாகவே இருந்தது. கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாமல் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர். வரிசையில் நின்ற பக்தர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் நீர், மோர் வழங்கப்பட்டது. மேலும் கோவில் வளாகத்தில் பக்தர்கள் நடமாடும் பகுதிகளில் வெயிலினால் கால் பாதம் சுடாமல் இருக்க தண்ணீர் தெளிக்கப்பட்டது. இதனை கோவிலுக்கு வந்த பக்தர்கள் வரவேற்றனர்.

மேலும் நேற்று காலையில் பக்தர்கள் பலர் தனித்தனியாக கிரிவலம் சென்ற வண்ணம் காணப்பட்டனர். பகல் நேரத்தில் வெயிலின் தாக்கத்தினால் கிரிவலம் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டது. மாலையில் பலர் கிரிவலம் சென்றனர்.

## சென்னை காலடிப்பேட்டை பெருமாள் கோவிலில் ராமநவமி உற்சவம்.. 19-ம் தேதி ஆரம்பம்

**திருவொற்றியூர், மார்ச் 17:**

சென்னை திருவொற்றியூர் காலடிப்பேட்டையில் 400 ஆண்டுகள் பழமையான ஸ்ரீகல்யாண வரதராஜ பெருமாள் கோவில் உள்ளது. இங்கு ராமநவமியை முன்னிட்டு 9 நாட்கள் உற்சவம் வெகுவிமரிசையாக நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான ராமநவமி உற்சவம் வரும் 19-ம் தேதி தொடங்கி 27-ம் தேதி வரை நடைபெற உள்ளது. விழா நாட்களில் தினமும் காலை 10.30 மணிக்கு ராமபிரானுக்கு திருமஞ்சனம் நடைபெறும். மாலையில் வாகன சேவைகள் நடைபெறும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்தில் பகவான் ஸ்ரீராமர் எழுந்தருளி, பெரிய மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். 27-ம் தேதி திருக்கல்யாணம் மற்றும் ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்துடன் ராமநவமி உற்சவம் நிறைவுபெறும்.

விழாவிற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றன.

## சீனிவாசமங்காபுரத்தில் கோலாகலமாக நடைபெற்ற புஷ்பயாகம்..



**திருப்பதி, மார்ச் 17:**

திருப்பதி அருகே உள்ள சீனிவாச மங்காபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வர சுவாமி ஆலயத்தில், புஷ்பயாக மகோத்சவம் (மலர்களால் செய்யப்படும் யாகம்) நேற்று விமரிசையாக நடைபெற்றது.

இதன் தொடக்க விழாவான 'அங்குரார்ப்பண' வைபவம், நேற்று முன்தினம் மாலையில் நடைபெற்றது. மாலை 6:00 மணி முதல் 8:00 மணி வரை, 'புண்யாஹவாசனம்' (புனிதப்படுத்தும் சடங்கு), 'மிருத்ஸங்கிரஹணம்' (புனித மண் சேகரித்தல்), 'சேனாதிபதி உற்சவம்' (தெய்வீகத் தளபதியின் ஊர்வலம்) மற்றும் 'அங்குரார்ப்பணம்' உள்ளிட்ட சடங்குகள் நடத்தப்பட்டன.

ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வர சுவாமி, ஸ்ரீதேவி மற்றும் பூதேவிக்கு சிறப்பு அபிஷேகம்

நேற்று காலை 10:00 மணி முதல் 11:00 மணி வரை, ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வர சுவாமி, ஸ்ரீதேவி மற்றும் பூதேவி உற்சவர்களுக்கு பால், தயிர், தேன், மஞ்சள், சந்தனக் கலவை மற்றும் இளநீர் ஆகியவற்றால் திருமஞ்சனம் செய்யப்பட்டது. அதன்பின்னர் புஷ்பயாகம் எனப்படும் முக்கிய நிகழ்வு பிற்பகல் 2:00 மணி முதல் 4:00 மணி வரை நடைபெற்றது.

சாமந்தி, ரோஜா, அரளி, செண்பகம், மல்லிகை, கனகாம்பரம், தாமரை, அல்லி, தாழம்பூ உள்ளிட்ட 12 வகையான மலர்கள் மற்றும் துளசி, வில்வம் பன்னீர் உள்ளிட்ட 6 வகையான புனித இலைகளை கூடை கூடையாக கொண்டு வந்து, சுவாமிக்கு 'அபிஷேகம்' செய்யப்பட்டது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

புஷ்பயாகத்திற்காக பக்தர்கள் மொத்தம் 4 டன் மலர்களை காணிக்கையாக வழங்கியிருந்தனர். தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களிலிருந்து இந்த மலர்கள் காணிக்கையாகப் பெறப்பட்டன.

புஷ்பயாகத்திற்காக கொண்டு வரப்பட்ட மலர்கள்

சமீபத்தில் நிறைவடைந்த பிரம்மோற்சவவிழாவின்போது அர்ச்சகர்களாலோ, ஆலய ஊழியர்களாலோ அல்லது பக்தர்களாலோ ஏதேனும் அறியாத பிழைகள் அல்லது குறைபாடுகள் நிகழ்ந்திருந்தால், அதற்குப் பிராயச்சித்தமாகவே புஷ்பயாகம் நடத்தப்பட்டது. இந்த யாகத்தைச் செய்வதன் மூலம், அத்தகைய சடங்கு ரீதியான குறைபாடுகள் அனைத்தும் நீங்கி, முழுமையாக பரிகாரம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

## ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவிலில் பக்தர்களுக்காக இலவச பஸ் இயக்கம்



**ஸ்ரீகாளஹஸ்தி, மார்ச் 17:**

திருப்பதி மாவட்டம் ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய வருகின்றனர். பக்தர்களின் வசதிக்காக கோவில் நிர்வாகம் சார்பில் இலவச பஸ் இயக்கப்படுகிறது. அந்தப் பஸ் கைலாச சதன், கங்கா சதனில் இருந்து அதிகாலை 3 மணியில் இருந்து காலை 8 மணி வரையிலும், மாலை 5.30 மணியில் இருந்து இரவு 8 மணி வரையிலும் இயக்கப்படுகிறது. கோவிலின் 4-வது வாயில், ரெயில் நிலையம், வரதராஜசாமி விருந்தினர் மாளிகை, அரசு பஸ் நிலையம், பக்த கண்ணப்ப சதன், 1-வது வாயில், 4-வது வாயில் மற்றும் கைலாச தனம், கங்கா சதன் விருந்தினர் மாளிகை ஆகிய பகுதிகளுக்கு இந்த பஸ் இயக்கப்படுகிறது.

அதேபோல் காலை 9 மணியில் இருந்து மதியம் 12.00 மணி வரையிலும், மதியம் 1 மணியில் இருந்து மாலை 5 மணி வரையிலும் கைலாச சதன், கங்கா சதன் முதல் 4-வது கேட், 1-வது கேட், அரசு பஸ் நிலையம், வி.எம்.சி. சர்க்கிள், பக்த கண்ணப்ப சதன், 1-வது கேட், 4-வது கேட் வரை இலவச பஸ் இயக்கப்படுகிறது.

இலவச பஸ் வசதியை பக்தர்கள் பயன்படுத்தி கொள்ளவேண்டும், என கோவில் செயல் அலுவலர் வெங்கடேசுலு தெரிவித்துள்ளார்.

## திருமலையில் அன்னமாச்சாரியார் நினைவுநாள்.. திருவுருவச் சிலைக்கு அபிஷேகம்



**திருமலை, மார்ச் 17:**

திருப்பதி ஏழுமலையானை புகழ்ந்து 32 ஆயிரம் பக்தி சங்கீர்த்தனைங்களை செப்பேடுகளில் எழுதி பாடியவர் தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார். திருப்பதி தேவஸ்தானம் சார்பில் அவரின் 523-வது நினைவுநாள் அனுசரிக்கப்பட்டது. திருமலையில் லேபாட்சி சந்திப்பில் உள்ள தாளப்பாக்கம் அன்னமாச்சாரியாரின் உருவச்சிலைக்கு அபிஷேகம், அலங்காரம், சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, தூப, தீபம், நைவேத்தியம் சமர்ப்பித்து கற்பூர ஆரத்தி காண்பிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அன்னமாச்சாரியாரின் 12-வது தலைமுறையைச் சேர்ந்த தாளப்பாக்கம் பவன்பாரத்வாஜ், தாளப்பாக்கம் ஹயக்ரீவ நாராயணச்சாரியார், காஞ்சி ராஜேஷ்பிரேம் குமார், பெங்களூருவைச் சேர்ந்த விஜயகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அபிஷேகத்தின்போது சித்திபேட்டையைச் சேர்ந்த பவன் குழு, விசாகப்பட்டினம் குழு, சிங்கப்பூரில் இருந்து வந்திருந்த பக்தர்கள் குழு ஆகியோர் இணைந்து அன்னமாச்சாரியாரின் பக்தி சங்கீர்த்தனைகளை பாடினர். அன்னமாச்சார்யாவின் 523வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி, திருமலையில் உள்ள நாராயணகிரி தோட்டத்தில் நேற்று மாலை ஸ்ரீ மலையப்ப சுவாமி ஊஞ்சல் சேவையின்போது சப்தகிரி சங்கீர்த்தன கோஷ்டி கானம் நடைபெற்றது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

## பெண்கள் அன்றாடம் சேர்த்துக் கொள்ள வேண்டிய உணவுகள் (2)

**நேற்றைய தொடர்ச்சி**

நமது உடல் பொட்டாசியம் சந்தை தக்க வைக்க முழு தானியங்கள் உதவுகின்றன. தினமும் ஏதேனும் ஒரு தானியம் எடுத்துக் கொள்ள வேண்டும். பைரிடாக்சின் (PYRIDOXINE) எனும் வைட்டமின் B6, தானியங்களில் அதிகமுள்ளது. மாதவிடாய்க்கு முன்பாக பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதலுக்கு முக்கிய காரணம் இந்த வைட்டமின் குறைபாடு தான்.

6. டார்க் சாக்லெட்: இதில் 'டிரைப்டோபேன்' அதிகம் உள்ளது. இது உற்சாக மனநிலையை வழங்கும் சொரட்டோனின் ஹார்மோன் தூண்ட உதவுகிறது. இது மாதவிடாய் காலத்தில் ஏற்படும் பி.எம்.எஸ் அவஸ்தையை தவிர்க்க உதவுகிறது. தினமும் ஒரு பார் சாக்லேட்டில் கால் பங்கு சாப்பிட அதிலுள்ள ஆன்டி ஆக்ஸிடென்ட் ரத்த அழுத்தத்தை சீராக்கி, இதயநோய் மற்றும் பக்கவாதம் வராமல் தவிர்க்க உதவுகிறது.

7. பசலைக் கீரை: இதில் உள்ள வைட்டமின் A, C, ஃபோலேட், இரும்புச் சத்து முடி உதிர்வைத் தடுத்து, உச்சந்தலையின் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது. இதிலுள்ள ஃபோலேட் பிரசவ குறைபாடுகளை தவிர்க்கும்; இதய நோய்கள் வராமல் தவிர்க்கும்; குடல் புற்றுநோய், ஞாபக மறதி மற்றும் வெப்ப கால சரும பாதிப்பை தவிர்க்கும். இதை வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

8. பெர்ரி பழம்: செல் பாதிப்புகளை தவிர்க்க உதவும் ஆன்டி ஆக்ஸிடென்ட் நிறைந்தது. பெண்களுக்கு ஏற்படும் சிறுநீரக தொற்றுநோய்களை தவிர்க்க, பார்வை குறைபாடு தவிர்க்க மற்றும் சரும பாதுகாப்புக்கு உதவும். வாரம் 3 அல்லது 4 முறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

9. பப்பாளி: வைட்டமின்கள் ஏ, சி, இ, ஆன்டிஆக்ஸிடண்ட்ஸ், செரிமானத்துக்கு உதவும் பப்பைன் என பல்வேறு நன்மைகளைக் கொண்டது. இது பெண்களுக்கு அதிக தொந்தரவு தரும் பித்தப்பை கற்கள் மற்றும் சிறுநீரக நோய்கள் தவிர்க்க உதவுகிறது. மேலும், பொட்டாசியம் மற்றும் வைட்டமின் சி சத்து நிறைந்துள்ளது. தினமும் இரண்டு துண்டுகளாவது சாப்பிட வேண்டும்.

10. சர்க்கரை வள்ளி கிழங்கு: ஊட்டச்சத்து மிகுந்த கிழங்கு வகைகளில் சர்க்கரை வள்ளி கிழங்குகளுக்கு முக்கிய இடம் உண்டு. இதில் செரிந்து காணப்படும் வைட்டமின்கள் ஏ, பி6, சி, டி, மெக்னீசியம், நார்ச்சத்து மற்றும் தாதுக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன் செரிமானத்தையும் மேம்படுத்துகின்றன. இதில் காணப்படும் கெரட்டினாய்டுகள் வயிறு, சிறுநீரகம் மற்றும் மார்பக புற்றுநோய்யை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. இதனை வாரம் இரண்டு அல்லது மூன்று முறை உணவில் சேர்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.


## சுற்றுச்சூழலைக் காக்கும் சோலார் புரட்சி! விண்வெளியில் இருந்து வரப்போகும் மின்சாரம்!

கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோல் விலைகள் நாளுக்கு நாள் கிடுகிடுவென உயர்ந்துகொண்டே செல்வதை நாம் பார்த்து வருகிறோம். மத்திய கிழக்கு நாடுகளில் நடக்கும் தொடர் பிரச்னைகளால் உலகமே மாற்று எரிசக்தியை நோக்கி மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக சூரிய ஒளியில் இருந்துமின்சாரம்தயாரிக்கும் சோலார் துறை அசுர வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா மாகாணத்தில் ஒரு மிகப்பெரிய அறிவியல் அற்புதம் நடந்துள்ளது. வானத்தில் பறக்கும் ஒரு விமானத்தில் இருந்து நேரடியாக பூமிக்கு லேசர் மூலம்மின்சாரத்தை அனுப்பி விஞ்ஞானிகள் ஒருமாபெரும் சாதனையை செய்துள்ளனர்.

### சுற்றுச்சூழலைக் காக்கும் சோலார் புரட்சி!

நிலக்கரி மற்றும் பெட்ரோலியப்பொருட்களின் பயன்பாட்டை நாம் முழுமையாக குறைத்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஒரு காலத்தில் ஒரு டெராவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய பல ஆண்டுகள் எடுத்துக்கொண்ட சோலார் துறை, கடந்த இரண்டு வருடங்களில் அந்த உற்பத்தியை அப்படியே இரண்டுமடங்காக உயர்த்தி அசத்தியுள்ளது.



புதிய வகை சிலிக்கான் சோலார் பேனல்கள் பழைய மாடல்களை விட 60% அதிக அளவிலான மின்சாரத்தை எந்த ஒரு இழப்பும் இல்லாமல் மிக எளிதாக உற்பத்தி செய்கின்றன. அதுமட்டுமில்லாமல், இந்த தூய்மையான எரிசக்தி துறை உலகம் முழுவதும் படிம எரிபொருட்களை விட ஐந்து மடங்கு அதிகமான வேலைவாய்ப்புகளை அள்ளிக் கொடுத்துள்ளது. இந்தத் துறையை நம்பி பல கோடி குடும்பங்கள் நிம்மதியாக வாழ்ந்து வருகின்றன.

### வானத்தில் இருந்து பாயும் கரண்ட்!

ஓவர்வியூ எனர்ஜி (OVERVIEW ENERGY) என்ற ஒரு புதிய ஸ்டார்ட்அப் நிறுவனம் தான் இந்த பிரம்மாண்டமான சோதனையைவெற்றிகரமாக செய்து முடித்துள்ளது. அவர்கள் ஒரு செஸ்னா ரக விமானத்தில் பிரத்யேகமான லேசர் கருவிகளை பொருத்தி வானில் பறக்கவிட்டார்கள்.

அந்த விமானம் சுமார் 16000 அடி உயரத்தில் பறந்தபடியே, பூமியில் உள்ள சாதாரண சோலார் பேனல்களுக்கு லேசர் மூலமாக மின்சாரத்தை நேரடியாக அனுப்பி ஒரு மாபெரும் உலக சாதனை படைத்துள்ளது. நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு பொருளில் இருந்து இப்படி மனிதர்களின் கண்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாத கதிர்கள் மூலமாக கரண்டை அனுப்புவது உலக வரலாற்றிலேயே இதுதான் முதல் முறை.

### விண்வெளியில் இருந்து வரப்போகும் மின்சாரம்!

இந்த சோதனை வெற்றியடைந்ததை தொடர்ந்து, அடுத்த கட்டமாக குறைந்த புவி சுற்றுப்பாதையில் இருந்தே நேரடியாக பூமிக்கு மின்சாரத்தை அனுப்பும் வேலைகள் மும்முரமாக நடந்துவருகின்றன. பூமியை விடவிண்வெளியில்சூரியஒளி பலமடங்கு வலிமையாகவும் எந்த தடையுமின்றியும் கிடைக்கும். இதற்கு முன்பு கால்டெக் பல்கலைக்கழகம் மைக்ரோவேவ் அலைகள் மூலம் ஆற்றலை கடத்தும் சோதனையை செய்தது.

ஆனால் இந்த புதிய ஆப்டிகல் லேசர் தொழில்நுட்பம் அதைவிட மிக சிறப்பானதாக கருதப்படுகிறது. இதை இன்னும் மேம்படுத்தி அதிக அடர்த்தி கொண்ட கதிர்களாக மாற்றினால், 2030-ம் ஆண்டுக்குள் மெகாவாட் அளவிலும், அதன்பிறகு கிகாவாட் அளவிலும் மின்சாரத்தை நாம் நேரடியாகப் பெறமுடியும்.

இதுவரை நாம் பூமிக்கு அடியில் இருக்கும் எரிபொருளை தேடித்தான் பல நூறு ஆண்டுகளாக ஓடிக் கொண்டிருந்தோம். ஆனால் நமது எதிர்காலமும் அதற்கான தீர்வும் வானத்திற்கு மேலே விண்வெளியில் தான் ஒளிந்திருக்கிறது என்பதை இந்த புதிய கண்டுபிடிப்பு நமக்கு மிகத்தெளிவாக உணர்த்துகிறது.

இந்த தொழில்நுட்பம் மட்டும் முழுமையாக பயன்பாட்டிற்கு வந்துவிட்டால், உலகத்தின் தலையெழுத்தே முற்றிலுமாக மாறிவிடும். மனித குலத்தின் வளர்ச்சிக்கு இந்த விண்வெளி சோலார் திட்டம் ஒரு மிகப்பெரிய வரமாக அமையப் போகிறது என்பது மட்டும் உறுதி.

# மாத்தியோசி

நில்லுடா,,,எங்கேப்போய் ஊர் சுத்திட்டு வர்றே,,,? என அம்மா கேட்டதும் ராஜாவுக்கு கோபம் வந்தது"நான் எங்கேம்மா போகப்போறேன்,,,முத்து வீட்டுக்குதான் போனேன்,,,"
"டேய் பரதேசி எத்தன தடவை சொல்றது அவன் மோசமானவன் அவன் கூட சேராதேன்னு,,"
"அம்மா,,,பொறக்கும்போது யாரும் மோசமா பொறக்குறதில்ல இந்த சமுகம்தான் அப்படி மாத்றது அவனை திருத்தமுடியும்மா,,,
அவன் ரொம்ப நல்லவன்,,,"
"நீ என்ன சொன்னாலும் அவனை திருத்தமுடியாது நாய் வாலை நிமிர்த்தமுடியாது"
"அம்மா ஒருத்தன் திருடப்போறான்னு வச்சுக்கோ உடனே அவன்கிட்ட திருடுறது தப்புன்னு சொன்னா கேட்கமாட்
டான் அவன்கூடப்போயி அதிலுள்ள நல்லது கெட்டதை
எல்லாம் சொல்லி புரிய வைக்கனும் அப்பதான் அவன் திருந்துவான்,,"
"அடாப்போடா,,பாலுடன் தண்ணீர் சேர்ந்தால் பாலுன்னுதான் தோனும் பூவுடன் சேர்ந்த நாரும் மணம்பெறும் இதெல்லாம் உனக்கு தெரியாது,,, நாயுருவி செடிப்பக்கம் நீ போனின்னா எத்தனை கவனமாக போனாலும் ஒன்னுரெண்டு நம்ம மேல ஒட்டாம விடாது அது மாதரிதான் உன் சேர்க்கையும் புரிஞ்சுக்கோ,,,

"அம்மா,,,நீ சொல்லறப்படியே வெச்சிக்கிட்டாக்கூட நான் நல்லவன்னு நம்புறீயே அப்படின்னா இந்த நல்லவன்கூட
சேர்ந்தா  அந்த கெட்டவன் ஏன் நல்லவனா மாறமாட்டான்னு நீ நினைக்கிறே,,,?"

மகன் பேசியதை உணர்ந்தவளாய் புன்னகையோடு அவன் தலையை கோதினாள்
பார்வதி,,.

**-நாகை ஆசைத்தம்பி**
கோவை



# "காதுகளை அடைத்தவள்"



“பொம்பளையாப் பொறந்திட்டு ஆட்டோ ஓட்டப் போறாளாம்…!”
“அடிப்பாவிப் பொண்ணே… உனக்குப் புத்திகித்தி கெட்டுப் போச்சா?"
"ஹூம்...இன்னிக்கு உலகமே தலைகீழா போயிடுச்சு... கலிகாலம்... கலிகாலம்!”
“வீட்டுல உட்கார முடியலையாக்கும் இவளுக்கு?”
அந்தத் தெருவில் தினமும் ஒலிக்கும் வார்த்தைகள் இவை. விஷயம் வேறொன்றுமில்லை... ரூபிணி அந்த வேலை இந்த வேலை என எல்லா வேலைகளையும் பார்த்து விட்டு கடைசியில் பெண் ஆட்டோ ஓட்டுனராகி விட்டாள். அதுக்குத்தான் இத்தனை வசவுகள்.
காலை எழுந்ததும் ஆட்டோவைத் துடைத்து, இன்ஜினை ஸ்டார்ட் செய்து பார்ப்பாள். அப்போது ஆட்டோ சத்தத்தோடு சேர்ந்து அக்கம் பக்கத்தாரின் நக்கல் சத்தமும் எழும். சிலர் சிரிப்பார்கள். சிலர் கேலி செய்வார்கள். ஆனால் ரூபிணி ஒருபோதும் அவர்களுக்கு பதில் சொல்ல மாட்டாள்.
ஒரு நாள் அவள் அம்மா கூட கேட்டாள்.
"ஏம்மா ரூபி... இவங்கெல்லாம் இவ்வளவு பேசுறாங்க... உனக்கு கோபமே வரலையா?”
ரூபிணி அமைதியாகச் சிரித்தாள். "அம்மா... நாலு பேர் வாயை மூட முயற்சிச்சா வாழ்க்கையே போயிடும்... அதனால நான் என் காதுகளை மூடிக்கிட்டேன்!"
தினமும் குழந்தைகளை பள்ளிக்குக் கூட்டிச் செல்வாள். மருத்துவமனைக்கு முதியவர்களை அழைத்துச் செல்வாள். மழையோ வெய்யிலோ பயணிகளை உரிய நேரத்தில் கொண்டு சேர்ப்பாள்.
மெல்ல மெல்ல ஊரில் ஒரு பேச்சு பரவியது.
"அந்த ரூபிணிப் பொண்ணு... நல்லாவே ஆட்டோ ஓட்டுவாளாம்..."
“நம்பிக்கையோட ஏறிப் போகலாமாம்...”
ஒரு மாலை கடும் மழை. பஸ்கள் வரவில்லை. சாலையில் பலர் காத்திருந்தனர். அந்த கூட்டத்தில் ரூபிணியைத் தொடத் கேலி செய்த அக்கம் பக்கத்தார் சிலரும் இருந்தனர்.
அப்போது ரூபிணியின் ஆட்டோ வந்து நின்றது.
"ம்..வாங்க... வந்து ஏறுங்க"

ஒரு நிமிடம் அவர்கள் தயங்கினர்.
பிறகு ஒருத்தி வெட்கத்தோடு கேட்டாள்.
"எங்க மேலே கோபம்"
ரூபிணி சிரித்தாள்.
"துளியும் இல்லை ஏறுங்க...”
அவர்கள் அமைதியாக ஏறினர். முன்பு கிண்டல் செய்த அதே வாய்கள் இப்போது மௌனத்தில் கிடந்தன.
அந்த நாள் முதல் அந்தத் தெருவில் கேலி இல்லை. கிண்டலில்லை. ஏனென்றால் ரூபிணி, நாலு பேரின் வாயை மூடவில்லை. அதற்கு பதிலாகத் தன் காதுகளை மூடிக் கொண்டாள்
அதனால்தான் அவளைக் கிண்டல் செய்தல் ஆட்கள் அவளுக்கு பயணிகளாயினர்.




**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# அகத்தியனின் பயணம் 14



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

## பாராட்டில் மறைந்துள்ள சூட்சமம்



“சி. சி... அப்படிலாம் நடக்காதுடி. நல்ல மனுஷன். கண்டிப்பா உன் அழகுல மயங்கி இருப்பார். உன்னப் பத்தி நிறைய யோசித்து இருப்பார். உன்னுடைய சூழலப் பத்தி சொல்லியிருக்கேன். நல்ல முடிவு எடுப்பார். பயப்படாத. நான் இருக்கேன். போராடுவோம்” என்று நம்பிக்கையூட்டினாள் எழிலழகி.

எழிலழகி சொல்வதைக் கேட்ட இசையழகி, சின்னதாய் சிரித்து, அவள் முகத்தைப் பார்த்தாள்

அலுவலகத்திற்குள் அனைவரும் வந்து சேர்ந்தனர். இசையழகிக்கும் எழிலழகிக்கும் நேற்றிருந்த மகிழ்ச்சி இன்று இல்லை. வேலை செய்யும் இடம், அலுவலகம் நெருங்க நெருங்க மகிழ்ச்சி  காணாமல் போய்விட்டது. மனதிற்குள் இறுக்கமும் பயமும் இருந்தது.

அகத்தியன் தனது இருக்கையில் உட்கார்ந்து அவனுக்குண்டான வேலையைச் செய்துகொண்டிருந்தான்

எழிலழகியும் இசையழகியும் உள்ளே நுழைந்தார்கள். எழிலழகி மட்டும்  “சார் வணக்கம்” என்று சிரித்துக்கொண்டே சொன்னாள்.

அகத்தியன் கண்டும் காணாததுபோல் “வணக்கம்” என்று சொல்லிவிட்டு மேசையின் மீதுள்ள கோப்புகளைக் கவனிக்கத்தொடங்கினான்.

மெல்ல திரும்பிப் பார்த்த எழிலழகி சூழலைச் சரியாகப் புரிந்துகொண்டு, எழிலழகியைத் தொடர்ந்து இசையழகியும் பின்தொடர்ந்தாள்.

இருவரின் நடையையும், முகபாவணையையும் பார்த்த மற்றவர்களின் பார்வை இன்று மாறுபட்டேயிருந்தது.

ஒவ்வொருவரும் எழிலழகியையும் இசையழகியையும் கண்கள் கொத்திக் கொள்வதுபோல் பார்த்தார்கள். அதுவே எழிலழகிக்கும் இசையழகிக்கும் ஒருமாதிரியாக இருந்தது.

நேற்று இருந்த கலகலப்பு மகிழ்ச்சியும் இன்று அலுவலகத்தில் இல்லை. இங்கும் அங்குமாகச் சுழன்று பம்பரம்போல் சுற்றிக்கொண்டிருந்த அகத்தியன், ஒரே இடத்தில் சுருங்கி போய்விட்டான். அனைவரிடம் பேசிக்கொண்டு ஆலோசனைகளை வழங்கிக்கொண்டிருந்தவன், இன்று அமைதியாகிப்போனான். ஒவ்வொரு சொல்லையும் சிரிப்பாக மாற்றிக் கொண்டிருந்த எழிலழகி மௌனமானால். இயல்பாய் இருந்த இசையழகி இருக்கமாய்க் காணப்பட்டாள்.

அமைதியாக வேலை செய்து கொண்டிருந்த மற்றவர்கள் அனைவருமே இன்று என்ன நடந்தது என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டு, மௌனமாய் அவரவர்களுடைய வேலையைச் செய்யத் தொடங்கினார்கள்.

இயக்குனர் அறையிலிருந்து உதவியாளர் ஓடி வந்தார்.”ஐயா. அகத்தியன் சார். மேடம் உங்கள கூப்பிடுறாங்க” என்று அழைத்தவுடன், உட்கார்ந்திருந்தவன் கோப்புகள் அனைத்தையும் சரி செய்து, மூடி வைத்துவிட்டு, மேடம் உள்ள இடத்தை நோக்கி நடந்தான்.

“வணக்கம் மேடம்” என்றான் அகத்தியன்.

“ வாங்க அகத்தியன். சிறப்பா இருக்கு. எல்லாமே சரியா செய்றாங்க. நம்ம இலக்க நோக்கிப் போயிட்டே இருக்கோம். நீங்க சேர்ந்த மறாவது வாரத்திலேயே, உங்க மேல எனக்கு ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை வந்திடுச்சு. இதச்சொல்லத்தான் உங்கள வரச் சொன்னன்” என்று பேச்சை தொடர்ந்தார்.

முதல் சந்திப்பிலேயே தனக்குள் இருக்கின்ற எண்ணங்களை அப்படியே கொட்டுவது சரியாக இருக்காது என்று உணர்ந்த இயக்குனர், அகத்தியனின் வேலை சம்பந்தமான பாராட்டுதலை முதலில் பதிவு செய்தார்.

பாராட்டுக்கு மயங்காதவர்கள் யாரும் இருக்க முடியாது என்பதற்கு அகத்தியனும் விதிவிலக்கல்ல. அவன் உச்சு முதல் உள்ளங்கால் வரை மகிழ்ச்சியில் துள்ளி குதித்தது.

முகம் மலர்ச்சி அடைந்தது. உதட்டில் சிரிப்பு வெளிப்பட்டது. “ நன்றி மேடம்” என்று பதில் கூறியவிட்டு அமைதியாக இருந்தான்.

“அது மட்டும் இல்லை அகத்தியன், நான் உன் கூட நிறைய கருத்துக்களை அடிக்கடி பகிர்ந்து கொள்வேன். அதற்கு அடிக்கடி உங்களை அழைப்பேன். நீங்க வரணும்” என்று புதிர் போல சில சொற்களை கொட்டினாள்.

அகத்தியனோடு சம்பந்தமான பேச்சுதான் என்றாலும் தற்போது பேசக்கூடிய பேச்சாக அது தோன்றவில்லை. இருந்தாலும் அதைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தார். “ சரி நீங்க தங்கி இருக்கிற அறைகள்  எப்படி இருக்கு ? உங்களுக்கு இந்த இடம் புடிச்சிருக்கா ? சாப்பாடு எப்படி இருக்கு ? அதைப் பத்தி நீங்க எதுவுமே எனக்கு சொல்லலையே, அது சொன்னாதானே எனக்கு புரியும்.  அடுத்தது உங்களுக்கு நான் என்ன செய்யணும்னு தெரியும்” என்று அன்பாக விசாரித்தார் இயக்குனர்.

“ அனைத்தும் சரியா இருக்கு மேடம்” என அகத்தியன் பதைல் சொல்ல, காவலாளி கதவைத் தட்டிவிட்டு வெளியே நின்றான்.

“வாப்பா” என அழைத்தாள்.

“ அம்மா வெளியில உங்களை யாரோ பாக்குறதுக்காக வெயிட் பண்ணிட்டு இருக்காங்க. முக்கியமான வேலையாம்” என்றான்.

“ சர் அகத்தியன், முக்கியமான விஷியத்த பேசனுமுன்னு நெனச்சன். அது இப்ப முடியாது. சரி” என அமைதியார் இயக்குநர்.

“ நா வரங்க மேடம்” என வெளியே வந்தான் அகத்தியன்.

(தொடரும்)

# பங்குனி மாத சிறப்புகள்



சூரியன் மீன ராசியில் சஞ்சரிக்கும் மாதமே பங்குனி மாதம். இது வருடத்தின் 12 வது மாதமாக வருகிறது. மீனமாதம் என்றும் அழைக்கப்படும். இந்த மாதம் அனைத்து சுப காரியங்களும் செய்ய உகந்த மாதம். கிரகப்பிரவேசம் மட்டும் செய்வதற்கு உகந்ததில்லை. இந்த மாதத்தில் வரும் உத்திர நட்சத்திரம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இது "மங்கலங்கள் நிறைந்த மாதம்" என்றும் தெய்வத்திருமணங்கள் நடைபெறும் "திருமண மாதம்" என்றும் சிறப்பிக்கப்படுகிறது. தெய்வங்களின் திருமணங்கள் நடந்ததாகச் சொல்லப்படும் நாள். சிவன்- பார்வதி, முருகன்- தெய்வானை, இராமர் -சீதை, ஆண்டாள்- ரங்க மன்னார் போன்ற தெய்வங்களின் திருமணங்கள் பங்குனி உத்திரத்தில் நடந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஸ்ரீரங்கத்தில் அன்று ஒரு நாள் மட்டும் ரங்கநாதரும், ரங்கநாயகித் தாயாரும் சேர்த்தி சேவையில், பங்குனி உத்திர மண்டபத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்கள். அன்று பெருமாள் தாயார் முன்பு பகவத் இராமானுஜர் அருளிய கத்ய திரயம் சேவிக்கப்படும்.

முருகன் கோவில்களில் முருகனுக்கும் தெய்வானைக்கும் திருமணம் நடைபெறும். எண்ணற்ற பலன்களை தரும் விரதங்களில் ஒன்று பங்குனி உத்திர விரதம் இதை கல்யாண விரதம் என்றும் திருமண விரதம் என்றும் கூறுவார்கள். உத்திர நட்சத்திரத்தின் அதிபதி சூரியன், அதே நாளில் பௌர்ணமி நிலவு பொருந்தும் போது சூரியன், சந்திரன் இருவராலும் சிறப்பு பெற்ற நாளாகிறது. எனவே இந்நாளில் விரதம் இருப்பது சிறப்பு. அன்று புனித நீர் நிலைகளில் நீராடுவது மிக்க நன்மையை தரும். பங்குனி மாதப் பௌர்ணமி நிலவில் களங்கம் இல்லாமல் முழுக் இலைகளுடன் காட்சியளித்து நிம்மதியைத் தரும் என்று நம்பப்படுகிறது.

பங்குனி மாதத்தில் வரும் யுகாதிப் பண்டிகை அதாவது அமாவாசைக்கு மறுநாள் பிரதமையன்று யுகாதிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. அன்று ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. மகாராஷ்டிரா மக்கள் இதனை குடிபட்பா என்றும் சிந்தி மக்கள் சேர்த்திசந்த் எனவும் கொண்டாடுகின்றனர். யுகாதி என்கிற சமஸ்கிருத சொல்லுக்கு புதிய ஆண்டின் துவக்கம் என்பது பொருள். இது சைத்ர மாதத்தின் முதல் வசந்த காலத்தின் சிறப்பைக் குறிக்கிறது. அன்று வைஷ்ணவ கோவில்களில் பஞ்சாங்கம் வாசிக்கப்படும்.

பங்குனி மாதத்தில் வரும் வளர்பிறை ஏகாதசிக்கு ஆமலகி என்று பெயர். அன்று மஹாலட்சுமியின் அம்சமான நெல்லி மரத்தின் அடியில் பூஜைகள் செய்து வழிபடுவதால் இதற்கு ஆமலகி ஏகாதசி என்ற பெயர் ஏற்பட்டது. ஆமலகி ஏகாதசியன்று விரதம் இருந்து திருமாலை வழிபட்டால் கோதானம் செய்த பலன் கிடைக்கும். நினைத்த காரியங்கள் நிறைவேறும்.

பங்குனி மாதத்தில் வரும் தேய்பிறை ஏகாதசி விஜயா ஏகாதசி என்று அழைக்கப்படுகிறது. விஜயா ஏகாதசி விரதம் கடைபிடிப்பவர்களுக்கு எடுத்த காரியங்கள் தடையில்லாமல் நடக்கும் எதிரிகளை வென்று வெற்றி கிடைக்கும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் இந்நாளில் துளசி மாலை சார்த்தி பெருமாளை வழிபடுவது மகத்தான பலன்களை வழங்கும். இம்மாதத்தில் ஸ்ரீராமநவமி பாரதமெங்கும் கொண்டாடப்படுகிறது. இராமர் பிறந்தது பங்குனி மாத வளர்பிறை நவமியும், புனர்பூச நட்சத்திரமும் கூடிய நன்னாளில். ஸ்ரீமன் நாராயணனின் 10 அவதாரங்களில் ராமாவதாரமும் ஒன்று. இவ்வுலகில் மனிதனாகப் பிறந்து எப்படி வாழ வேண்டும் என்று மக்களுக்கு வாழ்ந்து காட்டியவர். விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் பார்வதி சிவபெருமானிடம்," எளிய மக்கள் சஹஸ்ரநாமம் முழுவதையும் சொன்ன பலன் கிடைக்க எந்த நாமத்தைச் சொல்ல வேண்டும்?" என்று கேட்டபோது, சிவபெருமான் "ராம நாமத்தைச் சொன்னால் மகாவிஷ்ணுவின் ஆயிரம் நாமங்கள் சொன்ன பலன் கிடைக்கும்" என்று கூறினார். அவ்வளவு பெருமை வாய்ந்தது ராம நாமம். ராமனின் கதையை கேட்பதும் சொல்வதும் மிகச் சிறப்பு. ராம நாமம் எங்கெல்லாம் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் ஆஞ்சநேயர் பிரத்யக்ஷமாகி பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

இம்மாதத்தில் செய்யப்படும் சிறு சிறு தானங்கள் கூட ஆயிரம் பசுக்களை தானம் செய்த புண்ணியத்தை தரும் என்று புராணங்கள் கூறுகின்றன. மேலும் இதன் மூலம் வீட்டில் ஐஸ்வர்யம் பெருகும் என்பது நம்பிக்கை.

மாசியும் பங்குனியும் கூடும் நேரத்தில் பெண்கள் காரடையான் நோன்பு அனுஷ்டிப்பார்கள். இது "சத்தியவான் சாவித்திரி நோன்பு" என்று கூறப்படும். சாவித்திரி தனது கணவரான சத்தியவாணை எமனிடம் இருந்து மீட்டு வந்த நாள். எனவே கணவரின் நீண்ட ஆயுளுக்காகப் பெண்கள் நோன்பு இருப்பார்கள்.

இத்தனை சிறப்பு வாய்ந்த பங்குனி மாதத்தில் வரும் விரதங்களைக் கடைபிடித்து வாழ்வில் அனைத்து நலன்களையும் பெறுவோம்



எழுத்தாளர்
-அலமேலு ரங்கராஜன்
ஸ்ரீவில்லிப்புத்தூர்

## தினம் ஒரு தலைவர்கள்

# கிட்டூர் ராணி சென்னம்மா வரலாறு

1961 ஆம் ஆண்டு திரைப்படத்திற்கு, கிட்டூர் சென்னம்மா (திரைப்படம்) ஐப் பார்க்கவும்.
கிட்டூர் ராணி சென்னம்மா

பெங்களூருவில் உள்ள ராணி சென்னம்மாவின் சிலை
பிறந்தது சென்னம்மா
14 நவம்பர் 1778
காகதி, பெலகாவி மாவட்டம் , இன்றைய கர்நாடகா , இந்தியா
இறந்தார் 21 பிப்ரவரி 1829 (வயது 50)
பெய்ல்ஹோங்கல் , பம்பாய் மாகாணம் , கம்பெனி ராஜ்
தேசியம் இந்தியன்
மற்ற பெயர்கள்ராணி சென்னம்மா, கிட்டூர் ராணி சென்னம்மா
பிரபலமானது பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிரான கிளர்ச்சி

கிட்டூர் சென்னம்மா (14 நவம்பர் 1778 - 21 பிப்ரவரி 1829) இன்றைய கர்நாடகாவில் உள்ள ஒரு முன்னாள் சுதேச மாநிலமான கிட்டூரின் இந்திய ராணி ஆவார் . தனது ஆதிக்கத்தின் மீது கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியில், பரமண்டலத்தை மீறி , பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக ஆயுதமேந்திய எதிர்ப்பை அவர் வழிநடத்தினார் . முதல் கிளர்ச்சியில் கம்பெனியை தோற்கடித்தார், ஆனால் இரண்டாவது கிளர்ச்சிக்குப் பிறகு போர்க் கைதியாக இறந்தார். பிரிட்டிஷ் காலனித்துவத்திற்கு எதிராக கிட்டூர் படைகளை வழிநடத்திய முதல் மற்றும் சில பெண் ஆட்சியாளர்களில் ஒருவராக , கர்நாடகாவில் ஒரு நாட்டுப்புற கதாநாயகியாக அவர் தொடர்ந்து நினைவுகூரப்படுகிறார் , அவர் இந்திய சுதந்திர இயக்கத்தின் ஒரு முக்கிய அடையாளமாகவும் உள்ளார்

கிட்டூர் கோட்டையில் உள்ள கிட்டூர் சென்னம்மாவின் அரச கொடிமரம்

ஆரம்ப கால வாழ்க்கை
கிட்டூர் சென்னம்மா, இந்தியாவின் கர்நாடகாவின் தற்போதைய பெலகாவி மாவட்டத்தில் உள்ள ககாதி என்ற சிறிய கிராமத்தில் 1778 நவம்பர் 14 அன்று பிறந்தார் . ககாதி ஒரு சிறிய தேசகட் (ஒரு சிறிய சமஸ்தானம்). சென்னம்மாவின் தந்தை துலப்ப தேசாய், அவரது தாயார் பெயர் பத்மாவதி. அவர் லிங்காயத் சமூகத்தைச் சேர்ந்தவர், இளம் வயதிலிருந்தே குதிரையேற்றம், வாள் சண்டை மற்றும் வில்வித்தை ஆகியவற்றில் பயிற்சி பெற்றார். 9 வயதிலிருந்தே தேசாய் குடும்பத்தைச் சேர்ந்த ராஜா மல்லசர்ஜாவை 15 வயதில் மணந்தார், ஆங்கிலேயர்களுக்கு எதிரான மோதல் சென்னம்மாவின் கணவர் 1816 இல் இறந்தார், அவருக்கு ஒரு மகனும் நிலையற்ற தன்மை கொண்ட ஒரு மாநிலமும் பிறந்தன. இதைத் தொடர்ந்து 1824 இல் அவரது மகன் இறந்தார். ராணி சென்னம்மாவுக்கு கிட்டூர் மாநிலமும், ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரத்தைப் பேணுவதும் ஒரு கடினமான பணியாக இருந்தது.

அவரது கணவர் மற்றும் மகனின் மரணத்தைத் தொடர்ந்து, ராணி சென்னம்மா 1824 ஆம் ஆண்டு சிவலிங்கப்பாவை தத்தெடுத்து அரியணைக்கு வாரிசாக ஆக்கினார்.

இது கிழக்கிந்திய நிறுவனத்தை எரிச்சலடையச் செய்தது, அவர்கள் சிவலிங்கப்பாவை வெளியேற்ற உத்தரவிட்டனர். கிட்டூர் மாநிலம் தார்வாட் கலெக்டர் அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் வந்தது, அதில் திரு . சேப்ளின் கமிஷனராக இருந்தார், இருவரும் ரீஜண்டின் புதிய ஆட்சியை அங்கீகரிக்கவில்லை , மேலும் கிட்டூரை பிரிட்டிஷ் கட்டுப்பாட்டை ஏற்குமாறு அறிவித்தனர்.

இது 1848 ஆம் ஆண்டு முதல் சுதந்திர இந்திய மாநிலங்களை இணைப்பதற்காக இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த லார்ட் டல்ஹவுசி அறிமுகப்படுத்திய பிற்காலக் கோட்பாட்டின் முன்னோடியாகக் கருதப்படுகிறது , இது ஒரு சுதந்திர அரசின் ஆட்சியாளர் குழந்தை இல்லாமல் இறந்தால், மாநிலத்தை ஆளும் உரிமை மேலாதிக்கத்திற்குத் திரும்பியது அல்லது "இழந்தது" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கோட்பாடாகும் .



1823 ஆம் ஆண்டில், ராணி சென்னம்மா தனது வழக்கை வாதிட்டு பம்பாய் மாகாணத்தின் லெப்டினன்ட்-கவர்னர் மவுண்ட்ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டோனுக்கு ஒரு கடிதம் அனுப்பினார் , ஆனால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது, போர் வெடித்தது. போர் வெடித்தபோது சுமார் 1.5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள கிட்டூர் கருவூலம் மற்றும் கிரீட நகைகளைச் சுற்றி ஆங்கிலேயர்கள் ஒரு காவலாளி குழுவை நிறுத்தினர் . போரை எதிர்த்துப் போராடுவதற்காக அவர்கள் 20,797 ஆண்களையும் 437 துப்பாக்கிகளையும் சேகரித்தனர், முக்கியமாக மெட்ராஸ் பூர்வீக குதிரை பீரங்கியின் மூன்றாவது படையிலிருந்து. முதல் சுற்றுப் போரில், அக்டோபர் 1824 இல், பிரிட்டிஷ் படைகள் பெருமளவில் இழந்தன, மேலும் சேகரிப்பாளரும் அரசியல் முகவருமான செயிண்ட் ஜான் தாக்கரே போரில் கொல்லப்பட்டார். சென்னம்மாவின் லெப்டினன்ட் அமதூர் பாலப்பா, அவரது கொலைக்கும் பிரிட்டிஷ் படைகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கும் முக்கிய காரணமாக இருந்தார். சர் வால்டர் எலியட் மற்றும் திரு. ஸ்டீவன்சன் ஆகிய இரண்டு பிரிட்டிஷ் அதிகாரிகளும் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். போர் முடிவுக்கு வரும் என்று சேப்ளினுடன் ஒரு புரிதலுடன் ராணி சென்னம்மா அவர்களை விடுவித்தார், ஆனால் சேப்ளின் அதிக படைகளுடன் போரைத் தொடர்ந்தார். இரண்டாவது தாக்குதலின் போது, சோலாப்பூர் துணை ஆட்சியர் , தாமஸ் மன்ரோவின் மருமகன் முன்ரோ கொல்லப்பட்டார். ராணி சென்னம்மா தனது துணை அதிகாரி சங்கொல்லி ராயண்ணாவின் உதவியுடன் கடுமையாகப் போராடினார் , ஆனால் இறுதியில் கைது செய்யப்பட்டு பெய்ல்ஹோங்கல் கோட்டையில் சிறையில் அடைக்கப்பட்டார் , அங்கு அவர் உடல்நலக் குறைவு காரணமாக பிப்ரவரி 21, 1829 அன்று இறந்தார்.

சங்கொல்லி ராயண்ணா 1829 வரை கெரில்லாப் போரை வீணாகத் தொடர்ந்தார், அவர் பிடிபடும் வரை. ராயண்ணா தத்தெடுக்கப்பட்ட சிறுவன் சிவலிங்கப்பாவை கிட்டூரின் ஆட்சியாளராக நியமிக்க விரும்பினார், ஆனால் ராயண்ணா பிடிபட்டு தூக்கிலிடப்பட்டார். சிவலிங்கப்பாவும் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். சென்னம்மாவின் மரபு மற்றும் முதல் வெற்றி இன்னும் கிட்டூரில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 22-24 அன்று நடைபெறும் கிட்டூர் உத்சவத்தின் போது நினைவுகூரப்படுகிறது .







திரையுலகின் மிகவும் மதிப்புமிக்க ஒன்றாக ஆஸ்கார் அகாடமி விருதுகள் இருக்கின்றன. 98 வது ஆஸ்கார் விருதுகள் விழா அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்றது.

இந்நிலையில், ஆஸ்கார் விருது விழாவை தொகுத்து வழங்கிய ஸ்பெயின் நடிகர் ஜாவியர் பார்டம், ""NO TO WAR AND FREE PALESTINE" என்று கூறினார். இவரது இந்த பேச்சுக்கு அரங்கம் அதிர கைத்தட்டல் கிடைத்தது. அப்போது அவருடன் நின்றிருந்த நடிகை ப்ரியங்கா சோப்ரா புன்முறுவல் செய்து அவரது பேச்சை வரவேற்றார்.

அக்டோபர் 7, 2024 இல் இஸ்ரேல் மீது பாலஸ்தீன கிளர்ச்சி அமைப்பான ஹமாஸ் தாக்குதல் நடத்தியது. இதில் 1200 பேர் வரை கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து இஸ்ரேல் பாலஸ்தீன நகரங்களான காசா, ராபா உள்ளிட்ட நகரங்கள் மீது கடந்த 3 வருடங்களாக தாக்குதல் நடத்தி வந்தது. இதில் 70,000 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

கடந்த 2025 அக்டோபரில் அமெரிக்கா மத்தியஸ்தத்தில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இருப்பினும் போர் நிறுத்தத்தை மீறி அவ்வப்போது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## 4 Oscar விருதுகளை வென்று அசத்திய சின்னர்ஸ் திரைப்பட




பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட Sinners திரைப்படம் 4 ஆஸ்கார் விருதுகளை வென்று அசத்தியுள்ளது.

சிறந்த நடிகர் விருது மைக்கேல் பி. ஜோர்டனுக்கும் சிறந்த அசல் திரைக்கதை விருது இயக்குநர் ரயான் கூக்ளருக்கும் வழங்கப்பட்டது.

சிறந்த அசல் பாடல் பிரிவில் லுட்விக் கோரன்சன் தனது இரண்டாவது ஆஸ்கர் விருதைப் பெற்றார். சிறந்த ஒளிப்பதிவிற்கான ஆஸ்கர் விருதை ஆட்டம் டூரால்ட் அர்காபாவ் வென்றார். இதன்மூலம் சிறந்த ஒளிப்பதிவிற்கான ஆஸ்கர் விருதை வென்ற முதல் பெண் என்ற சாதனையை அவர் படைத்தார்.

## F1 திரைப்படத்திற்கு Oscar விருது அறிவிப்பு!



சிறந்த ஒலி அமைப்புக்கான ஆஸ்கர் விருதை F1 திரைப்படம் வென்றது.திரையுலகின் மிகவும் மதிப்புமிக்க ஒன்றாக ஆஸ்கார் அகாடமி விருதுகள் இருக்கின்றன.

98 வது ஆஸ்கார் விருதுகள் விழா 16 ஆம் தேதி நடைபெறவுள்ள அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது.
இந்நிலையில், சிறந்த ஒலி அமைப்புக்கான ஆஸ்கர் விருதை F1 திரைப்படம் வென்றது.

டாப் கன் மேவ்ரிக் படத்தை இயக்கிய ஜோசஃப் கொசின்ஸ்கி இயக்கத்தில் பிராட் பிட் நடிப்பில் வெளியான F1 படம் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றுது. இப்படம் உலகளவில் 3626 கோடிக்கும் மேல் வசூலித்து சாதனை படைத்தது.

## 3 Oscar விருதுகளை தட்டி சென்ற FRANKENSTEIN



FRANKENSTEIN திரைப்படம் 3 ஆஸ்கார் விருதுகளை வென்று அசத்தியுள்ளது. தயாரிப்பு வடிவமைப்பு, ஒப்பனை - சிகை அலங்காரம் மற்றும் ஆடை வடிவமைப்பு ஆகிய பிரிவுகளில் FRANKENSTEIN திரைப்படம் ஆஸ்கார் விருதுகளை தட்டிச் சென்றது.

திரைப்பட வரலாற்றில் சில படங்கள் காலத்தைக் கடந்து நிலைத்து நிற்கின்றன. அந்த வரிசையில் முக்கியமான இடத்தை Frankenstein திரைப்படம் பிடித்துள்ளது. விஞ்ஞானத்தின் எல்லைகளை மீறி மனிதன் உயிரற்ற உடல் பகுதிகளை ஒன்றிணைத்து உயிரை உருவாக்க முயற்சிக்கும் ஆபத்தான ஆசையை மையமாகக் கொண்டு உருவான இந்த படம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.



## சிறந்த Visual Effects பிரிவில் Oscar விருது வென்றது



திரையுலகின் மிகவும் மதிப்புமிக்க ஒன்றாக ஆஸ்கார் அகாடமி விருதுகள் இருக்கின்றன. 98 வது ஆஸ்கார் விருதுகள் விழா 16 ஆம் தேதி நடைபெறவுள்ள அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு ஆஸ்கார் நிகழ்ச்சியை இந்தியாவை சேர்ந்த பான் உலக நட்சத்திர நடிகை பிரியங்கா சோப்ரா தொகுத்து வழங்கி வருகிறார். ஹாலிவுட் பிரபலங்களான ராபர்ட் டவுனி ஜூனியர், வில் ஆர்னெட் ஆகியோருடன் இணைந்து பிரியங்கா மேடையைப் பகிர்ந்து கொண்டுள்ளார்

இந்நிலையில், சிறந்த Visual Effects பிரிவில் Avatar: Fire And Ash திரைப்படம். ஆஸ்கர் விருதை வென்றது

ஜேம்ஸ் காம்ரூன் இயக்கத்தில் 2009 ஆம் ஆண்டு வெளியான அவதார் படம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு பெரும் வெற்றியை பெற்று கிளாசிக் ஆனது. தொடர்ந்து கடந்த 2022 இல் அவதார் 2 ஆம் பாகமான தி வே ஆப் வாட்டர் வெளியாகி வெற்றி பெற்றது. இதை தொடர்ந்து கடந்தாண்டு வெளியான அவதார் ஃபயர் அண்ட் ஆஷ் பாகமும் பிரம்மாண்ட வெற்றியை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு ஆஸ்கார் நிகழ்ச்சியை இந்தியாவை சேர்ந்த பான் உலக நட்சத்திர நடிகை பிரியங்கா சோப்ரா தொகுத்து வழங்கி வருகிறார்.

திரையுலகின் மிகவும் மதிப்புமிக்க ஒன்றாக ஆஸ்கார் அகாடமி விருதுகள் இருக்கின்றன.

98 வது ஆஸ்கார் விருதுகள் விழா 16 ஆம் தேதி நடைபெறவுள்ள அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு ஆஸ்கார் நிகழ்ச்சியை இந்தியாவை சேர்ந்த பான் உலக நட்சத்திர நடிகை பிரியங்கா சோப்ரா தொகுத்து வழங்கி வருகிறார். ஹாலிவுட் பிரபலங்களான ராபர்ட் டவுனி ஜூனியர், வில் ஆர்னெட் ஆகியோருடன் இணைந்து பிரியங்கா மேடையைப் பகிர்ந்து கொண்டுள்ளார்

ஆஸ்கார் விருது வழங்கும் விழாவில் வெள்ளை நிற உடையில் நடிகை பிரியங்கா சோப்ரா வந்தது அனைவரையும் கவர்ந்தது.

ஆஸ்கார் விருதை பிரியங்கா தேர்வு தொகுத்து வழங்குவது இது இரண்டாவது முறையாகும். இதற்கு முன்பு 2016-ம் ஆண்டும் அவர் இந்த கௌரவத்தைப் பெற்றிருந்தார்.

பிரியங்கா சோப்ரா நடித்த The Bluff என்ற ஹாலிவுட் திரைப்படம் அண்மையில் வெளியாகி வரவேற்பை பெற்றது. இதற்கிடையே ராஜமௌலி மற்றும் மகேஷ் பாபு கூட்டணியில் உருவாகி வரும் 'வாரணாசி' திரைப்படத்தில் பிரியங்கா நடித்து வருகிறார்.

## முழு லிஸ்ட்

சிறந்த படம் - One Battle After Another
சிறந்த ஆவணப்படம் - Mr Nobody Against Putin
சிறந்த ஆவணப்பட குறும்படம் - All the Empty Rooms
சிறந்த விஷுவல் எஃபெக்ட்ஸ் - Avatar fire and ash
சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு - Frankenstein
சிறந்த ஒரிஜினல் திரைக்கதை - Sinners படத்திற்காக Ryan Coogler விருதை வென்றுள்ளார்.
சிறந்த தழுவல் திரைக்கதை - One Battle After Another படத்திற்காக Paul Thomas Anderson வென்றுள்ளார்.
சிறந்த துணை நடிகர் - One Battle After Another படத்திற்காக Sean Penn வென்றுள்ளார்.
சிறந்த நேரடி நடிப்பு குறும்படம் - The Singers மற்றும் Two people exchanging saliva
சிறந்த காஸ்டிங் - One Battle After Another படத்திற்காக Cassandra kulukundis வென்றுள்ளார்.
சிறந்த மேக்கப் மற்றும் ஹேர் ஸ்டைலிங் - Frankenstein
சிறந்த ஆடை வடிவமைப்பு - Frankenstein
சிறந்த அனிமேஷன் குறும்படம் - The girl who cried pearls
சிறந்த அனிமேஷன் திரைப்படம் - Kpop Demon hunters
சிறந்த துணை நடிகை - Weapons படத்திற்காக Amy Madigan இந்த விருதை வென்றுள்ளார்.
சிறந்த நடிகை - Hamnet திரைப்படத்திற்காக நடிகை Jessie Buckley இந்த விருதை வென்றுள்ளார்.
சிறந்த நடிகர் - Sinners படத்திற்காக Michael B. Jordan இந்த விருதை வென்றுள்ளார்.
சிறந்த இயக்குநர் - One Battle After Another படத்திற்காக Paul Thomas Anderson வென்றுள்ளார்.
சிறந்த ஒரிஜினல் பாடல் - Kpop Demon hunters படத்திலிருந்து 'Golden'.
சிறந்த சர்வேதேச படம் - Sentimental Value
சிறந்த ஒளிப்பதிவு - Sinners
சிறந்த எடிட்டிங் - One Battle After Another, சிறந்த சவுண்ட் - F1
சிறந்த ஒரிஜினல் ஸ்கோர் - Sinners

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட One Battle After Another திரைப்படம் 6 ஆஸ்கார் விருதுகளை வென்று அசத்தியுள்ளது.

சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குநர், துணை நடிகர் (ஷான் பென்), தழுவல் திரைக்கதை, படத்தொகுப்பு மற்றும் நடிகர்கள் தேர்வு ஆகிய 6 பிரிவுகளில் இப்படம் விருதுகளை குவித்துள்ளது.

98 வது ஆஸ்கார் விருதுகள் விழாவில் அதிக ஆஸ்கார் விருதுகளை வென்ற படம் என்ற சாதனையை படம் படைத்துள்ளது.

முன்னதாக வழங்கப்பட்ட கோல்டன் குளோப் விருந்துகளிலும் அதிக விருதுகளை வென்று One Battle After Another சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.









## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424




## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

## WANTED

Site Supervisor required for construction work in Ambattur



Contact:

8428872887

## keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

**INTERNSHIP & JOB OPPORTUNITIES**

**MSW & M.Sc Psychology - Freshers**

**Internship:**
- Clinical Training
- Counseling Practice
- Case Work

**Jobs:**
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com







தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**

Fresher/Exp Male Only

Qualification - ITI/Diplomo/B.E

**Final Quality Inspector**

Fresher / Exp - Male/Female

Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**

Fresher/ EXP Male only

Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090

Mr.Neelavanan : 9884 001 253

SALARY BASED ON EXPERIENCE




அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துனை

அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துனை



## ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்

ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.

தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்

மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro

81899 08040 / 93425 03572

harisudhan1968@gmail.com






## பாசம்

பாத்திரங்களில் இருந்த
பதார்த்தங்களைக்
கணிசமாகக் காலி செய்து
விட்டெழுந்து பத்து நிமிடம்
ஆனபின்தான்
நீ சாப்பிட்டியா
என்று
கேட்கத்
தோன்றுகிறது
அம்மாவை.



**கே. பி. ஜனார்த்தனன்**

---

நாளை வரும் நாளை வரும்
என்றெண்ணியே
நாட்களும் நகர்கின்றன
மாதங்கள் ஆயினும்
வருடங்கள் பல ஆனபோதும்
நினைக்கும் நாள்
வருவதில்லை அந்நாள்
வருவது எந்நாளோ?
இலவுக்கு காத்த கிளி
போலும் நம் வாழ்க்கை
காத்திருந்து காத்திருந்து
காலங்கள் போனபின்னும்
காத்திருந்து காத்திருந்து
காலங்கள் வராதா
என ஏங்கி தவித்து
காத்திருக்கும்
காலங்கள்
எத்தனையோ?
என்று
வரையோ?



**ஓம் குமார் P N**

---

## வாழ்வாங்கு வாழ வழிகள் !

அன்பு காட்டுங்கள் !
ஆசையைக்
குறைத்திடுங்கள் !
இனியசொல் பேசுங்கள் !
ஈன்றதாயைப் போற்றுங்கள் !
உதவி செய்யுங்கள் !
ஊர் போற்ற வாழுங்கள் !
எல்லோரையும் மதியுங்கள் !
ஏளனம் பேசாதீர்கள் !
ஐயம் தீர்த்திடுங்கள் !
ஒன்றுமையாக இருங்கள் !
ஓடி உழையுங்கள் !
ஔவை சொல்படி நடங்கள் !

**கவிஞர் இரா .இரவி !**

---



## வாழை!

அறுசீர் மண்டிலம்.

வாழை குலையை ஈன்றிடும்
வண்ணப் பழமும் தந்திடும்
வாழை விரும்பார் யாருளர்
வளமார் வாழை சீர்மையே!
வாழை மரமே வண்ணமே
வாழை இலையும் நன்மையே
வாழைத் தண்டும் உதவுமே
வாழை மருந்தாய்ப்பயன்படும்!

எல்லா உறுப்பும் பயன்படும்
ஏற்ற மிக்க வாழையே
இல்லா ஏழை மக்களின்
இனிய வாழை என்றுமே!
ஒல்லும் வகையில் வாழையை
ஒண்மை யாகக்காண்பமே
நல்ல பயனைத்தருவதால்
நாடி ஏழை உண்பரே!

**முனைவர் இராம.வேதநாயகம்.**

---



வாடகைக்கு விட்டவனும்
அவன்தான்..வாகாக
செய்தவனும் அவன்தான்.!
ஓடுகட்டி ஒழுகும் மழைநீரை..
உள்ளிறங்கா வண்ணம்
செய்தான் அவனே!

மண்ணெடுத்து தீயினிலே
சுட்டான்! மணல்கலந்து
சாந்துபூசி விட்டான்!
என்னுடைய வீடுயென்று
சொல்ல.. எடுத்தவனோ
மறைந்து நின்று நகைத்தான்!

வாஞ்சையுடன் ஆசையுடன்
நமக்கு.. வசிப்பதற்கு
வீடுஒன்று தந்து.. வாழும்வரை
வாழ்ந்துவிட்டு வாடா.! என
வாடகைக்கு நமக்கு அவனே
விட்டான்.!

ஒன்பதுவாய் ஓட்டைவைத்துக்
கட்டி..ஓடுவீடு ஒழுக
வைத்து ஆட்டம் அவன்
காட்டி! எனதுவீடு
என்று ஆசைவலையில்
தள்ளி மாட்டி! கட்டிடத்
தொழிலாளியாக காட்சித்
தந்தான் இறைவன்!

**வே.கல்யாண்குமார்**

---

## சமபாதியே சங்கீதம்...

என்னினிய இளைஞனே...
எல்லாம் முடியும் என்பவனே!
நீ இதயம் நிறைந்தவனா?
மூளை நிறைந்த வனா?
இரண்டும் நிறைந்தால்
எதார்த்தம் இடிக்கும்
இதயமும் மூளையும்
இரும்புத் தண்டவாளம் போல்
சமபாதிச் சமனில்
சந்திக்காத இணைப்பில்
பயணிக்கும் போதுதான்
சங்கடம் தவிர்த்த
சந்தோஷம் வாழ்வில்
சங்கீதமாய் இனிக்கும்
என்னினிய
இளைஞனே...
நேர்கொண்ட
பார்வை என்றால்
என்ன தெரியுமா
உனக்கு? நிஜத்தில்
எல்லாமும்
நேர்கோடாய் எண்ணு
அந்தப் பக்கம் இந்தப் பக்கம்
என்ற இருமுனை எல்லையும்
ஆபத்தின் அடையாளம்
இன்பத்தின் எதிர்வாசல்...
முரண்களின் மொத்த
மூட்டை... அது பாதி இது
பாதி என்ற இடைப்பாதை
தான் என்றும் சுகம் தரும்
சொர்க்க வாசல்... நடுவில்
நங்கூரம் பாய்ச்சும் இந்த
நல்லதொரு வித்தையை
நானிலத்தில் விதை...
வாழ்வில் என்றென்றும் நீ
முடிவுமுனை நாடி
நெருங்காமல் நடுநிலை
தளத்தில் நின்று
கொண்டே
நீடிக்கும் நிம்மதியில்
திளை!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

---

## புரிந்து நடந்து விடு

" காற்றடிக்கும் போது
தூற்றிக்கொள் மழை பெய்யும்
போது சேமித்து வை .... "

வெயில் அடிக்கும் போது காய
வைத்து விடு ...."

இளமை இருக்கும் போதே
பயன் படுத்திக்கொள் ..."

காலம் கனிந்து வரும் போதே
சாதித்துக்கொள் .... "

நேரம் கிடைக்கும் போதே
இயற்கையை பார்த்து
ரசித்துக்கொள் ...."

தேர்வு நெருங்கினால்
முழுமையாக கவனம்
செலுத்த கற்றுக்கொள் .... "

அன்பை பரிமாறி
ஆனந்தத்தை பருக
கற்றுக்கொள் ..."

வயது இளமையாக
இருந்தாலும் மனம் பக்குவம்
பெற கற்றுக்
கொள்....."

எல்லா
காலமும்
நேரமும்
நம்முடையது
என்பதை புரிந்து
நடந்துக்கொள் ..."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி

---



நீயே...வண்ணமயம்
தாகம் தணிக்குமோ?...
கானல் நீர்...

குளிர் மழை பொழியுமோ?..
ஓவியமேகம்.. வாசம்
வழங்குமோ?...
காகிதப் பூக்கள்...

நீயின்றி
செழிக்குமோ?...
கற்பனை..

உன்
நினைவின்றி
விடியுமோ?...
இரவுகள்..



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---


1. முட்டாள் பழிவாங்க
துடிப்பான் புத்திசாலி
மன்னித்து விடுவான்
அதி புத்திசாலி அந்த
இடத்திலிருந்து
விலகிவிடுவான்

2. சிறந்த ஒன்றை
தேர்ந்தெடுப்பது தவறு
இல்லை தவறான ஒன்றை
தேர்ந்தெடுப்பது தான் தவறு

3. என்னைப் பார் யோகம்
வரும் என்று என்னை
வளர்ப்பவனுக்கு வராத
யோகம் பார்ப்பவனுக்கு
மட்டும் எப்படி வரும் என்றது
கழுதை

4. கடன் கொடுத்தவனையும்
கண்ணீரைத்துடைத்தவனையும்
உன் வசந்த காலத்தில்
வரவேற்று கௌரவிக்க
வேண்டும்

5. உங்களுக்கு உதவ
மூளையை பயன்
படுத்துங்கள்
அடுத்தவருக்கு
உதவ உங்கள்
மனதை பயன்
படுத்துங்கள்



**நடேஷ்கன்னா**
கல்லிடைக்
குறிச்சி

---



## ஹைக்கூ !

வடிப்பார் கண்ணீர்
காந்தியடிகள் இருந்தால்
மதுக்கடைகள் !

மதுக்கோப்பை மோதல்
உணர்த்தியது பின்னால் வரும்
மோதலை !

மதுக்கோப்பை மோதி
சரிபார்த்தனர் அளவை !

நட்டநடுநிசியில் அல்ல
பட்டப்பகலில் நடக்க
முடியவில்லை பெண்கள் !

உண்டு ஏட்டில் எழுத்தில்
இல்லை நடைமுறையில்
பெண் விடுதலை !

போகப்பொருள் அல்ல
உயிரும் உணர்வும்
உள்ளவள் பெண் !

எண்ணி விடலாம்
விரல் விட்டு
புதுமைப்பெண்கள் !

அகிலம்முழுவதும்
ஆணாதிக்கத்தால்
அடிமைப்பெண்கள் !

பொதுவாக்குவோம்
இருபாலருக்கும்
சமையல் அறையை !

கோடை மழை
குதூகலத்தில் உழவன் !

ஒன்றுபட்டால் உறுதியாகும்
வெற்றி உணர்த்தியது
சல்லிக்கட்டு !

முடியவில்லை முத்தெடுக்க
முழுநேர அரசியல்வாதிகளால்
பகுதிநேர அரசியல் ?

ஆசையால் அழிந்தும்
வரவில்லை அறிவு
அரசியல்வாதிகளுக்கு !

உடன் பிறந்த நோயானது
ஊழல்அரசியல்வாதிகளுக்கு !

சடங்குகளில் ஒன்றானது
நிதிநிலை அறிக்கை !

ஏற்றமின்றி ஏமாற்றத்தில்
ஏழை மக்கள் !

உயிருக்கு உலை
வாகனம் ஓட்டுகையில்
அலைபேசியில் பேசுதல் !

பிறக்கையில் இருந்தளவே
இறுதியிலும் இருந்ததா ?
கர்ணனின் கவசம் !

பெட்ரோல் விலை ஏற ஏற
இறங்குகிறது
ஆள்வோரின் மதிப்பு !

**கவிஞர் இரா .இரவி !**

---

தேவதைகளுக்கு
பிடித்தமான கவிதை
எப்படி எழுதுவதென
இதுவரை அந்த
பாழாய் போன இதயத்திற்கு
தெரிவதே இல்லை.
தேவதைகளே கவிதையென
தேவதைகளுக்கு
எப்படி புரிய வைப்பது?!

என் உலகம் விசித்திரமானது
என் சோகங்களையும்,
கவலைகளையும்
இந்த வெற்று வார்த்தைகளா
உங்களிடம் பிரதிபலித்து
காட்டப் போகிறது.
மரணம் போலஅதுவும்
உங்களுக்கு புரியாமலே
போகட்டும்!




நான் கண்ணாடியில்
என்னை பார்ப்பதே இல்லை
உன்னைத் தவிர!
என் உலகத்தில் உன்னை
தவிர வேறெதுவுமில்லை
நான் உட்பட!

உலா வர வேண்டும்
நிலவான உன்னைச் சுற்றி!

விட்டு விடுவதாக
எண்ணமிருந்தால்
கொன்று விட்டுப் போ!


நீயில்லாத வாழ்வும்
தனிமையான இருளும்
ஒன்று தான்!



சூரியன்
வானில்
இருந்தும்
இருளில்
வாழ்வதாகவே
உணர்கிறேன்
நீயில்லாத
வாழ்வும் இருள் தானோ?!

**லி.நௌஷாத் கான்**

---




# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: கிரேஸியை கேளுங்கள் பாகம் –1
வெளியீடு: தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்
விலை : ₹140
தொடர்புக்கு : 95978 00452

கிரேஸி மோகன் நாடகத்தை கேஸட்ஸ் வடிவில் கேட்டு, பின்னர் கமல், ரஜினி படங்களில் இவர் திரைக்கு எழுதியதையும் ரசித்தவன்.

கல்கி இதழில் வந்த கேள்விகளுக்கு இவர் அளித்த பதில்களின் தொகுப்பே 2 பாகங்களாய்.... இதைப் பெற அலைபேசி எண் தந்து உதவிய என் இனிய நண்பர் திரு.ரவி தமிழ்வாணன் அவர்களுக்கு மிக்க நன்றி.படித்ததில் பிடித்தவை இங்கே: முழுமையான நித்திரை என்பது என்ன? நாலுபேர் தூக்கிப் போகும்போது வரும் தூக்கம்....! பின்ன என்ன சார்....சங்கு, தாரை -தப்பட்டை, ஒப்பாரி இத்தனை சத்தத்தையும் மீறி தூங்குகிறோம் என்றால், இதைவிட ஒரு ’ முழுமையான நித்திரை’ இருக்க முடியுமா....! தங்களின் குரு யார்? தற்சமயம் வேகாத வெய்யிலால் வேர்க்’ குரு....

**ஸ்ரீகாந்த் திருச்சி**

---

## ஜப்பானியர்கள் வைர நெஞ்சம் பெற்றவர்கள்

அணுகுண்டு போட்டார்கள்
புல் பூண்டு கருகியது
உயிர்கள் ஒழிந்தது
உயரம் குறைந்தது
உழைத்தார்கள் ஓய்வின்றி
உழைத்தார்கள் உலகின்
உச்சம் தொட்டார்கள் .

சுனாமி வந்தது
சும்மா புரட்டிப் போட்டது
அணு உலை வெடித்தது
ஆருயிர்கள் மடிந்தது
உழைப்பார்கள் ஓய்வின்றி
உழைப்பார்கள் உலகின்
உச்சம் மீண்டும்
தொடுவார்கள்.

விதியை நினைத்து
வீழ்ந்து கிடக்க மாட்டார்கள்
மதியைப் பயன்படுத்தி
மற்றட்ட வளர்ச்சிக்
காண்பார்கள் தோல்விக்குத்
துவளாத வைர நெஞ்சம்
பெற்றவர்கள்

சோகதிற்குச் சோர்ந்திடாத
உள்ளம் படைத்தவர்கள்

## ஸ்டீபன் ஹாக்கிங் உன்புகழ் நிலைக்கும் !

சாதனையாளர்களுக்க்கு
மரணம் என்றுமில்லை
சாதனைகளே உலகில் என்றும்
வாழ்விக்கும்!

புறத்தோற்றம் அழகில்லை
என்ற போதும் புவியே
பாராட்டியது அகத்தின்
அழகை !

உடல் ஒத்துழைக்க மறுத்திட்ட
போதும் ஓய்வின்றி உழைத்துச்
சாதனை புரிந்தவர்!



கடவுள் என்பது கற்பிக்கப்பட்ட
கற்பனை கடவுள் இல்லை
என்பதில் நம்பிக்கை
கொண்டவர்!

இங்கிலாந்து ஆக்ஸ்போர்டில்
பிறந்த ஆச்சரியம்
இனிய கேம்பிரிட்ஜ்
பேராசிரியப் பெருந்தகை!

அண்டத்தை ஆராய்ந்து
ஆய்வறிக்கைத் தந்தவர்
அகிலம் பாராட்டும்
பண்பினைப் பெற்றவர்!

வன்முறை எங்கு
நிகழ்ந்திட்டாலும் கண்டித்தவர்
வளமான உலகம் அமைந்திட
வழிவகை சொன்னவர்!

ஐன்ஸ்டின் பிறந்த தினத்தில்
சுவாசம் நிறுத்தியவர்
ஐன்ஸ்டின் அளவிற்கு உலகப்
புகழினைப் பெற்றவர்!

மருத்துவர்கள் குறித்த
வாழ்நாளோ இரண்டு
ஆண்டுகள் மாமனிதர்
வாழ்வு நீட்டித்ததோ
ஐம்பத்தி அய்ந்து
ஆண்டுகள்!

சக்கர நாற்காலியில்
சக்கரமாகச் சுழன்றவர்
சகலருக்கும் உழைப்பின்
உயர்வை உணர்த்தியவர்!

கணினியின் அருமையை
அகிலத்திற்கு அறிவித்தவர்
கண் அசைவால் கருத்துக்கள்
பல உரைத்தவர்!

தன்னம்பிக்கையின் சிகரமாக
வாழ்ந்து காட்டியவர்
தன்னம்பிக்கையின் சிறப்பை
வையகத்திற்கு தெரிவித்தவர்!

உடலை விட உயர்ந்தது மனம்
என நிரூபித்தவர்
உடல்நலமின்றியே உலக
சாதனை நிகழ்த்தியவர்!

திடகாத்திரமாக உள்ள
சோம்பேறிகள் பலருக்கு
தரணியில் உழைத்தால்
உயர்வென உணர்த்தியவர்!

வானம் வரை சென்று ரசித்து
மகிழ்ந்தவர் வானளாவிய
புகழினை ஈட்டி மகிழ்ந்தவர் !

விஞ்ஞானியாக மட்டுமல்ல
எழுத்தாளராகவும் சிறந்தவர்
விசித்திர மனிதனாக உலகில்
வலம் வந்தவர்!

சோம்பி விடாமல் சுறுசுறுப்பை
போதித்தவர் சுற்றம் வியந்திட
வியப்புகள் புரிந்தவர்!

நூற்றாண்டுகள்
கடந்தும் உன்புகழ்
நிலைக்கும்
நல்ல மனிதர்களுக்கு
என்றும் இல்லை
மரணம்!



**கவிஞர் இரா .இரவி**

---



## மிளகாய் கொண்டை :

மிளகாய் கொண்டை
மின்னுது கொஞ்சம்
பளபளக்கும் அங்கே
பச்சை வண்ணத்தில்
தலைக்குள் காரம்
தகிக்கும் உண்மை
தலைக்கு வெளியிலும்
இத்தனை காரமா?
அழகே எனினும்
அதற்கும் கோ(கா)ரமா ?

**வைரமணி , சென்னை**




1. மனிதன்
விசித்திரமானவன்
கடவுளைப் பார்க்க காசு
கொடுப்பான்பார்த்த
கடவுளுக்கும் காசு
கொடுப்பான்கொடுத்த
காசை வட்டியும் முதலுமாக
கடவுளிடமே திருப்பி
கேட்பான்

2. மன நிம்மதி வேண்டும்
எனறால் சில இடங்களில்
குருடாகவும் சில இடங்களில்
செவிடாகவும் பல
இடங்களில் ஊமையாகவும்
இருக்க வேண்டும்

3. எல்லா தானங்களும்
பிறரை வாழவைக்கும்
ஆனால் நிதானம்
மட்டும் தான்தன்னையும்
வாழவைத்து பிறரையும்
வாழ வக்கும்

4. எறும்புக்கு இங்கிலீஷ்
தெரியாவிட்டாலும் கியூ வில்
போகும்

மனிதனுக்கு இங்கிலீஷ்
தெரிந்தும்க்யூ வில் நிக்க
தெரியாது.



5. குத்தியது
முள் என
அழுதேன்
மிதித்தது
நான்
என்பதை மறந்து

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## "வியாபாரியும் குருவிக்கூடும்"

மரத்தைப் பார்த்தான்
மர வியாபாரி
கண்களில் நடமாடியது
ரூபாய் நோட்டுகள்!

அடிக்கட்டை அகலம்
கிளைகள் எடைகள்
லாபம் எனக்
கணக்குப் புத்தகமானான்!

கிளையின் மடி சுமந்த
மூச்சு விடும் உலகம்
தெரியாதே போனது!!

பசி கொண்டு
வாய்திறக்கும்
மூன்று குஞ்சுகள்!
உணவைத் திணிக்கும்
அன்புத் தாய்க்குருவி!

கோடாரி உயர
மரம் நடுங்கவில்லை!
தாய்க்குருவி
இதயம் நடுங்கியது!

விழுந்தது வெட்டி
விழவில்லை விருட்சம்!

உடைந்தது ஒரு கூடு
சிதறியதோ குஞ்சுக்
கனவுகள்! துடித்ததோ
தாயின் இறக்கை!

மர வியாபாரியே...
மரப்பொருளுக்கு
விலை வைத்தாய்.

காலைப் பொழுதில்
கதிர் விழிக்கும் முன்
"கீச்... கீச்..."சென்று
துயிலெழுப்பும் இசைக்கு
எந்த சந்தையில்
விலை வைப்பாய்?

கோடாரி மரத்தை
வெட்டவில்லை...
மனிதத்தையே
துண்டு துண்டாய்
வெட்டுகிறது!

மரத்தை நிறுக்கும் முன்
ஒரு முறை
கேள்....
குஞ்சுகளின்
கண்ணீரை
எந்த தராசில்
நிறுக்கப்
போகிறாய்?



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

## வெற்றி இதோ ஆரம்பித்து விட்டது

சில ஆரம்பங்கள் மிகக்
கடினமானவை,
கண்ணீரையும் வலியையும்
பரிசாகத் தருபவை!
"ஏன் எனக்கு மட்டும் இந்தச்
சோதனை?" என்று
உன் உள்ளம் கதறித்
துடிக்கலாம். ஆனால்,
அதே வலியைக் கொஞ்சம்
பழகிப் பார்; அதே சவாலை
நெஞ்சுயர்த்தி அனுபவித்துப்
பார்! அப்போதுதான்
உனக்குப் புரியும்... இந்தக்
களம் உனக்கானது,
நீ இதற்காகவே
படைக்கப்பட்டவன்!
இதற்கு நீதான்
தகுதியானவன் என்பதை
உலகம் உணரட்டும்!
பேரழிவுகளைக் கூட
உலகமும் இறைவனும்
தடுத்துவிட முடியும்;
ஆனால், உனக்கிருக்கும்
நற்பண்புகளையும்...
உனக்காகவே காத்திருக்கும்
நல்வாய்ப்புகளையும்...
இந்த உலகில் யாரால்
தடுத்துவிட முடியும்?
தடுக்க நினைப்பவர்கள்
தடுமாறிப் போவார்கள்;
அவர்கள் போட்ட தடைகள்
எல்லாம் உன் வழிமாறிப்
போகும்! நீ கடந்து வந்த
பாதைகள் பழையதாக
இருக்கலாம்; ஆனால்,
உனக்கான புதுப்பாதை
பூத்தூவி உன்னை
வரவேற்கும்! மகிழ்ச்சியோடு
வா... நீ பட்ட துயரங்கள்
எல்லாம் முடிந்து போயின;
எழுச்சியோடு வா... இனி
வரும் காலங்கள் எல்லாம்
வெற்றியே! "இதுவும் கடந்து
போகும்" என்பது எவ்வளவு
பெரிய உண்மை!
வலிகள், காயங்கள்,
அவமானங்கள் –
அனைத்தும் கடந்து
போய்விட்டன. இதோ...
எல்லாவற்றையும் நீ கடந்த
பிறகு, உனக்காகக்
காத்திருக்கிறது ஒரு
இமாலய வெற்றி! வா...
சாதிப்போம்! சரித்திரத்தில்
இடம் பிடிப்போம்!
உழைப்பவர்களும், நேர்மறைச்
சிந்தனை கொண்டவர்களும்,
அடுத்தவர்
வாழ்வைக் கெடுக்க
நினைக்காதவர்களும்,
இறைவனை
நேசிப்பவர்களும்–
ஒருபோதும்
தோற்பதில்லை!
வெற்றிச்
சிகரம்
உன்னை
அழைக்கிறது...
புறப்படு!



**ஜனனி அந்தோணி ராஜ்,**
திருச்சிராப்பள்ளி.

எத்தனை முறை பார்த்தாலும்
சலிக்காது உன் புகைப்படம்
அதில் பதிந்திருக்கும் உன்
அழகு முடியும் அதனை
பார்த்தபடி வாழ்வது எத்தனை
ஆனந்தம் என் விழிக்கு...

ஏதோ இப்போது மரணத்தின்
வாசலில் நின்று கொண்டு
இருப்பது போல் இருந்தது
இனி உன்னோடு பேச
முடியாது என்ற ஏக்கம்
கொஞ்சம் கொஞ்சமாக
என்னை கொன்று கொண்டு
இருக்கிறது...

என் உலகமே நீயாக
இருக்க எங்கே சென்று
ஒளிந்து கொள்ள?
என் விழி காணும்
இடமெல்லாம்
நீயாகத்தான
தெரியும்
போது எப்படி
மறப்பது நான்
உன்னை?...



**கவிஞர்**
**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## கடல் நண்டு

உப்புக் கடலாழம்
உள்ள எண்ணைக்
குப்பையாம் செல்வம்
அள்ளி எடுத்தும்
வறுமை அவரிடம்
வாழும் முறையறியாச்
சிறுமைப் போரிலே
செல்வம் தொலைத்ததால்!
கடல்நண்டு பிடிக்க
கவனமாய்த்
தேட
உடனே
கிடைக்குமோ
உள்ளதைத்
தொலைத்தபின்!



**வைரமணி**
சென்னை



## "கேடயக் கவிஞன்"

பெண்ணியம் பற்றி
முழங்குவான் மேடையில்..

பெண்ணை வானத்துக்கு
ஏற்றுவான் கவிதைகளில்..

"தேவதைகளின் தேவதை"
பெண்ணென்று எழுதுவான்

அவன் வீட்டு தேவதை
அடுப்படி அடிமையாய்!

அவள் கவிதை
கேட்கவில்லை, சில
நேரமாவது மனிதனாக
இருக்கச் சொன்னாள்!

அவன் கவிதை எழுதும்
கையால் விவாகரத்து
மனுவில்கையெழுத்திட்டான்!

இன்று மேடையில் கேடயம்
பெற்றான் சிறந்த
பெண்ணியக் கவிஞனென்று!

ஒரு கேள்வி மட்டும்
அவனைத் தொடர்ந்து
வருகின்றது...

அம்மாவிடம் சண்டையிட்டு
யாராவது அம்மாவை
விவாகரத்து செய்ததுண்டா?
மனைவியிடம்
மட்டும்
ஏன்?



**முகில்**
**தினகரன்**
கோயமுத்தூர்

## பத்தோடு ஒன்றாய் வாழ்வதல்ல வாழ்க்கை

பத்தோடு ஒன்றாய்
வாழ்வதல்ல வாழ்க்கை
ஆயிரத்தில் ஒருவராய்
உயர்வதே வாழ்க்கை
உங்களிடம் உயர்ந்த
மனிதன் யாரென்றால் உடன்
யோசிக்காமல் நான் என்று
கூறுங்கள்


சிறந்த மனிதன் யாரென்று
கேட்டால் சிறிதும் தயங்காமல்
நான் என்று கூறுங்கள்
உங்களை நீங்கள்
உயர்வாக எண்ணுங்கள்
உங்களை நீங்கள் தாழ்வாக
எண்ணாதீர்கள்

என்னால் முடியும்
தன்னம்பிக்கை
கொள்ளுங்கள்
நடந்த நல்லவற்றை
அடிக்கடி நினையுங்கள்
நடந்த தீயவற்றை அன்றே
மறந்திடுங்கள் முடியாது
நடக்காது கிடைக்காது
விட்டுவிடுங்கள்

முடியும் நடக்கும் கிடைக்கும்
என்றே எண்ணுங்கள்.
மகிழ்ச்சியாகவே
மனதை
எப்போதும்
வைத்திடுங்கள்
மகிழ்ச்சியை
பிறருக்கு
வாரி வாரி
வழங்குங்கள்.



**கவிஞர்:இரா.இரவி!**



## ஹைக்கூ

கோடுகளின்
கவிதை ஓவியம்
சொற்களின்
ஓவியம் கவிதை

மதிக்கப்படுவதில்லை
திறமைகள் இருந்தும்
குடிகாரர்கள்
இக்கரைக்கு அக்கரைப்
பச்சை அரசு ஊழியருக்கு
வணிகராக ஆசை

ஊழல் மறைக்க ஊழல்
செய்யும் அரசியல்வாதிகள்
பழமையானாலும்
விறகாவதில்லை வீணை

ஜடப் பொருள்தான் மீட்டத்
தெரியாதவர்களுக்கு வீணை
அம்புகள் படாத வில்
விழி அம்புகள் அட்ட வில்
வானவில்

புகழ் அடையவில்லை
பிறந்த பூமியில் புத்தன்
ஒருபோதும் மறப்பதில்லை
உணவு இட்டவர்களை '
நாய்கள்

வெடி வெடிப்பதில்லை
சில கிராமங்களில்
பறவைப்பாசம்
மனிதனை விட
அறிவாளிகள் விலங்குகள்
சுனாமியில் தப்பித்தன


அறிவுறுத்த வேண்டி உள்ளது
மனிதனாக வாழ
மனிதனை
அடிக்கரும்பு அதிக இனிப்பு
மண்ணுக்கு அருகில்

மேய்ப்பன் இன்றியே
இல்லம் வந்தன ஆடுகள்

நிலத்தில் பிறந்து நீரில்
வாழ்ந்து நிலத்தில் முடியும்
படகு

மனிதனின் கால் பட்டதால்
களங்கமான நிலவு.

**கவிஞர் இரா .இரவி**



## ஆசிரியர்

சமுதாயத்தில் கல்விக்
கண்திறப்பதில் கைராசி
மருத்துவராய் இருக்கிறது
ஆசிரியர் கூட்டம்

அவர்கள் மாணவத்
தேனீக்களுக்கு
அறிவுத்தேன் வழங்குகின்ற
அதிகாலை நந்தவனத்
தோட்டம்

சமுதாய தீங்குகளைக்
குத்திக் கிழிப்பதில் கத்தி
போன்ற வனமுள்

அறிவைப் பாங்கோடு
மாணவ எண்ணத்தில்
தீட்டுவதில் வண்ண
மாளிகையாம் வானவில்

சமுதாயத்திற்கு வெளிச்சம்
தர எரிந்துகொண்டே
நடமாடும் மெழுகுவத்தி
தன்னலம் மென்னும்
அழுக்கு மூட்டைகளை
அகற்றி மாணவர்களின்
தலையில் பொதுநலமாம்
ஒழுக்க
கிரீடத்தைச்
சூட்டி
விடுபவர்
தான்
ஆசிரியர்ஆம்
சமுதாயத்தின்
ஆச்சிரியக்குறிதான்
ஆசிரியர்!



**எஸ். சந்திரசேகரன்**
அமுதா செஞ்சிக்கோட்டை

## விடுகதை

விடை தேடும்
பயணத்தின் வினா

எண்ணாலும் எழுத்தாலும்
எண்ணம் நிறைத்து
எழுச்சிக்கு வழிவகுக்கும்

புரியாதன புரிய
அறியாதன அறிய
தெரியாதன தெரிய
தெளிவோடு உணர்த்தும்

தேடலின் மகத்துவத்தை
தேவையில் காட்டும்

அறிவை வளர்க்கும்
விடுகதைகள் ஆயிரம்
உண்டு

அனுபவம் சொல்லும்
விடுகதைகள்
பாரினில் உண்டு

சொல்லாய் அமைந்த
விடுகதைக்கு சுற்றிலும்
உண்டு பல விடைகள்

செயலாய் இருக்கும்
விடுகதைகள் சீரற்ற
மனிதர்களின் சிந்தையாலே

விடை காணா
விடுகதையாகி
தடை பல தந்து
தரணியிலே வாழ்ந்திடுவர்

முகமூடி மனிதராகி
முழுவதுமாய் தனை மறைத்து
நல்லவர் போல வேடமிட்டு
நயவஞ்சகம் செய்திடுவர்

விடுகதையாய்
வாழ்ந்திடுவர் விடை
காணும் முன்னே
மறைந்திடுவார்

விடையறியா விடுகதையாகி
வாழ்வில் துயரம் சேர்த்து
பிறர் வாழ்வை மறந்து
தன் வாழ்வைத் தேடுடுவர்

கற்ற கல்வி சொல்லா
விடையை காலம் சொல்லி
வழிகாட்டும்

விடுகதையாய் வாழாது
விடையாய் நாமும்
வாழ்ந்திட்டால்



மற்றவர்
வாழ்வு
மகிழ்வாகும்
பெற்ற பிறவி
பயனாகும்.

**தமிழ்நிலா**

முயன்றாலும்
முடிவதில்லை

## மலர் கொத்து

மலர்கள் ஒன்று சேர்ந்தால்
மலர் கொத்தாக மாறி
அழகு அதிகரிக்கும். அதை
வாங்குபவருக்கு மணம் வீசும்
ஒரு இனிய நினைவாகும்.
வண்ணங்கள் சேர்ந்து
பேசுவது போல மனதை
மகிழ்விக்கும் அந்த மலர்
கொத்து.சிறிய இதழ்கள்
சிரிக்கும் முகம் போல
காற்றில் ஆடும் மென்மை.
அன்பைச் சொல்லும்
அமைதியான வழி.



கொடுத்தால்
மனதில்
மகிழ்ச்சி
பூக்கும்.
இயற்கையின்
அழகை
கையில் தரும்
மலர் கொத்து
ஒரு இனிய பரிசு. என்றும்
நினைவில் நிலைத்து நிற்கும்.

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

பூக்களற்ற வனம்
உன் வருகைக்குக்
காத்திருக்கிறது..
உன் மூச்சுக் காற்றில்
மொட்டு விடக்கூடும்.

துளிர்க்கும் ஆசைகளைச்
சொல்லிக்கொண்டிருக்கிறேன்
ஒவ்வொரு செடிக்கும்.

நீரூற்றிக் காத்திருப்பதைத்
தவிர வேறொன்றும்
அறியாதவனாய் நான்.



இரவும் பகலும்
மாறி மாறி
வருகிற
பிரபஞ்சத்தில்
இருக்கும் ஒரே
வெளிச்சமாய்
நீ.

**நிஷபன்**



## பிள்ளைகள் உலகம்.!

சின்ன சின்னப் பிள்ளைகளே
வாங்க! பள்ளிக்கூடம்
திறந்தாச்சு வாங்க.!
வண்ண வண்ணப்
பட்டாம்பூச்சி நீங்க.. வல்லரசாய்
உயரவேணும் நீங்க.!

அரசுப் பள்ளியில் நீங்க
சேரணும்.. ஆர்வமுடன் தாய்
மொழியைப் பயிலணும்..
புதுசுப்புதுசாக படித்து
அறியணும்.. புதிய உலகத்தின்
ஒளியில் தெரியணும்..!

ஒன்றுகூடி நீங்க ஆடி
மகிழணும்.. என்றும் பெற்றவர்
சொல்லைக் கேட்கணும்..
நன்று என்பதை இன்றே
செய்யணும்! நாளை
உலகத்தை ஆண்டு
உயரணும்.!
காலையில் எழுந்து பாடங்கள்
படிப்பாய்.. காலம் தவறாமல்
பள்ளிக்குச் செல்வாய்..
மாலை முழுவதும்..
விளையாடி மகிழ்வாய்
மனிதநேயத்தை செயலாய்
புரிவாய்..

## கேடெனில் எதிர்த்துக் கேள்.!

கேடுயெனில் எதிர்த்தே
கேளடா.. நாடுயர முன் வந்துப்
போராடடா..!

எத்தனை அநியாயம்
கண்முன்னே நடக்குது..
ஏனென்று கேட்காமல்
இளைஞர் பின் நடக்குது..!
அத்தனையும் முறியடித்து
தீயில் வையடா.. நீ.. அக்னி
குஞ்சுகளாய்ப் பிறந்தாயடா.!

இலஞ்சமில்லா அலுவலகம்
இல்லையே! எதிர்த்து இதை
கேட்பதற்கு ஆளுமில்லையே.!
வறியவர் மேல் வலுத்தவன்
ஏறி நடப்பதா? இதை வாய்மூடி
இளைஞர்கள் வேடிக்கைப்
பார்ப்பதா?

வெள்ளையுடை அணிந்து
சாத்தான் உலவுது..
கொள்ளையிட்ட பணம்
குவிந்து கிடக்குது.!
நல்லவர்க்கு காலம் எங்கே?
பதில் சொல்லடா.. நடக்கின்ற
கேடுகளை எதிர்த்து
நில்லடா.!

நடப்பதெல்லாம் விதி
யென்று நம்பாதேடா..
இங்கு நடப்பதைத் தட்டிக்
கேட்க தயங்காதேடா..
உடைப்பதை உடைத்துவிட
களம்காணடா..! உன்
தன்மான உணர்ச்சியிலேப்
போராடடா.!

**வே.கல்யாண்குமார்.**



## பக்தி ஸ்பெஷல்

இரு சக்கர வாகனத்தைச்
செலுத்துவதற்கு முன்பாக
நீ உன் கூந்தலையும்
ஆடையையும் திருத்தும்
அழகிருக்கிறதே அதை
ரசித்தே ரசித்தே நான்
உன் பக்தனாகி விட்டேன்!
நீ எது செய்தாலும் அழகல்ல
பேரழகு!
எனவே தான் நீ காதல்
செய்தால்எவ்வளவு
அழகாக இருக்கும்
என்று
கிடைக்கும்
நேரத்திலெல்லாம்
நினைத்துப்
பார்க்கிறேன்! பூரிக்கிறேன்!
நீ முதலில் விழிகள்
அசைத்தாய் பின்(னர்)
இதழ்கள் அசைத்தாய்
நான் உன்னைத்
தொடரத் தொடர நீயும்
இசைந்து கா த லை
அசைத்து விட்டாய்!
உன் மீதிருக்கும் என்
அன்பையும் ஆதரவையும்
இன்பத்தையும் ஈர்ப்பையும்
உன்னதத்தையும்
ஊக்கத்தையும்
எண்ணத்தையும்
ஏக்கத்தையும்
ஐயமுறாத யதார்த்தத்தையும்
ஒரு விதமான பாசத்தையும்
ஓசையின்றி பரிமாறிக்
கொள்ளும் முத்தங்களையு ம்
பற்றிச் சொல்ல
வேண்டுமெனில் 'நான்
உன்னைப் பற்றி ஒரு
•பக்தி ஸ்பெஷல் வெளியிட
வேண்டும்!



அதைநீ மட்டுமே
படித்தறிந்து என்
கா த லு க் கு
வாக்களித்து
ஆதரிக்க வேண்டும்!

**முத்து ஆனந்த்**
வேலூர்

## தேவையை சேமித்து வை

காற்று அதை மனித இனமே
போற்று... கண்ணுக்கு
தெரியாத காற்று...

அதை அழித்தால் நீ போவாய்
தோற்று...!
காற்றை மாசு படுத்தாதே..
அதில் சிக்கி நீ செத்து
போகாதே...!

இந்த பூமிக்கு மட்டும்
சொந்தமான காற்று..
புரட்சி செய்து அதை நீ
மாற்று...!

உயிர் வாழ உதவி செய்யும்
காற்று... அது இல்லாம நாம்
போவோம் தோற்று....!


தூய காற்றை நேசிப்போம்...
அதையே....நாம்
சுவாசிப்போம்....!!

**பொன்.கருணா,** நவி மும்பை

## சாபமா? தீபமா?

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
பாசாங்கு பம்மாத்து எல்லாம்
பார்க்க பளபளப்பாய்
பளிச்சென்று தான்
இருக்கும்... காய் வேட்டையில்
கூட கனிகூட்டம் குவியல்
குவியலாய் எளிதில் கிட்டும்...
அதுவே பழகிப் பழகி பக்குவ
வசமாகி பாண்டித்தியம்
பெற்று விட்டாலோ
பலே பலே பாராட்டெல்லாம்
பலப்பலவாய் பகல் நிலவாய்
பொழிந்து கொட்டும்
அதிலெல்லாம் நீ
பொசுங்கி அமுங்கி
இழிந்து விடாதே...

என்னினிய
இளைஞனே...
உயர்வு தாழ்வு என்று
எதுவும் பாராமல்
உண்மை நெறி தவறாமல்
உள்ளதை உள்ளதாய்
காட்டி வாழ்வில் பயணிக்கும்
போது பழுதொன்றும்
உன்னை நெருங்காது.
இன்ஸ்டன்ட் பாராட்டு
இல்லாது போனாலும்
பண்பட்டு நிமிர்ந்து நிற்பாய்...
நகை பள்ளம்
பகை வெள்ளம்
சுற்றி வந்து சூழினும்
இறுதியில் பாரதத் தர்மனாய்
புகழோங்கி புவியில்
என்றென்றும் எக்காய்
நிலைப்பாய்! வளைந்து
நெளிந்து வயிறு வளர்க்கும்
புழுவின் பூரிப்பு சாபம்.



கொலைப் பசியே
ஆனாலும்
புல்லைத் தின்னாத
புலியின் வைராக்கியம்
தீபம்!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

























## Special Invitation

to retired seniors **house wives businessmen bankers**
CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your **second Innings with a career business opportunity**

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided

For successful business.

**Contact Mr. Irudaya Raj**
**Ph.9486634780**




We Are Urgently **Hiring!**

**Marketing Manager**
**Ad Sales (Print Media)**

Package Rs. 4.8 LPA

Company : **PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD**
Location : **Chennai**

**Padma Digital** a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.

**Key responsibilities for Marketing Manager**

- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you

If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com


**Call: 9337501889**


முனீஸ்வர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF
SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990



ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள்
தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998






















WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

7540003588























# பல்சுவை களஞ்சியம்




## பஞ்சபாண்டவர்கள்

பஞ்சபாண்டவர்களில் ஒருவரான சஹாதேவன் சந்தைக்குள் நுழைந்தான். பஞ்சபாண்டவர்களில் ஒருவரான சஹாதேவன் சந்தைக்குள் நுழைந்தான். அழகான குதிரையை அவனும் பார்த்தான். உடனே குதிரையின் உரிமையாளரை நெருங்கி, "குதிரை என்ன விலை? என்று கேட்டான்.

குதிரையின் உரிமையாளரோ,

"ஐயா! இந்த குதிரை விற்பனைக்கு அல்ல. நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொன்னால், குதிரையை இலவசமாகவே கொடுப்பேன்" என்றார்.

சகாதேவன் உடனே, "சரி கேள்வியைச் சொல்லுங்கள்" என்றான்.

குதிரையின் உரிமையாளர், "நன்றாகக் கவனியுங்கள்! பிறகு பதில் சொல்லுங்கள்!

ஒரு பெரிய கிணறு. அதில் உள்ள தண்ணீரைக் கொண்டு ஏழு சிறிய கிணறுகளை நிரப்பலாம். ஆனால், அந்த ஏழு கிணறுகளில் இருக்கும் தண்ணீரை எடுத்து, மறுபடியும் அந்த பெரிய கிணற்றில் ஊற்றினால், பெரிய கிணறு நிரம்பவில்லை.

இது ஏன்? நன்றாக யோசித்து பதில் சொல்லுங்கள்" என்றார். சஹாதேவனால் பதில் சொல்ல முடியவில்லை. அங்கேயே சந்தையில் உட்கார்ந்துவிட்டான்.

சற்று நேரத்தில்.... சகாதேவனை தேடிக்கொண்டு நகுலனும் சந்தைக்கு வந்து விட்டான். அவனும் குதிரையைப் பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான்.

குதிரையின் உரிமையாளர், நகுலனிடம் ஒரு கேள்வி கேட்டார். "ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லிவிட்டு, குதிரையை இலவசமாகவே பெற்றுக்கொள்ளுங்கள்.

துணி தைக்கும் ஊசி இருக்கிறது அல்லவா? அதன் ஓட்டையின் வழியாக ஒரு யானை புகுந்து, அடுத்த பக்கம் போய்விட்டது. ஆனால் யானையின் வால் மட்டும் அந்த ஓட்டையின் வழியாகப் போக முடியவில்லை. ஏன்?" என்றார்.

நகுலனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் சந்தையில் உட்கார்ந்திருந்த சஹாதேவனுடன் சேர்ந்து உட்கார்ந்துவிட்டான்.

அதன் பிறகு ஒரு சில நிமிடங்களில், அர்ஜுனனும் அங்கு வந்தான். அவனும், குதிரையைப்



பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான். குதிரையின் உரிமையாளர், அர்ஜுனனிடமும் கேள்வி கேட்டார்.

"ஐயா! ஒரு வயல் காட்டில் நன்றாக விளைந்து இருந்தது. அதற்கு வேலியெல்லாம் போட்டு பாதுகாப்பாக வைத்து இருந்தார்கள். ஆனால் அறுவடை காலத்தில், அந்த வயல் காட்டில் எதுவுமே இல்லை. வேலியெல்லாம் அப்படியே இருந்தது. அப்படி இருந்தும் விளைந்த தானியங்களை எல்லாம் யார் எடுத்தார்கள்?

பதில் சொல்லிவிட்டு, குதிரையை கொண்டு செல்லுங்கள்" என்றார். அர்ஜுனனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் ஆலோசனை செய்தபடி அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

சகோதரர்கள் மூவரும் இப்படியே உட்கார்ந்திருக்க, அரண்மனையில் அவர்களைக் காணாமல், தர்மர் திகைத்தார். பீமனைக் கூப்பிட்டு, "தம்பி! நம் தம்பிகள் மூவரையும் நீண்ட நேரமாக காணவில்லை. நீ போய், அவர்கள் எங்கு இருந்தாலும் தேடி அழைத்து வா!" என்றார்.

பீமனும் போய் தேடிப்பிடித்து, அர்ஜுனன், நகுலன், சஹாதேவன் மூவரையும் அழைத்து வந்தான். பாஞ்சாலியோடு அரியணையில் அமர்ந்திருந்த தர்மர், அவர்களைப் பார்த்ததும், "அர்ஜுனா! நீண்ட நேரமாக நீயும் உன் தம்பிகளும் இங்கு இல்லை. எங்கே போய் இருந்தீர்கள்?" எனக் கேட்டார்.

அதற்குப் பதிலாக அர்ஜுனன், நடந்ததை எல்லாம் சொல்லி, குதிரை உரிமையாளர் கேட்ட மூன்று கேள்விகளையும் சொன்னான்.

அதைக் கேட்டதும் தர்மர் நடுங்கினார். அதைப் பார்த்த தம்பிகள் எல்லாரும் திகைத்தார்கள்.

"அண்ணா! நீங்கள் நடுங்கும்படியாக என்ன நடந்தது?" எனக் கேட்டார்கள்.

தர்மர் பதில் சொல்லத் தொடங்கினார்...

"தம்பிகளே! எதிர்காலத்தில் நடக்கப் போகும் விபரீதங்களை, அந்த மூன்று கேள்விகளும் சொல்கின்றன."

அதை நினைத்துத்தான் நடுங்கினேன். "ஒவ்வொன்றாகச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று விரிவாகக் கூறினார்.

"உங்களிடம் கேள்வி கேட்டவன் கலி புருஷன்! அவன் கேட்ட முதல் கேள்வியில்

பெரிய கிணறு என்பது பெற்றோர்கள்.

ஏழு சிறிய கிணறு என்பது அவர்களது பிள்ளைகள்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, அவர்கள் எவ்வளவு பேர்களாக இருந்தாலும் சரி! அவ்வளவு பிள்ளைகளையும் காப்பாற்றுவார்கள். இதைத்தான் பெரிய கிணற்றின் தண்ணீரைக் கொண்டு சிறிய கிணற்றை நிரப்பினார்கள் என்பது குறிக்கிறது.

ஆனால், அந்த பிள்ளைகளோ, அவ்வளவு பேர்களும் சேர்ந்தால் கூட, தங்கள் பெற்றோரை காப்பாற்ற மாட்டார்கள். இதைத்தான் ஏழு சிறிய கிணறுகளில் உள்ள தண்ணீரைக் கொண்டு, பெரிய கிணற்றை நிரப்ப முடியவில்லை என்பது குறித்தது.

அடுத்து இரண்டாவது கேள்விப்படி, இனி வருங்காலங்களில் அக்கிரமங்கள், முறைகேடான செயல்கள் ஏராளமாக நடைபெறும்.

ஆனால், நல்ல செயல்கள் நடைபெறுவது மிகவும் கடினமாக இருக்கும். இதைத்தான் யானையே போன வழியில், அதன் வால் போக முடியவில்லை என்று சொல்லி இருக்கிறார்.

அடுத்து மூன்றாவது கேள்வியில், பயிர்கள் என்பது மக்களைக் குறிக்கும், பாதுகாக்கும் வேலி என்பது அதிகாரிகளைக் குறிக்கும்.

அதாவது மக்களைப் பாதுகாக்க வேண்டிய அதிகாரிகளே அவர்களை அழித்து விடுவார்கள்.

மக்கள்தான் வறுமையில் வாடுவார்களே தவிர, அதிகாரிகள் செழிப்பாகத் தான் இருப்பார்கள்.

இதைத்தான், வேலி அப்படியே இருக்க, பயிர்கள் எப்படி அழிந்தன என்ற கேள்வி குறிப்பிடுகிறது என்று சொல்லி முடித்தார் தர்மர். கலியுகத்தில் உலகம் இப்படித்தான் இருக்கும் என்பது மகாபாரத காலத்தில் எடுத்துரைக்கப்பட்டது. படித்தேன்! பகிர்ந்தேன்!! அழகான குதிரையை அவனும் பார்த்தான். உடனே குதிரையின் உரிமையாளரை நெருங்கி, "குதிரை என்ன விலை? என்று கேட்டான்.

குதிரையின் உரிமையாளரோ,

"ஐயா! இந்த குதிரை விற்பனைக்கு அல்ல. நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொன்னால், குதிரையை இலவசமாகவே கொடுப்பேன்" என்றார்.

சகாதேவன் உடனே, "சரி கேள்வியைச் சொல்லுங்கள்" என்றான்.

குதிரையின் உரிமையாளர், "நன்றாகக் கவனியுங்கள்! பிறகு பதில் சொல்லுங்கள்!

ஒரு பெரிய கிணறு. அதில் உள்ள தண்ணீரைக் கொண்டு ஏழு சிறிய கிணறுகளை நிரப்பலாம். ஆனால், அந்த ஏழு கிணறுகளில் இருக்கும் தண்ணீரை எடுத்து, மறுபடியும் அந்த பெரிய கிணற்றில் ஊற்றினால், பெரிய கிணறு நிரம்பவில்லை.

இது ஏன்? நன்றாக யோசித்து பதில் சொல்லுங்கள்" என்றார். சஹாதேவனால் பதில் சொல்ல முடியவில்லை. அங்கேயே சந்தையில் உட்கார்ந்துவிட்டான்.

சற்று நேரத்தில்.... சகாதேவனை தேடிக்கொண்டு நகுலனும் சந்தைக்கு வந்து விட்டான். அவனும் குதிரையைப் பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான்.

குதிரையின் உரிமையாளர், நகுலனிடம் ஒரு கேள்வி கேட்டார். "ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லிவிட்டு, குதிரையை இலவசமாகவே பெற்றுக்கொள்ளுங்கள்.

துணி தைக்கும் ஊசி இருக்கிறது அல்லவா? அதன் ஓட்டையின் வழியாக ஒரு யானை புகுந்து, அடுத்த பக்கம் போய்விட்டது. ஆனால் யானையின் வால் மட்டும் அந்த ஓட்டையின் வழியாகப் போக முடியவில்லை. ஏன்?" என்றார்.

நகுலனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் சந்தையில் உட்கார்ந்திருந்த சஹாதேவனுடன் சேர்ந்து உட்கார்ந்துவிட்டான்.

அதன் பிறகு ஒரு சில நிமிடங்களில், அர்ஜுனனும் அங்கு வந்தான். அவனும், குதிரையைப் பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான். குதிரையின் உரிமையாளர், அர்ஜுனனிடமும் கேள்வி கேட்டார்.

"ஐயா! ஒரு வயல் காட்டில் நன்றாக விளைந்து இருந்தது. அதற்கு வேலியெல்லாம் போட்டு பாதுகாப்பாக வைத்து இருந்தார்கள். ஆனால் அறுவடை காலத்தில், அந்த வயல் காட்டில் எதுவுமே இல்லை. வேலியெல்லாம் அப்படியே இருந்தது. அப்படி இருந்தும் விளைந்த தானியங்களை எல்லாம் யார் எடுத்தார்கள்?

பதில் சொல்லிவிட்டு, குதிரையை கொண்டு செல்லுங்கள்" என்றார். அர்ஜுனனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் ஆலோசனை செய்தபடி அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

சகோதரர்கள் மூவரும் இப்படியே உட்கார்ந்திருக்க, அரண்மனையில் அவர்களைக் காணாமல், தர்மர் திகைத்தார். பீமனைக் கூப்பிட்டு, "தம்பி! நம் தம்பிகள் மூவரையும் நீண்ட நேரமாக காணவில்லை. நீ போய், அவர்கள் எங்கு இருந்தாலும் தேடி அழைத்து வா!" என்றார்.

பீமனும் போய் தேடிப்பிடித்து, அர்ஜுனன், நகுலன், சஹாதேவன் மூவரையும் அழைத்து வந்தான். பாஞ்சாலியோடு அரியணையில் அமர்ந்திருந்த தர்மர், அவர்களைப் பார்த்ததும், "அர்ஜுனா! நீண்ட நேரமாக நீயும் உன் தம்பிகளும் இங்கு இல்லை. எங்கே போய் இருந்தீர்கள்?" எனக் கேட்டார்.

## குதிரை உரிமையாளர் கேட்ட மூன்று கேள்வி

அர்ஜுனன், நடந்ததை எல்லாம் சொல்லி, குதிரை உரிமையாளர் கேட்ட மூன்று கேள்விகளையும் சொன்னான்.

அதைக் கேட்டதும் தர்மர் நடுங்கினார். அதைப் பார்த்த தம்பிகள் எல்லாரும் திகைத்தார்கள்.

"அண்ணா! நீங்கள் நடுங்கும்படியாக என்ன நடந்தது?" எனக் கேட்டார்கள்.

தர்மர் பதில் சொல்லத் தொடங்கினார்...

"தம்பிகளே! எதிர்காலத்தில் நடக்கப் போகும் விபரீதங்களை, அந்த மூன்று கேள்விகளும் சொல்கின்றன."

அதை நினைத்துத்தான் நடுங்கினேன். "ஒவ்வொன்றாகச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று விரிவாகக் கூறினார்.


"உங்களிடம் கேள்வி கேட்டவன் கலி புருஷன்! அவன் கேட்ட முதல் கேள்வியில்

பெரிய கிணறு என்பது பெற்றோர்கள்.

ஏழு சிறிய கிணறு என்பது அவர்களது பிள்ளைகள்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, அவர்கள் எவ்வளவு பேர்களாக இருந்தாலும் சரி! அவ்வளவு பிள்ளைகளையும் காப்பாற்றுவார்கள். இதைத்தான் பெரிய கிணற்றின் தண்ணீரைக் கொண்டு சிறிய கிணற்றை நிரப்பினார்கள் என்பது குறிக்கிறது.

ஆனால், அந்த பிள்ளைகளோ, அவ்வளவு பேர்களும் சேர்ந்தால் கூட, தங்கள் பெற்றோரை காப்பாற்ற மாட்டார்கள். இதைத்தான் ஏழு சிறிய கிணறுகளில் உள்ள தண்ணீரைக்



கொண்டு, பெரிய கிணற்றை நிரப்ப முடியவில்லை என்பது குறித்தது.

அடுத்து இரண்டாவது கேள்விப்படி, இனி வருங்காலங்களில் அக்கிரமங்கள், முறைகேடான செயல்கள் ஏராளமாக நடைபெறும்.

ஆனால், நல்ல செயல்கள் நடைபெறுவது மிகவும் கடினமாக இருக்கும். இதைத்தான் யானையே போன வழியில், அதன் வால் போக முடியவில்லை என்று சொல்லி இருக்கிறார்.

அடுத்து மூன்றாவது கேள்வியில், பயிர்கள் என்பது மக்களைக் குறிக்கும், பாதுகாக்கும் வேலி என்பது அதிகாரிகளைக் குறிக்கும்.


அதாவது மக்களைப் பாதுகாக்க வேண்டிய அதிகாரிகளே அவர்களை அழித்து விடுவார்கள்.

மக்கள்தான் வறுமையில் வாடுவார்களே தவிர, அதிகாரிகள் செழிப்பாகத் தான் இருப்பார்கள்.

இதைத்தான், வேலி அப்படியே இருக்க, பயிர்கள் எப்படி அழிந்தன என்ற கேள்வி குறிப்பிடுகிறது என்று சொல்லி முடித்தார் தர்மர். கலியுகத்தில் உலகம் இப்படித்தான் இருக்கும் என்பது மகாபாரத காலத்தில் எடுத்துரைக்கப்பட்டது.
படித்தேன்! பகிர்ந்தேன்!!



# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன? | கொசு |
| மழையில் பிறந்து வெயிலில் காயுது? | காளான் |
| அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்? | பந்து |
| வட்ட வட்ட நிலவில் வரைஞ்சிருக்கு; எழுதியிருக்கு. அது என்ன? | நாணயம் |
| ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது அது என்ன ? | கண் |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும். காய் காய்ப்பது கண்ணுக்குத் தெரியாது. அது என்ன? | வேர்கடலை |
| பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன? | வத்தல் மிளகாய் |



# ஜோக்ஸ்

**தத்துவம்**

ஏழு பரம்பரைக்கு உட்கார்ந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருந்தாலும் பாஸ்ட் புட்க்கு போனா நின்று தான் சாப்பிடணும்.

---

**தோழிகள் இருவர் பேசிக் கொள்கிறார்கள்**

ராதா: நேத்து உன் லவ்வரை பார்க்க க்ஷநநஉh-க்கு போறதா சொன்னியே! என்ன ஆச்சு?

கீதா: அட! அத ஏண்டி கேக்குறா? வாத்தியாரை லவ் பண்ணது தப்பா போச்சு!

ராதா: ஏன்! என்ன ஆச்சு?


கீதா: கொஞ்ச நேரம் லேட்டா போனேன். அதுக்காக படகு மேல ஏறி நிற்க சொல்லிட்டாருடி!

ராதா: ஹா! ஹா! ஹா!

---

**முத்தம்**

கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா



500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?

மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?

கணவன்: ???

---

**தொலைக்காட்சி விளம்பரம்**

வரும் சனிக்கிழமை

இரவு பத்து மணிக்கு... உங்கள் அபிமான தொலைக்காட்சியில்... அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்

சிலந்தி அண்ணாச்சி (Spiderman)

உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு

சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்

"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)

முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!



# சமையல் அறை ஸ்பெஷல்



# சமையல் டிப்ஸ்



▸▸ தயிர் பச்சடியில் பாலாடையை போட்டால் எளிதில் புளித்து விடாமல் இருக்கும்.

▸▸ டீயில் சிறிதளவு சுக்குத்தூள், மிளகுத்தூள், ஏலக்காய் தூள் கலந்தால் அதிக ருசி கிடைக்கும். அஜீரணக் கோளாறும் சீராகும்.

▸▸ முட்டையை தண்ணீரில் போட்டு வைத்தால் ஒரு வாரம் வரை கெடாமல் இருக்கும்.

▸▸ வெந்தயக் கீரையை சமைக்கும்போது சிறிது சர்க்கரையை சேர்த்தால் அதில் உள்ள கசப்பு சுவை நீங்கிவிடும்.

▸▸ சமையலுக்கு பட்டாணி பயன்படுத்தும்போது அதில் சிறிதளவு சர்க்கரை சேர்த்தால் நல்ல மணமாக இருக்கும்.

▸▸ நறுக்கிய வெங்காயத்துடன் சிறிது வெண்ணெய் சேர்த்து வைத்தால் நீண்ட நேரம் பிரெஷ்ஷாக இருக்கும்.

▸▸ எண்ணெயில் சிறிது மிளகைப் போட்டு வைத்தால் நீண்ட நாட்கள் வரை எண்ணெய் கெடாது.

▸▸ பூரிக்கு மாவு பிசையும்போது சர்க்கரை சேர்த்து பிசைந்தால் பொரித்த பூரி அதிக நேரம் நமத்துப் போகாமல் இருக்கும்.

▸▸ கோதுமை மாவு தோசைக்கு காலையிலேயே மாவை கரைத்து வைத்தால் மாலையில் சுடும் போது ஒட்டாமல் வரும்.

▸▸ சாம்பாருக்கு பருப்பு வேக வைக்கும் போது அதனுடன் தக்காளி, பச்சை மிளகாய், வெங்காயம், பூண்டு, பெருங்காயம், வெந்தயம், சிறிது எண்ணெய் விட்டு வேக வைத்தால் சாம்பார் நல்ல வாசனையோடு மட்டுமின்றி நீண்ட நேரம் கெடாமலும் இருக்கும்.

▸▸ சுண்டல், வெள்ளை சுண்டல், ராஜ்மா, காராமணி போன்ற பருப்பு வகைகளை கிரேவியாக சமைக்கும் பொழுது, வெந்த பருப்பில் இருந்து சிறிதளவு எடுத்து அரைத்து கரைத்து விட்டால் கிரேவி கெட்டியாக இருப்பதுடன் ருசியும் கூடும்.

▸▸ காய்ந்த ரொட்டியை துண்டுகளாக நறுக்கி நன்றாக காய வைத்து எடுத்து வைத்தால் அவற்றை புலாவ், பிரியாணி ஆகியவற்றில் வறுத்துப் போட சுவையாக இருக்கும்.

▸▸ கத்திரிக்காய் காம்புகளை கழுவிக்கொண்டு ரசம் அல்லது சாம்பார் கொதிக்கும்போது போட்டால் சுவையாக இருக்கும்.

▸▸ முருங்கைக்கீரை உருவிய காம்புகளை சுத்தம் செய்து ரசத்தில் போட்டு குடித்தால் மூட்டுகளுக்கு நல்ல பலம் கிடைக்கும்.

▸▸ கத்திரிக்காயை நறுக்கி மோர் கலந்த நீரில் போட்டு வைத்தால் கறுத்துப் போகாமல் இருக்கும்.

▸▸ வாழைப்பூ, வாழைக்காய் போன்ற காய்கறிகளை நறுக்கும் பொழுது ஏற்படும் கறையைப் போக்க, கைகளை வாழைப்பழத் தோலின் உட்பகுதியில் தேய்த்து விட்டு சோப்பு போட்டு கழுவினால் கை பளிச்சென்று ஆகிவிடும்.

▸▸ கசக்கும் காய்களை அரிசி கழுவிய நீரில் சில நிமிடம் போட்டு சமைத்தால் கசப்பு குறையும்.

▸▸ சில முள்ளங்கிகள் அதிக வாடை வீசும். அவற்றை அரை மணி நேரம் முன்பாக தண்ணீரில் ஊறவைத்து பிறகு சமைத்தால் வாசனை வராது.

▸▸ குளிர் காலத்தில் லேசான சுடு பாலில் உறை ஊற்றி வைத்தால் சீக்கிரம் கெட்டித்தயிர் கிடைக்கும்.

▸▸ பன்னீரை, வினிகர் தெளித்த பாலீத்தின் பையில் போட்டு வைத்தால் நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும்.

▸▸ சேமியா உப்புமா செய்யும் போது பாதி அளவு நீரும், பாதி தேங்காய் பாலும் கலந்து செய்தால் உப்புமா ருசிக்கும்.

▸▸ வெண்ணெய் காய்ச்சிய வாணலியில் உருளைக்கிழங்கு அல்லது அவரைக்காயை வதக்கி வறுவல் செய்தால் சுவையும், மணமும் கூடுதலாக இருக்கும்.

▸▸ பச்சடி, சூப் செய்ய சிவப்பு நிற வெங்காயத்தை பயன்படுத்துவது நல்லது. இது ருசியைக் கூட்டும்.



# மண்ணின் பொக்கிஷம் "பருப்பு கீரை"



நாம் தினந்தோறும் அன்றாட வேலைகளை செய்ய நம்மை சுறுசுறுப்பாகவும், புத்துணர்வோடும் வைப்பதற்கு நம் உடலில் உள்ள சத்துகளின் நிலை முக்கிய பங்கு வகிக்கிறது.

அந்த வகையில், நம் உடலில் சத்து குறைபாடு ஏற்படுவதை தடுக்க நாம் உண்ணும் உணவில் தினமும் காய்கறிகளுடன் கீரை சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

ஆம்.. அப்படி கீரைகளில் அதிக சத்து உள்ள பருப்பு கீரை பற்றி தான் இன்று பார்க்கப் போகிறோம்..!

கிராமங்களில் சாதாரணமாக வீடைச்சுற்றி பருப்பு கீரை வளர்ந்து கிடப்பதை பார்க்கலாம். இதற்கு கங்கா வள்ளி என்ற பெயரும் உண்டு. ஏராளமான சத்துக்கள் இந்த கீரையில் உள்ளன.

இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கும் ஒமேகா-3 சத்தானது பருப்பு கீரையில் ஏராளம். குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு ஒமேகா-3 தேவை. இது, ஆட்டிசம் போன்ற வளர்ச்சி குறைபாடுகளை தடுக்க உதவுகிறது. இது உடலில் இருக்கும் கெட்ட கொழுப்பை குறைப்பதுடன், இதயத்தை சுற்றி படியும் கொழுப்பையும் தடுக்கிறது.

வைட்டமின்-ஏ சத்தும் இருப்பதால் தோல் எப்போதும் பொலிவுடன் இருக்கவும், சருமம் தொடர்பான பிரச்சினைகளை குணப்படுத்தவும், கண் பார்வை தெளிவாக இருக்கவும் இந்த கீரை உதவுகிறது.

வைட்டமின்-சி, இரும்புச்சத்து, மக்னீசியம், பொட்டாசியம் போன்ற முக்கிய சத்துக்கள் நிறைந்துள்ளன. இந்த கீரையில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மலச்சிக்கல் தீரும். உடல் எடையை குறைக்கும் மற்றும் குடல் நோய்களை தடுக்கும் ஆற்றல் உள்ளது.

ஆஸ்டியோபோரோசிஸ், சொரியாசிஸ் போன்ற நோய்களுக்கு பருப்பு கீரை அருமருந்தாக உள்ளது, என்று நாட்டு மருத்துவ நூல்கள் கூறுகின்றன. எலும்புகள் மற்றும் தசைகளுக்கு வலிமை தரும் கால்சியமும் இந்த கீரையில் ஏராளம்.

உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள், நீண்ட நேரம் பசி உணர்வு இல்லாமல் தவிர்க்க இந்த கீரை உதவுகிறது. தமிழ்நாட்டில் சாதாரணமாக எங்கும் முளைத்து கிடக்கும் இந்த கீரை இந்த மண்ணின் பொக்கிஷம் என்றே உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்..!

## தேங்காய்ப்பால் பொங்கல்



தேவையான பொருள்கள்:

பாசிப் பருப்பு - 1/4 கிண்ணம்
தண்ணீர் - 5 கிண்ணம்
பச்சரிசி - 1 கிண்ணம்
வெல்லம் - 1 கிண்ணம்
நெய் - 2 மேஜை கரண்டி
முந்திரிப் பருப்பு - 15
ஏலக்காய் - 5,
தேங்காய்ப்பால் - 1 கிண்ணம்

செய்முறை:

வெறும் வாணலியில் பாசிப்பருப்பினை லேசாக சிவக்கும் வண்ணம் வறுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் 5 கிண்ணம் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்து கொதிக்க ஆரம்பித்தவுடன் பாசிப் பருப்பினை போட்டு வெந்தவுடன் அரிசியைக் நன்றாகக் களைந்து போட்டு, இரண்டும் நன்கு குழைந்தபின், வெல்லத்தைப் போடவும். வெல்லம் கரைந்து நன்கு சேரும் வரை கிளறி, நெய்யை ஊற்றி, வறுத்த முந்திரியைப் போட்டு, ஏலக்காய்ப் பொடியைப் போட்டு, தேங்காய்ப்பால் விட்டு கிளறி இறக்கவும்.

# ஐஸ்கிரீம் வகைகள்!



## பால் ஐஸ்கிரீம்

தேவையான பொருட்கள்:
பால் - 1 லிட்டர்
ஓரம் நீக்கிய பிரட் துண்டுகள் - 2
சோள மாவு - 1 மேசைக்கரண்டி
பாதாம், முந்திரி - தலா 10
சர்க்கரை - 4 மேசைக்கரண்டி

செய்முறை: ஒரு லிட்டர் பாலில், முக்கால் பாகத்தை அடுப்பில் வைத்துச் சுண்டக் காய்ச்சவும். ஓரம் நீக்கிய பிரட் துண்டுகள், சோள மாவு இரண்டையும் மிக்சியில் போட்டு அரைக்கவும். மீதமுள்ள பாலில் அரைத்த கலவையைப் போட்டு, பாதாம், முந்திரித் துண்டுகள் மற்றும் சர்க்கரை போடவும். இந்தக் கலவையைச் சுண்டிய பாலில் போட்டு நன்கு கிளறி, அல்வா பதத்தில் எடுத்து, ஆறியதும் குல்ஃபி அச்சுகளில் போட்டு ஃப்ரீசரில் வைக்கவும்.

## கேரட் ஐஸ்கிரீம்

தேவையான பொருள்கள்:

கேரட் - 4
பாதாம், முந்திரி - தலா 10
சர்க்கரை - 1 கிண்ணம்
பால் - 1/2 லிட்டர்
வெனிலா எசென்ஸ் - தேவைக்கேற்ப

செய்முறை: நான்கு கேரட்டுகளைத் தோல் சீவி, ஆவியில் வேகவிடவும். ஆறியவுடன் பாதாம், முந்திரி தலா 10, சர்க்கரையைச் சேர்த்து விழுதாக அரைக்கவும். அரை லிட்டர் பாலை கால் லிட்டராகக் காய்ச்சி, அரைத்த விழுதைச் சேர்த்து லேசாகக் கொதிக்கவிடவும். ஆறியவுடன் இரண்டு சொட்டு வெனிலா எசென்ஸ் சேர்த்துக் கலக்கி ஃப்ரீசரில் 6 மணிநேரம் வைத்து எடுத்தால் போதும்.

## மேங்கோ ஐஸ்கிரீம்

தேவையான பொருள்கள்:
மாம்பழம் - 5
பால் - 1/2 லிட்டர்
சர்க்கரை - 1 கிண்ணம்
சோள மாவு - 1/4 கிண்ணம்

செய்முறை: வாணலியை அடுப்பில் வைத்து பாலை ஊற்றி நன்றாகக் காய்ச்சவும். பிறகு சோள மாவை தனியாக ஆறிய பாலில் கலந்து கரைத்து அதனுடன் சேர்த்துக் கொதிக்க வைத்து, சர்க்கரை சேர்த்து கெட்டியாக மாறும் வரை கிளறி, வேறு ஒரு பாத்திரத்தில் மாற்றவும். நறுக்கிய மாம்பழத்தை மிக்ஸியில் போட்டு பேஸ்ட் பதத்துக்கு அரைத்து, ஏற்கெனவே தயார் செய்து வைத்துள்ள பால் கலவையைச் சேர்த்து ஒன்றாக அரைக்கவும். இதை ஒரு பௌலில் மாற்றி பிரிட்ஜில் 3 மணி நேரம் வைத்து, எடுத்து மீண்டும் மிக்ஸியில் அரைத்து பாத்திரத்துக்கு மாற்றி, 8 மணி நேரம் பிரிட்ஜில் வைத்து பிறகு பரிமாறவும்.


## சாக்லேட் ஐஸ்கிரீம்

தேவையான பொருள்கள்:
பால் - 1/2 லிட்டர்
கோகோ பவுடர் - 6 மேசைக்கரண்டி
சாக்லெட் எசென்ஸ் - 2 மேசைக்கரண்டி
சர்க்கரை - 50 கிராம்
ஜெலட்டின் பவுடர் - 1/2 தேக்கரண்டி

செய்முறை: பாலைச் சூடாக்கி, அதில் கோகோ பவுடர், சாக்லெட் எசென்ஸ் சேர்த்துக் கலக்கி கொதிக்க விடவும். பிறகு சர்க்கரையும், ஜெலட்டின் பவுடரையும் சேர்த்துக் கொதிக்க விடவும். நன்கு கெட்டியான பதம் வந்ததும், இறக்கி ஆற வைத்து ஃப்ரீசரில் வைத்துக் கெட்டியானதும் சாப்பிடவும்.




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்





8122664699

## மாசி பங்குனி பால்குடம் திருவிழா



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மீனாட்சிபுரத்தில் பிரசித்தி பெற்ற முத்துமாரியம்மன் கோவில் உள்ளது . இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இக்கோவிலில் மாசி பங்குனி பால்குடம் திருவிழா கடந்த 10 ஆம் தேதி கொடியேற்றம் மற்றும் காப்பு கட்டுகளுடன் தொடங்கியது.

## குழாய் வழி இயற்கை எரிவாயு விநியோக திட்டம்





குழாய் வழி இயற்கை எரிவாயு விநியோக திட்டம் (City Gas Distribution Network) மூலம் நீலகிரி, ஈரோடு மாவட்டங்களில் 8.8 லட்சம் குடும்பங்கள், 200+ வணிக நிறுவனங்கள், மற்றும் 201+ CNG நிலையங்கள் பயன்பெறும்.

## ஏப்ரல் 1ம் தேதி உள்ளூர் விடுமுறை




பங்குனி உத்திரத்தை முன்னிட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் ஏப்ரல் 1ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற உள்ளதால் பக்தர்களின் வசதிக்காக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## பங்குனி சோமவார தேய்பிறை பிரதோஷம்



வாலாஜாபேட்டை ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் பங்குனி சோமவார தேய்பிறை பிரதோஷ நாளில் திரளான பக்தர்கள் பிரதோஷ நாதரை கோயில் முழுவதும் வலம் வந்து சிறப்பு வழிபாடு செய்தனர்.

## ரூ.2.40 லட்சத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல்



மேலூரில் உரிய ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.2.40 லட்சத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்த நிலையில் கோட்டாட்சியர் சங்கீதா, விசாரணை மேற்கொண்டு மாவட்ட கருவூலத்தில் ஒப்படைக்க அறிவுறுத்தினார்.

## கங்கைகொண் டேஸ்வரர் கோவிலில் பிரதோஷ பூஜை



பெரும் பூண்டி கங்காதேவி சமேத கங்கைகொண் டேஸ்வரர் கோவிலில் பிரதோஷ பூஜை சிறப்பாக நடந்தது அபிஷேக சாமான்களை பெங்களூர் Murugan கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் அன்னதானம் வளத்தி விஜியகுமார் பத்திர எழுத்தர் செய்தனர் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர் ஓம்சிவசிவஓம்

## வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் கவலை



மேலூரில் ரம்ஜான் பண்டிகையொட்டி 1 கோடி ரூபாய்க்கு ஆடுகள் விற்பனையானாலும் தேர்தல் நடைமுறை காரணமாக பணம் கொண்டு வர முடிவதில்லை என வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

## தேர்தல் நடத்தை விதி மீறல்- நாம் தமிழர் கட்சி நிர்வாகி மீது வழக்குப்பதிவு

**தென்காசி, மார்ச் 17:**

தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட 5 மாநில சட்டமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு நேற்று மாலை வெளியிடப்பட்டது.

இதைத்தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாகக அமலுக்கு வந்தது.

இந்த நிலையில், தென்காசி மாவட்டம் ஊத்துமலை பகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி நாம் தமிழர் கட்சி சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்தாய்வு கூட்டம் மற்றும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம அனுமதியின்றி நடைபெற்றதாக கூறப்படுகிறது.




இந்த நிலையில், தேர்தல் பறக்கும் படை அதிகாரியான வேளாண்மை துறை உதவி இயக்குனராக பணியாற்றி வரும் உதயகுமார் என்பவர் ஊத்துமலை போலீஸ் நிலையத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக கொடுத்த புகாரின் அடிப்படையில், நாம் தமிழர் கட்சியின் கொள்கை பரப்பு இணைச் செயலாளராக உள்ள சரவணன் என்பவர் மீது 2 பிரிவுகளின் கீழ் ஊத்துமலை போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

தேர்தல்நடத்தைவிதிமுறைகள் அமலில் உள்ள நிலையில் நடத்தை விதிமுறைகளை மீறி கட்சி நிகழ்ச்சி நடத்திய நாம் தமிழர் கட்சியின் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் மீது தமிழகத்தில் முதல்முறையாக நடத்தை விதிமுறைகளை மீறியதாக இந்த சட்டமன்ற தேர்தலில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 11 மாவோயிஸ்ட்கள் சரண்



ஒடிசாவில் மூத்த தலைவர் உட்பட 11 மாவோயிஸ்ட்கள் சரண் - ஆயுதங்கள் ஒப்படைப்பு

## பானிபூரி வியாபாரி பணம் தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல்



பானிபூரி வியாபாரி உரிய ஆவணங்கள் இன்றி எடுத்து வந்த 1.50 லட்சம் பணம் மற்றும் 21 கிராம் தங்க நகையை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். 2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தேர்தல் விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது. அதன் காரணமாக ஏதேனும் பணக்கடத்தல் சம்பவம் நடைபெறுகிறதா? என பறக்கும் படையினர் ஆங்காங்கே வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி செய்தியாளர்களுக்கு பேட்டி




தேர்தல் நடைமுறையை ஒட்டி பொதுமக்கள் 50,000 உள்ளான பணம் மட்டும் எடுத்துச் செல்ல வேண்டும், எனக்கும் அதே ரூல் தான் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தொடர்பான தேர்தல் அட்டவணையை தெரிவித்தார்.

## இளம் அதிரடி வீரர் வைபவ்



அண்டர் 19 உலகக்கோப்பையை இந்திய அணி வெல்ல முக்கிய காரணமாக இருந்த இளம் அதிரடி வீரர் வைபவ் சூர்யவன்ஷி, தற்போது ஐபிஎல் தொடருக்கான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்..! ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு கோப்பையை வாங்கி தருவதே தனது இலக்கு என்றவர், அணிக்காக தனது முழு பங்களிப்பையும் கொடுக்க உள்ளதாக கூறினார்.



போர் பதற்றம் காரணமாக வங்கதேசத்தில் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், ஏப்ரல் மாதம் மட்டும் சுமார் 45 ஆயிரம் டன் டீசல் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என தனியார் செய்தி நிறுவனத்துக்கு வங்கதேச அரசு தகவல் அளித்துள்ளது. வரும் 18 அல்லது 19ம் தேதிகளில் கூடுதலாக 5 ஆயிரம் டன் டீசல் இறக்குமதி செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளது.




## எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வனுக்கு சாகித்ய அகாடமி விருது!




**சென்னை, மார்ச் 17:**

மூத்த எழுத்தாளர் ச. தமிழ்செல்வனுக்கு 2025ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருது, ‘தமிழ் சிறுகதையின் தடங்கள்’ என்ற நூலுக்காக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆய்வு நூலான இந்நூல், தமிழ் சிறுகதை இலக்கியத்தின் முதல் ஐம்பது ஆண்டுகால வரலாற்றையும் அதன் பரிணாம வளர்ச்சியையும் விரிவாக ஆராய்கிறது.சுமார் 896 பக்கங்களைக் கொண்ட இந்த ஆய்வு நூல், தமிழ் சிறுகதை உலகின் முக்கிய மைல்கற்களைப் பதிவு செய்துள்ளது. குறிப்பாக 1913-ம் ஆண்டு முதல் 1970-கள் வரையிலான சிறுகதைகளின் போக்கை இது ஆவணப்படுத்துகிறது.

## "பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்ததால்தான் 2001-இல் திமுக தோற்றது" – டி.கே.எஸ். இளங்கோவன்

**சென்னை, மார்ச் 17:**

“பாஜகவுடன் யார் சென்றாலும் அவர்களுக்கு தோல்விதான். பாஜகவுடன் கூட்டணி வைத்ததால்தான் 2001-இல் திமுக தோற்றது. விஜய்க்கும் இதே நிலைதான்” என தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப்.23ஆம் தேதி ஒரேகட்டமாக நடைபெற உள்ளது. முடிவுகள் மே.4ஆம் தேதி வெளியாக உள்ளன. இதனையொட்டி தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதிப் பங்கீட்டு பேச்சில் கவனம் செலுத்தி வருகின்றன.

திமுக தரப்பில் கூட்டணி இறுதியானது. அதிமுக தரப்பிலும் கூட்டணி கிட்டத்தட்ட உறுதியானலும், விஜய்யை என்டிஏ கூட்டணிக்கு இழுக்க முயற்சிகள் நடப்பதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஆனால் தவெக தரப்பில் இதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தவெக, என்டிஏ கூட்டணிக்கு சென்றால் பாதிப்பு அவர்களுக்குதான் என திமுக செய்தித்தொடர்பாளர் டிகேஎஸ் இளங்கோவன் தெரிவித்துள்ளார். தவெக, என்டிஏ கூட்டணியில் இணைய வாய்ப்புள்ளதாக வெளியாகும் செய்திகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

“பாஜகவுடன் யார் சென்றாலும் அவர்களுக்கு தோல்விதான். பாஜகவுடன் கூட்டணி வைத்ததால்தான் 2001-இல் திமுக தோற்றது. விஜய்க்கும் இதே நிலைதான்” என தெரிவித்துள்ளார்.

## இஃப்தார் நோன்பு திறக்கும் விழா




அஇஅதிமுக பொதுச் செயலாளர், எடப்பாடியார் அவர்களின் தலைமையில் அஇஅ திமுக சார்பில், சென்னையில் இஃப்தார் நோன்பு திறக்கும் விழா நடைபெற்றது. எம்ஜி ஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஜாகீர் உசேன் அவர்கள் இஃப்தார் நோன்பு திறக்கும் விழாவில் நேரில் கலந்து கொண்டு எடப்பாடியார் அவர்களுக்கு நினைவு பரிசாக புத்தகம் வழங்கி ஆசி பெற்றார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: கேரளாவில் சிறந்த சுற்றுலா இடங்கள் (2)

நேற்றைய தொடர்ச்சி....

5. தேக்கடி (பெரியார் புலி ரிசர்வ்) -




கேரளாவில் பார்க்க வேண்டிய முதல் இடங்களில் தேக்கடி இடம் பிடித்துள்ளார். மேற்குத் தொடர்ச்சி மலையின் பசுமையான பசுமைக்கு மத்தியில் பதுங்கியிருக்கும் வனப்பகுதிகளால் ஆசீர்வதிக்கப்பட்ட இயற்கை சொர்க்கம் இது. பெரியார் ஏரியைத் தவிர பெரியார் வனவிலங்கு சரணாலயத்தின் காடுகள் நன்கு அறியப்பட்ட சுற்றுலா பயணிகள். கூடுதலாக, காபி மற்றும் மசாலா தோட்டங்கள் உண்மையிலேயே ஆச்சரியமானவை. இந்தியாவில் உள்ள 27 புலிகள் காப்பகங்களில் ஒன்றான பெரியார், யானைகள், புலிகள், சாம்பார்கள், போன்ற கிட்டத்தட்ட 35 வகையான விலங்கினங்களில் வாழ்கிறது. மேலும், கிட்டத்தட்ட 265 வகையான பறவைகள் பசுமையில் வாழ்கின்றன. கூடுதலாக, சஃபாரி, ஜங்கிள் ரோந்து, மூங்கில் ராஃப்டிங், ஜங்கிள் கேம்ப், பார்டர் ஹைகிங் போன்ற செயல்களுடன் நீங்கள் வனப்பகுதியை அனுபவிக்க முடியும்.

பெரியார் புலி காப்பகத்தில் பார்க்க வேண்டிய விஷயங்கள்: பெரியார் வனவிலங்கு சரணாலயம், பெரியார் ஏரி, கடத்தநாதன் கலரி மையம், யானை சந்தி, தீபா உலக மசாலா மற்றும் ஆயுர்வேத தோட்டம், குமிலி, ராமக்கல்மேடு, முல்லபெரியர் அணை, பெரியார் புலி பாதை, முத்ரா கலாச்சார மையம், வந்திபெரியர், செல்லமண்டுகுவில்.

6. வயநாடு

கேரளா கடவுளின் சொந்த நாடு என்பதற்கு வயநாடு ஒரு காரணம். மலையாளத்தில் உள்ள 'நெல் வயல்களின் நிலம்', கேரளாவில் பார்க்க வேண்டிய பசுமையான இடங்களில் இதுவும் ஒன்றாகும். விறுவிறுப்பான சாகசங்களுடன் இணைந்த அழகிய அழகு பார்வையாளர்களுக்கு மிகவும் பிடித்தது. ஒரு ட்ரீஹவுஸில் தங்கியிருங்கள், வயநாடு அவற்றில் ஏராளமாக உள்ளது. 50 க்கும் மேற்பட்ட பழங்குடியினர் இப்பகுதியில் வசிப்பதால் பழங்குடி பாரம்பரியத்தைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ளலாம். மலையேற்றம் என்பது நகரத்தின் அற்புதமான இன்பங்களில் ஒன்றாகும். அழகிய சுற்றுப்புறங்களில் நடந்து செல்லுங்கள், நீங்கள் அதிர்ஷ்டசாலி என்றால் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் ஒரு நீலகுரிஞ்சி மலரைக் காணலாம்.

வயநாடு அருகே பார்வையிட சிறந்த இடங்கள்: எடக்கல் குகைகள், பனசுரா சாகர் அணை, வயநாடு வனவிலங்கு சரணாலயம், துஷாரகிரி நீர்வீழ்ச்சி, திருநெல்லி கோயில், லக்கிடி வியூ பாயிண்ட், புலியர்மலா சமண கோயில், குருவாட்வீப், பாபனாஷினி நதி மற்றும் பதின்ஜாரதரா அணை.

7. குமரகம்

வேம்பநாத் ஏரிக்கு அருகில் அமைந்துள்ள குமரகம் ஒரு சுற்றுலா சொர்க்கமாகும். அமைதியான சிறிய குக்கிராமம் கவர்ச்சிகரமான காட்சிகள், இனிமையான வானிலை மற்றும் கவர்ச்சியான சுற்றுச்சூழல் அமைப்பு ஆகியவற்றால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் பார்வையிட சிறந்த இடங்களின் பட்டியலில் குமரகம் ஒரு சிறப்பு இடத்தைப்பிடித்துள்ளது. தேங்காய் பள்ளங்கள், புதிய நெல் வயல்கள் மற்றும் கிராமங்களால் உப்பங்கழிகள் விளிம்பில் உள்ளன. ஹவுஸ் படகு சவாரிகள் வெறுமனே நிதானமாகவும் உலகத்திற்கு வெளியேயும் இருக்கும். கேரளாவின் மகிழ்ச்சிகரமான உண்மையான உணவு நீங்கள் நிச்சயமாக தவறவிடக்கூடாது. குமரகம் பறவைகள் சரணாலயம் கேரளத்தில் கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றாகும். புலம்பெயர்ந்த பார்வையாளர்கள், சைபீரிய நாரைகள் உட்பட பல பறவை இனங்கள் இங்கு உள்ளன.

குமாரகோமில் பார்க்க வேண்டிய இடங்கள் : குமரகம் பறவைகள் சரணாலயம், குமரகம் உப்பங்கழிகள், வேம்பநாடு ஏரி, குமரகம் கடற்கரை, அருவிக்குஷி நீர்வீழ்ச்சி, ஜுமா மஸ்ஜித், கோயில், பே தீவு சறுக்கல் மர அருங்காட்சியகம், வலியப்பள்ளி, செரியப்பள்ளி, திருநக்கர மகாதேவா, மற்றும் பதிராமல் தீவு.

8. திருச்சூர்

திரிசூர் "கேரளாவின் கலாச்சார தலைநகரம்" கேரளாவில் கட்டாயம் பார்க்க வேண்டிய சுற்றுலா இடங்களில் ஒன்றாகும். 65 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்ட இந்த நகரத்தில் பல கோயில்கள், கலாச்சார மையங்கள், தேவாலயங்கள் மற்றும் பல வண்ணமயமான கலாச்சார விழாக்கள் உள்ளன. கேரளாவின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை நீங்கள் காண விரும்பினால், நிச்சயமாக இதைவிட சிறந்த இடம் இல்லை. இந்த நகரம் மனித குடியிருப்புகளின் பழமையான தளங்களில் ஒன்றாகும். கற்கால காலத்தைச் சேர்ந்த மெகாலித் மற்றும் டோல்மென்களின் பல நினைவுச்சின்னங்கள் உள்ளன. துடிப்பான திரிசூர் பூரம் திருவிழா பார்வையாளர்களை அதிக எண்ணிக்கையில் ஈர்க்கும் முக்கிய ஈர்ப்புகளில் ஒன்றாகும்.

திருச்சூரில் செய்ய வேண்டிய முக்கிய விஷயங்கள் : திருச்சூர் மிருகக்காட்சிசாலை, அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி, சக்தி தம்புரான் அரண்மனை, வியூர் சிறை பூங்கா, வடக்குண்ணநாதன் கோயில்கள், பரமேக்காவ் மற்றும் திருவம்பாடி.

# வேலைவாய்ப்பு கார்னர்

## வங்கியில் அதிகாரி வாய்ப்பு

பொதுத்துறையை சேர்ந்த சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சிறப்பு அதிகாரி பிரிவில் ஐ.டி., ஆபிசர் 82, சைபர் செக்யூரிட்டி 38, டிஜிட்டல் சப்போர்ட் 26, டிஜிட்டல் அப்ளிகேசன் 25, டேட்டா இன்ஜினியர் 15, டேட்டாபேஸ் அட்மின் 11, சாப்ட்வேர் டெவலப்பர் 6 உட்பட மொத்தம் 275 இடங்கள் உள்ளன. கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும். வயது: 30-45 (31.1.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 850. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 150 கடைசிநாள்: 23.3.2026

விவரங்களுக்கு: centralbank.bank.in

## சென்னை துறைமுகத்தில் பணி




சென்னைதுறைமுகஆணையத்தில்காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அக்கவுன்ட்ஸ் ஆபிசர் 2, டிராபிக் மேனேஜர் 2, அசிஸ்டென்ட் மேனேஜர் 2, எக்சிகியூட்டிவ் இன்ஜினியர் 3 உட்பட மொத்தம் 13 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / சி.ஏ., வயது: 18-35 (19.3.2026ன் படி) தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 300. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 200 கடைசிநாள்: 19.3.2026

விவரங்களுக்கு: chennaiport.gov.in

# சமூக பாதுகாப்பு வழங்கல் அமைப்பு இணையதளம்: தலைமைச் செயலாளர் முருகானந்தம் துவக்கினார்

**சென்னை, மார்ச் 17:**

தமிழ்நாடு முழுவதும் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு சேவைகள் மற்றும் நலத்திட்டங்களை திறம்பட நிர்வகிக்கவும், கண்காணிக்கவும், ஒருங்கிணைந்த சேவை மையங்களின் செயல்பாடுகளை மேலாண்மை செய்யவும் "சமூக பாதுகாப்பு வழங்கல் அமைப்பு" என்ற முழுமையான இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் முருகானந்தம் இணையதளத்தின் முதல் பதிப்பை துவக்கி வைத்தார்.

இந்த தளத்தின் மூலம் அரசு மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்கும் செயல்முறைகள் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன். பணிகளின் முன்னேற்றத்தை உடனுக்குடன் கண்காணிக்க முடியும். மேலும், களப் பணியாளர்கள், சேவை மையங்கள் மற்றும் அரசுத் துறைகள் இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, மாற்றுத்திறனாளிகளுக்கு சேவைகள் வெளிப்படையாகவும் விரைவாகவும் சென்றடைய உதவுகிறது.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் சோ.மதுமதி, மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் எம்.லக்ஷ்மி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் உலக வங்கி "உரிமைகள் திட்டம்" நிதியுதவியுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடைக்கோடியில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் சேவைகள் சென்றடையும் வகையில், அவர்களின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று மறுவாழ்வு சேவைகள் மற்றும் அரசின் நலத்திட்டங்களை வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

# பெரம்பூரில் ரூ.9 கோடியில் வட்டாட்சியர் அலுவலகம் திறப்பு

**சென்னை, மார்ச் 17:**



முதலமைச்சர் ஸ்டாலின் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை மாநகராட்சி சார்பில் 25 கோடியே 51 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவிலான முடிவுற்ற பணிகளையும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் 6 மேம்படுத்தப்பட்ட பள்ளிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பெரம்பூரில் 8 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 551 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேப்பர் மில்ஸ் சாலையில் வீனஸ் தியேட்டர் அருகில் சென்னை மாநகராட்சி சார்பில் 7 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சென்னை மாநகராட்சி அலுவலகக் கட்டடத்தையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரி, செல்லப்பா தெருவில் 2 கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தந்தை பெரியார் மாநகர ஆரம்ப சுகாதார நிலையத்தை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் 49,500 மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குகிறது. குறிப்பாக வெங்கடம்மாள் சமாதி தெரு, பொன்னியம்மன் கோயில் தெரு, கார்ப்பரேஷன் லேன், எஸ்.எஸ்.புரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மக்கள் பயன்பெறுவர். வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவில் சென்னையில் கன்னிகாபுரம், வெங்கடேசபுரம், புளியந்தோப்பு, ரெட்ஹில்ஸ் ஆகிய இடங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் 6 மேம்படுத்தப்பட்ட தொடக்க, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை முதலமைச்சர் திறந்து வைத்தார். பெரம்பூரில் 8 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டள்ள புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை முதலமைச்சர் திறந்து வைத்தார். பேப்பர் மில்ஸ் சாலையிலுள்ள எவர்வின் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 4,444 கட்சி நிர்வாகிகளுக்கு தோல் பை, நோட்டுப் புத்தகம் மற்றும் பேனா ஆகியவற்றை முதலமைச்சர் வழங்கினார். பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் 8-ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு பயிற்சி முடித்த 5,000 மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் வீட்டு உபயோகப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்., சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 22ந் தேதி சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் சார்பில் ஏஆர் ரகுமான் இசை நிகழ்ச்சி டிக்கெட் விற்பனை தொடங்கியது

**சென்னை, மார்ச் 17:**

டி20 உலகக் கோப்பை முடிந்த கையோடு 2026 ஐ.பி.எல் தொடரை கிரிக்கெட் ரசிகர்கள் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்நோக்கி உள்ளனர். வரும் மார்ச் 28ஆம் தேதி துவங்கும் 2026 ஐபிஎல் தொடர் மே 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 10 அணிகள் பங்கேற்கும் இந்த தொடர் சென்னை, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு மாநகரங்களில் நடைபெற உள்ளது.

தமிழ்நாட்டு ரசிகர்களின் ஆதரவைக் கொண்ட சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நட்சத்திர வீரர்களான தோனி, ருத்துராஜ், ஆயுஸ் மாத்ரே ஆகிய வீரர்கள் சென்னை நாவலூரில் உள்ள சிஎஸ்கே அகாடமியில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் ஐபிஎல் தொடர் துவங்குவதற்கு முன்பாகவே சிஎஸ்கே அணி சார்பில் ரசிகர்களுக்கு பிரமாண்ட கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரும் மார்ச் 22-ம் தேதி சி.எஸ்.கே நிர்வாகம் சார்பில் சேப்பாக்கம் மைதானத்தில் மாலை "Roar at Chepauk" என்ற பிரமாண்ட கலை மற்றும் விளையாட்டு நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கலை நிகழ்ச்சியில் இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான், சிறப்பு நேரலை இசை நிகழ்ச்சியை நடத்த உள்ளார். மேலும் இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சிஎஸ்கே அணியின் நட்சத்திர வீரர்களான சுரேஷ் ரெய்னா, முரளி விஜய், லட்சுமிபதி பாலாஜி, மாத்யூ ஹைடன், பத்ரிநாத் ஆகியோர் கலந்து கொண்டு ரசிகர்களை உற்சாகப்படுத்த உள்ளனர். குறிப்பாக இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சிஎஸ்கே வீரர்களுக்கும் தற்போது அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கும் இடையே சுவாரசியம் நிறைந்த கிரிக்கெட் போட்டிகள் நடைபெற உள்ளதாக சிஎஸ்கே அணி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிக்கான டிக்கெட்கள் விற்பனை இன்று காலை 11 மணிக்கு இணையதளத்தில் துவங்கியது. நிகழ்ச்சியில் பங்கேற்க விரும்பும் ரசிகர்கள், சிஎஸ்கே அணியின் அதிகாரப்பூர்வ இணையதளம் (chennaisuperkings.com), மூலமாகவும், chennaisuperkings மொபைல் ஆப் மூலமாகவும், District.in தளம் வாயிலாகவும் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்த பெற்றுக் கொள்ளலாம் என்று சிஎஸ்கே அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# சென்னை அருகே நாவலூரில் சிலிண்டர் வெடித்து வீடு இடிந்ததில் 2 குழந்தைகள் பலி; 7 பேர் படுகாயம்

**சென்னை, மார்ச் 17:**

செங்கல்பட்டு மாவட்டம் நாவலூர் சாமுண்டீஸ்வரர் நகர் 2வது தெருவில் உள்ள வீட்டில் குடியிருப்பு ஒன்றில் எதிர்பாராத விதமாக கியாஸ் சிலிண்டர் வெடித்துச் சிதறி அந்த வீடு முற்றிலும் இடிந்து தரைமட்டமானது. இந்தக் கோர விபத்தில் ஒன்றரை வயது ஆண் குழந்தை தீரன் மற்றும் 4 வயது பெண் குழந்தை கிரீஷிகா ஆகிய இருவரும் இடிபாடுகளுக்குள் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இடிபாடுகளுக்குள் சிக்கிப் பலத்த காயமடைந்த சஞ்சய் (31), சோனியா (26), சோனியாவின் தாயார் சித்ரா (46) மற்றும் பக்கத்து வீட்டில் வசிக்கும் பிரதீப் (7) என்ற சிறுவன் உள்ளிட்ட 7 பேர் படுகாயம் அடைந்தனர். அக்கம் பக்கத்தினர் அவர்களை மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். சிலிண்டர் வெடித்த வேகத்தில் விபத்து நடந்த வீடு மட்டுமின்றி, அருகில் இருந்த 3 வீடுகளும் சேதமடைந்தன. மேலும், அங்கிருந்த கார் மற்றும் இருசக்கர வாகனங்களும் உருக்குலைந்து போயின. தகவல் கிடைத்ததும் விரைந்து வந்த சிறுசேரி தீயணைப்புத் துறையினர் தீயை அணைத்துக் கட்டுப்படுத்தினர். சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் இறந்த 2 குழந்தைகளின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சிலிண்டர் கசிவு காரணமாக இந்த விபத்து நேரிட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என்பது குறித்து காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மாவட்ட உயர் அதிகாரிகள் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்தச் சம்பவம் நாவலூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியில் பெரும் பரபரப்பையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# சிலிண்டர் தட்டுப்பாடு: பா.ஜ.க. மீது ஸ்டாலின் குற்றச்சாட்டு

**சென்னை, மார்ச் 17:**

கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை குறிப்பிட்டு மத்திய அரசைக் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் இன்று கண்டனம் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி, கம்யூனிஸ்ட், தேமுதிக, மதிமுக உள்ளிட்ட தி.மு.க. கூட்டணி கட்சியை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற கண்டன போராட்டத்தை மேற்கொள்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: வெளியுறவுக் கொள்கையிலும் #FAILUREMODEL எனப் பெயரெடுத்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான முடிவுகளால் கடுமையான சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தொலைநோக்கு இல்லை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இல்லை. பொதுமக்களுக்குத்தான் இவர்களால் தொல்லை. இதனைக் கண்டித்து, தமிழ்நாடெங்கும் நமது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

களத்தில் தகிக்கும் மக்களின் கோபத்தை உணர்ந்து, ஒன்றிய அரசு உடனடியாக நிலைமையைச் சீர்செய்திட முன்வர வேண்டும் என தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# மகளிர் ஆதரவு இருக்கும் வரை, திமுக அரசை எவராலும் வீழ்த்த முடியாது: முதல்வர் ஸ்டாலின்!

**சென்னை, மார்ச் 17:**

மகளிர் ஆதரவு இருக்கும் வரை, திமுக அரசை எவராலும் வீழ்த்த முடியாது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.



திமுக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் ரமலான் நோன்பு துறப்பு விழா சென்னை, அமைந்தகரையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றுப் பேசியதாவது: திமுகவுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இடையேயான உறவு, இக்கட்சி தொடங்கிய காலத்திலிருந்தே தொடர்ந்து வருகிறது. இஸ்லாமியர்களுக்காக பல நலத்திட்டங்களை முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்தார். அவரது வழியில் இந்த அரசு சிறுபான்மையினருக்காக எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

திமுக அரசின் மிகப்பெரிய பலமே பெண்கள்தான். மகளிர் நலனை முன்வைத்துதான் ஏராளமான நலத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்ற ஜமாஅத் மாநாட்டில் நான் பேசும்போது, முஸ்லிம் பெண்கள்தான் அதிகமாகக் கை தட்டி அதை வரவேற்றார்கள்.

பெண்கள் நம்முடன் இருக்கும்போது,நம்மை யாராலும் வீழ்த்த முடியாது. அதிலும், இஸ்லாமிய சகோதரிகள் நம்முடன் இருக்கும்போது, நம்முடைய பலம் இன்னும் பல மடங்கு பெருகிவிடும். அனைத்து சிறுபான்மை இயக்கங்களும் இங்கே ஒரே மேடையில் சேர்ந்திருக்கின்றன. இந்த ஒற்றுமைதான், தமிழ்நாட்டுக்கும் அவசியம். ஏன் இந்தியாவுக்கும் அவசியம். ஆனால், இதற்கு நேர்மாறான நிலைமை, பாஜக ஆளும் மாநிலங்களில் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் மட்டுமல்லாது கிறிஸ்தவர்கள்கூட நிம்மதியாக கிறிஸ்துமஸ் கொண்டாட முடியவில்லை. குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என்றுகூட பார்க்காமல் தாக்குதலை நடத்துகின்றனர். இப்படி நாடு முழுவதும் சிறுபான்மையின மக்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறை பற்றி எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி ஏதாவது கருத்து சொன்னாரா?

அதிமுகவுடன் சேர்த்து, அவரது மனசாட்சியையும் பாஜகவிடம் அடகு வைத்துவிட்டார். பாஜகவுடன் கூட்டணி வைத்திருக்கும் அதிமுக, எப்படி சிறுபான்மையினரின் உரிமையையும், பாதுகாப்பையும் நிலைநாட்டும்?

இஸ்லாமியர்களுக்கு இன்னல் ஏற்படும்போது ஓடி ஒளிந்து கொள்பவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியாக இருந்தபோதும் சரி, இப்போது ஆட்சியில் இருக்கும்போதும் சரி, இஸ்லாமியர்களின் உரிமைகளுக்காக முதலில் குரல் கொடுப்பது திமுகதான். தொடர்ந்து களத்தில் இறங்கி போராடுகிறோம். அதனால்தான், சிறுபான்மையின மக்களும் திமுகவுக்கு துணையாக நிற்கிறார்கள் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின். இந்நிகழ்வில், சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர், மக்களவை உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, தயாநிதி மாறன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொகிதீன், சட்டப்பேரவை உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ், சிறுபான்மை மாநில ஆணைய முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## க்ரைம் கார்னர்

### மருத்துவமனையில் செல்போன் திருடிய 2 பேர் மீது பொதுமக்கள் தாக்குதல்

**கடலூர், மார்ச் 17:**

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் பகுதியைச் சேர்ந்தவர் ரவிக்குமார் (35). உடல்நலக்குறைவு காரணமாக,சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

ரவிக்குமார் நேற்றுமுன்தினம் அதிகாலை மருத்துவ மனையில் தூங்கிக் கொண்டிருந்தபோது திடீரென சத்தம் கேட்டு எழுந்து பார்த்தபோது, அவர் அருகில் வைத்திருந்த செல்போனை, 2 பேர் திருடிக் கொண்டு தப்பி ஓடினர். இதைப் பார்த்த ரவிக்குமார் உடனடியாக கூச்சலிட்டார். அவரது சத்தம் கேட்டு அருகிலிருந்தவர்கள் தப்ப முயன்ற இருவரையும் மடக்கிப் பிடித்து தர்ம அடி கொடுத்தனர். பின்னர், அவர்களை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவ மனை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். பிடிபட்டவர்கள் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு பகுதியைச் சேர்ந்த வினோத்குமார் (35), சென்னை புளியந்தோப்பைச் சேர்ந்த ஜாகீர் உசேன் (52) என்பது தெரிந்தது. இதையடுத்து, இருவரையும் போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். முன்னதாக, அவர்களிடமிருந்து 3 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

### மருத்துவ கல்லூரியில் சீட் வாங்கித் தருவதாக ரூ.11 லட்சம் மோசடி

**சென்னை, மார்ச் 17:**

மடிப்பாக்கம், ராம்நகர் வடக்கு, 3-வது தெருவைச் சேர்ந்தவர் அபர்ணா (43). இவருக்கு முகநூல் மூலம் கடந்தாண்டு திருநெல்வேலி டவுண் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீராம் கமல் (33) என்பவர் அறிமுகமானார். இவர் தனக்கு அரசு அதிகாரிகள் மட்டுமல்லாமல் அரசியல்வாதிகளையும் நன்கு தெரியும் என்றும், தான் நினைத்தால் மருத்துவக் கல்லூரிகளில் சீட் மற்றும் அரசு வேலைகளை கூட வாங்கித் தர முடியும் எனவும் தெரிவித்துள்ளார். இதை உண்மையென நம்பிய அபர்ணா தனது மகனுக்கு தனியார் மருத்துவக் கல்லூரியில் சீட் வாங்கித் தர வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் கமிஷனாக ரூ.11 லட்சம் கொடுத்துள்ளார்.

பணத்தை பெற்றுக் கொண்ட ஸ்ரீராம் கமல், உறுதியளித்தபடி சீட் வாங்கிக் கொடுக்கவில்லை. பெற்ற பணத்தையும் திரும்பக் கொடுக்கவில்லையாம். இதுகுறித்து அபர்ணா மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதையடுத்து ஸ்ரீராம் கமல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். முன்னதாக நடத்தப்பட்ட விசாரணையில், ஸ்ரீராம் கமல் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதும், இவர் மீது ஏற்கெனவே இதே போன்றதொரு வழக்கு மதுரை மாவட்டம், அண்ணாநகர் காவல் நிலையத்தில் உள்ளதும் தெரியவந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

### ஓசூரில் வாகன சோதனையின்போது காரை ஏற்றி காவலரை கொல்ல முயற்சி

**ஓசூர், மார்ச் 17:**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் ஜூஜூவாடி சோதனைச் சாவடியில் சிப்காட் போலீஸார் நேற்று மதியம் 3.30 மணியளவில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, கர்நாடக மாநிலம் பெங்களூருவிலிருந்து வந்த காரை நிறுத்த முயன்றனர். ஆனால், கார் நிற்காமல் தலைமை காவலர் ராஜீவ் காந்தி என்பவர் மீது மோதியதோடு, அதிவேகத்தில் சென்றது. இதில், காரின் பேனட்டில் ராஜீவ் காந்தி விழுந்த நிலையில், முன்பகுதியை பிடித்துக் கொண்டு தொங்கியபடி சென்றார். அப்போதும், ஓட்டுநர் காரை நிறுத்தவில்லை. இதையடுத்து, காவல் ஆய்வாளர் சையத் முபாரக் தலைமையிலான போலீஸார், அந்த காரை துரத்திச் சென்றதோடு, 4 கி.மீ. தூரத்தில் உள்ள தர்கா பகுதியில் பொதுமக்களின் உதவியுடன் காரை மடக்கிப் பிடித்து, ராஜீவ் காந்தியை மீட்டனர். இதில் அவருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. உடனடியாக அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். தொடர்ந்து காரை ஓட்டிய ஓசூர் காளேகுண்டா பகுதியைச் சேர்ந்த யாரப்பாஷா என்பவரை போலீஸார் கைது செய்தனர். மேலும், காரில் கடத்த முயன்ற 390 கிலோ குட்கா, கர்நாடகா மதுபாட்டில்கள் 48 மற்றும் காரை பறிமுதல் செய்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### இன்று 'டீம் இந்தியா' என்றால் 'வெற்றி' - ஜெய் ஷா பெருமிதம்

**புதுடெல்லி, மார்ச் 17:**

ஒருகாலத்தில் "ஆஸ்திரேலியா" என்ற பெயர் வெற்றியை குறித்தது போல, இன்று "டீம் இந்தியா" என்ற பெயரே உலக கிரிக்கெட்டில் வெற்றியின் அடையாளமாக மாறியுள்ளது என்று ஐசிசி சேர்மன் ஜெய் ஷா பெருமிதம் கொண்டுள்ளார்.

சமீபத்தில் இந்திய அணி டி20 உலகக் கோப்பையை வெற்றிகரமாக தக்க வைத்துக் கொண்ட முதல் அணியாக சாதனை படைத்தது. ஒரு தனியார் விருது வழங்கும் நிகழ்ச்சியில் பேசும்போது ஜெய் ஷா, "ஒரு காலத்தில் ஆஸ்திரேலியா என்றால் வெற்றி என்று அர்த்தம் கொண்டது. இன்று உலக கிரிக்கெட்டில் 'டீம் இந்தியா' என்ற பெயரே வெற்றியின் அடையாளமாக மாறியுள்ளது. அதுதான் இப்போது நிஜ நிலைமை. 2019 ஆம் ஆண்டு பிசிசிஐ செயலாளராக நான் பொறுப்பேற்றது முதல் 2026 வரை கடந்த ஏழு ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட் பல முக்கிய சாதனைகளைப் படைத்துள்ளது. இந்த காலத்தில் இந்தியா இரண்டு அண்டர்-19 ஆண்கள் உலகக் கோப்பை, இரண்டு அண்டர்-19 பெண்கள் உலகக் கோப்பை வெற்றிகள், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் ஒருமுறை இரண்டாம் இடம், ஒருமுறை ஒருநாள் உலகக் கோப்பையில் இரண்டாம் இடம், தொடர்ந்து இரண்டு டி20 உலகக் கோப்பைகள் மற்றும் 2025 சாம்பியன்ஸ் டிரோபி போன்ற வெற்றிகளைப் பெற்றுள்ளது. நான் பிசிசிஐயில் இருந்த போது 2028 ஒலிம்பிக் போட்டிகளை நோக்கித் திட்டமிட்டோம். பின்னர் சூரியகுமார் யாதவ் அணியின் கேப்டனாக பொறுப்பேற்றதும் நான் ஐசிசிக்கு சென்றேன். தற்போது பிசிசிஐயில் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்றுள்ள நிலையில், அனைவரும் சேர்ந்து 2030 மற்றும் 2032 ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு தயாராக வேண்டும்." என்றார்.

### "ஒருநாள் உலகக் கோப்பையை இந்தியா வெல்வதே இலக்கு" - கேப்டன் ஷுப்மன் கில் பகிர்வு

**மும்பை, மார்ச் 17:**

எதிர்வரும் 2027 ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பையை இந்தியா வெல்வதே இலக்கு என்று இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் ஷுப்மன் கில் தெரிவித்துள்ளார். தற்போது இந்திய அணியை ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் வழிநடத்தி வருகிறார்.

"தேசத்துக்காக உலகக் கோப்பை வெல்வதே பிரதான இலக்கு. அது குறித்து நான் அடிக்கடி சிந்திப்பது உண்டு. கடந்த முறை உலகக் கோப்பை தொடரின் இறுதி வரை முன்னேறி இருந்தோம். அடுத்த முறை நிச்சயம் அதை தகர்த்து பட்டம் வெல்வோம். தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் அடுத்த உலகக் கோப்பை தொடர் எங்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமையும்" என ஷுப்மன் கில் தெரிவித்துள்ளார்.

2027 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே மற்றும் நமீபியாவில் நடைபெறுகிறது. இந்த தொடர் அக்டோபர் முதல் நவம்பர் வரையில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2023 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணி இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் நடத்தை விதி அமல்: மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனுக்கள் பெட்டி!

**சென்னை, மார்ச் 17:**

தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததையடுத்து, மக்கள் மனுக்களை அளிப்பதற்கு, மனுக்கள் பெறப்படும் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.



2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டன. இதனால், அரசு அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் இருந்த போஸ்டர்கள், பேனர்கள் உள்ளிட்டவை அகற்றப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, பொதுமக்கள் அவர்களது கோரிக்கை மனுக்களை தபால் மூலமாகவும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் நுழைவு வாயில் வரவேற்பு பகுதியில் வைக்கப்பட்டுள்ள மக்கள் குறைதீர்வு மனுக்கள் பெறும் பெட்டியில் மனுக்களை செலுத்தும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் மனுக்கள் பெறப்படும் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

மனுக்களை அளிக்க வரும் பொதுமக்கள், அவர்களது மனுக்களை அந்தப் பெட்டியில் இட்டுச் செல்லலாம். அதற்காக பணியாளர்கள் நியமிக்கப்பட்டு புகார் பெட்டி நிறைந்தவுடன், அவற்றை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

இந்தப் பெட்டியில் பெறப்படும் மனுக்களை அதிகாரிகள் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குழந்தைகளுக்கான தமிழ்ப் பெயர்கள்: பரிந்துரைக்க முதல்வர் ஸ்டாலின் அழைப்பு!

**சென்னை, மார்ச் 17:**

குழந்தைகளுக்கான தமிழ்ப் பெயர்களை பரிந்துரைக்குமாறு பொதுமக்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.



குழந்தைகளுக்கு தமிழில் பெயர்கள் சூட்டுவதற்காக பிரத்யேக இணையப் பக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக முதல்வர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு:

தமிழ்நாடு தமிழ்ப் பெயர்களால் நிறையட்டும். நான் நடத்தி வைக்கும் ஒவ்வொரு திருமணத்திலும், பிறக்கின்ற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள் என மணமக்களிடம் கோரிக்கை விடுப்பேன்.

அதற்கான பெயர்களையும் அவற்றின் பொருளோடு சேர்த்து உங்களுக்கு இப்போது வழங்கியிருக்கிறோம். தொடர்ந்து புதிய பெயர்களைப் பதிவேற்றுவோம். நீங்களும் (பொதுமக்கள்) பரிந்துரைத்துப் பங்களிக்கலாம் என்று அதில் முதல்வர் பதிவிட்டுள்ளார்.

## தேசிய வருவாய் வழி, திறன் படிப்பு உதவித்தொகை: 6,695 மாணவர்கள் தேர்வு!

**சென்னை, மார்ச் 17:**

தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்பு உதவித்தொகை திட்ட பயனாளிகளை தேர்வு செய்வதற்கான தேர்வில் இறுதியாக 6,695 பள்ளி மாணவர்கள் தகுதி பெற்றுள்ளதாக தமிழக அரசுத் தேர்வுகள் இயக்ககம் இறுதிப் பட்டிலை ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டது.



இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு: தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 8- ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்பு உதவித் தொகை (என்எம்எம்எஸ்) வழங்கப்படுகிறது.

இதில் 2025-2026- ஆம் கல்வியாண்டுக்கு இந்த என்எம்எம்எஸ் திட்டத்தின் கீழ் படிப்பு உதவித்தொகை வழங்க அரசு தேர்வு இயக்ககத்தால் கடந்த ஜன. 10- இல் தேர்வு நடத்தப்பட்டது.

இத்தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண் விவரங்கள் கடந்த பிப். 18 - ஆம் தேதி வெளியிடப்பட்டது. இருப்பினும், மாணவர்களின் பிறந்த தேதி, இனப்பிரிவு உள்ளிட்ட திருத்தங்களுக்கு கடந்த பிப். 18 முதல் 24- ஆம் தேதி வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டது. இந்தத் திருத்தங்கள் நிறைவு பெற்று தற்போது தேர்வானவர்கள் இறுதிப் பெயர் பட்டியல் பள்ளிகளின் பெயர்களோடு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழகம் முழுவதும் 6,695 மாணவர்கள் தகுதி பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஊக்கத்தொகைக்கான தெரிவுப் பட்டியலை இணையதளத்தில் (மற்ற தேர்வுகள் பிரிவில்) தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு முடிவுகள் என்ற பக்கத்தில் காணலாம்.

மேலும், இந்தப் பட்டியல் பள்ளிக் கல்வி இயக்ககத்தால் பிற தகுதிகள் சார்ந்த பரிசீலனைக்கும் உள்பட்டதாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வணிகச் செய்திகள்

### உணவு பாதுகாப்பு தரச் சான்றிதழை இனி புதுப்பிக்க தேவையில்லை: எப்எஸ்எஸ்ஏஐ அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 17:**

உணவுப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு தேவையான இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (எப் எஸ் எஸ் ஏஐ) பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள் இனி நிரந்தரமாகச் செல்லும் என்றும் அவற்றைப் புதுப்பிக்கத் தேவையில்லை என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக எப்எஸ்எஸ்ஏஐ கடந்த 13-ம் தேதி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவில் உணவுப் பாதுகாப்புத் தரத்தை வலுவாகப் பராமரிக்கும் அதே வேளையில், தொழில் செய்வதை எளிதாக்கும் நோக்கத்துடன் கூடிய முக்கிய ஒழுங்குமுறை மற்றும் நடைமுறைச் சீர்திருத்தங்களுக்கு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் தொழில் துறையினருடன் நடத்தப்பட்ட விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகு இந்தச் சீர்திருத்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. இவை நிதி ஆயோக் அமைத்த நிதி சாரா ஒழுங்கு முறை சீர்திருத்தங்களுக்கான உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்கவும் அமைந்துள்ளன. இதன்படி, உணவுப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் (எப்எஸ்எஸ்ஏஐ) வழங்கப்படும் பதிவுகள் மற்றும் உரிமங்கள் இனி வாழ்நாள் முழுவதும் செல்லுபடியாகும்.

## விளாத்திகுளம் மாணவி வழக்கில் 5 பேரிடம் டிஎன்ஏ பரிசோதனை: உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்

**மதுரை, மார்ச் 17:**

தூத்துக்குடியை சேர்ந்த வழக்கறிஞர் மாரீஸ்வரி, விளாத்திகுளத்தில் 12 ஆம் வகுப்பு சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்ட வழக்கை சிபிஐக்கு மாற்றக் கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்துள்ளார்.



இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில், "ஆய்வக பரிசோதனை முடிவுகள் வரவேண்டியுள்ளது. சிசிடிவி காட்சிகளைக் கொண்டு சந்தேகத்துக்குரிய மானவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சந்தேகத்துக்கு இடமானவர்களிடம் டிஎன்ஏ மாதிரிகள் பெறப்பட்டு விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

5 பேரிடம் டிஎன்ஏ பரிசோதனைக்காக ரத்த மாதிரி சேகரிக்கப்பட்டுள்ளது," எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், "விசாரணை சரியான முறையில் சென்று வருகிறது. பெற்றோர் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். வாக்குமூலத்தை வீடியோ, ஆடியோவாக பதிவு செய்ய வேண்டும். நடவடிக்கை எடுக்காத காவல்துறையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அறிவியல் முறையில் விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.

மாணவி காணவில்லை என்பது முக்கியமான புகார். அதில் காவல்துறையினர் அலட்சியத்துடன் செயல்படக்கூடாது.

விசாரணை குறித்த நிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை ஏப்ரல் 2 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது," என உத்தரவிட்டனர்.

# பத்ம விருதுகளுக்கான விண்ணப்பங்கள் தொடக்கம்: ஜூலை 31-இல் நிறைவு!

புதுடெல்லி, மார்ச் 17:

2027-ஆம் ஆண்டு பத்ம விருதுகளுக்கான விண்ணப்பிக்கும் நடைமுறை ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

நிகழாண்டு ஜூலை 31-ஆம் தேதியுடன் விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசம் நிறைவடைகிறது.

பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு வழங்கப்படும் இந்த விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்களின் பெயர்கள் 2027, ஜனவரி 26-ஆம் தேதி அறிவிக்கப்படவுள்ளது.



இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'கலை, இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூக சேவை, அறிவியல் மற்றும் பொறியியல், பொது விவகாரங்கள், வார்த்தகம் மற்றும் தொழில் உள்பட பல்வேறு துறைகளில் சாதனைகளை புரிபவர்களுக்கு 1954-ஆம் ஆண்டு முதல் பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குடிமக்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றாக கருதப்படும் பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்ம ஸ்ரீ ஆகியவற்றுக்கு ராஷ்ட்ரீய புரஸ்கார வலைதளத்தில் மார்ச் 15 முதல் இணைய வழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான காலஅவகாசம் ஜூலை 31-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் தவிர பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் உள்பட அரசு ஊழியர்கள் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்க முடியாது. இனம், பணி, நிலை அல்லது பாலினம் ஆகிய வேறுபாடுகளின்றி குடிமக்கள் அனைவரும் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது பரிந்துரைக்கலாம். மத்திய உள்துறை அமைச்சகத்தின் வலைதளத்தில் விருதுகள் என்ற தலைப்பிலும் வலைதளத்திலும் பத்ம விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை விளக்கமாக பதிவிடப்பட்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

## ரூ. 2 லட்சம் மோசடி: தொழிலதிபரிடம் கைவரிசை காட்டிய மோசடி கும்பல்

மும்பை, மார்ச் 17:

மராட்டிய மாநிலம் தானே நகரில் வியாபாரி வைரல் படேல் என்பவர் இனிப்புக் கடை நடத்தி வருகிறார். இந்நிலையில் நேற்று முன் தினம் வைரல் படேல் தனது இனிப்பு கடையில் வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது, இரண்டு நபர்கள் அவரைச் சந்தித்து தங்களை சமூக ஆர்வலர்கள் (RTI) என்று கூறிக்கொண்டனர்.

மேலும் வைரல் படேலின் கடைகளை மாநகராட்சி அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்ய வைத்து, அவற்றை நிரந்தரமாக மூட செய்துவிடுவதாக மிரட்டல் விடுத்தனர். இந்த மிரட்டலால் அதிர்ச்சியடைந்த படேல், உடனடியாகத் தானே குற்றப்பிரிவு காவல் நிலையதிற்கு சென்று தன்னிடம் ரூ.5 லட்சம் பணம் கேட்டு மிரட்டுவதாக அந்த இருவர் மீதும் புகார் அளித்தார்.

அந்த புகாரைப் பெற்றுக்கொண்ட போலீசார் மிகவும் துரிதமாகச் செயல்பட்டு விரிவான விசாரணையைத் தொடங்கினர்.

இதன்படி அந்த இரு நபர்களை கையும் களவுமாகப் பிடிக்க வசந்த் விஹார் பகுதியில் ரூ.2 லட்சம் பணத்தை படேலிடம் கொடுத்து அனுப்பினர். இந்த பணத்தை வைரல் படேலிடம் இருந்து அக்ஷய் ஜெயந்த் கரஞ்சவ்கர் மற்றும் சுஷாந்த் சஞ்சய் ஆகிய இருவரும் வாங்கிய போது, அங்கு மறைந்திருந்த போலீசார் அவர்களைச் சுற்றி வளைத்து அதிரடியாக கைது செய்தனர்.

முதற்கட்ட விசாரணையில், கைது செய்யப்பட்ட கரஞ்சவ்கர் ஏற்கனவே, தானே மாநகராட்சியில் நடந்த ஒரு லஞ்ச ஊழல் வழக்கிலும் தொடர்புடையவர் என்பது தெரியவந்தது.

## ரவுடியை மணமேடையில் கைது செய்த ம.பி. போலீஸார்

போபால், மார்ச் 17:

ம.பி. மாநிலம் போபாலை சேர்ந்தவர் ஆகாஷ் நீல்கந்த் (என்கிற) புரா. அப்பகுதியில் இவர் மீது கொலை, கொள்ளை, மிரட்டல், கடத்தல் உட்பட 31 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்நிலையில் இவரும், அதே பகுதியைச் சேர்ந்த சீமாவும் 6 ஆண்டுகளாக காதலித்து வந்தனர். இருவருக்கும் அண்மையில் திருமணம் நிச்சயமானது. கடந்த 11ம் தேதி போபாலில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் திருமணச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது அங்கு வந்த போலீஸார் திருமணக் கோலத்தில் இருந்த ஆகாஷை கைது செய்தனர்.

இதைப் பார்த்த மணமகள் சீமா கண்ணீர் மல்கக் கூறும்போது, "திருமணம் நடைபெறாவிட்டால் எனது வாழ்க்கை நாசமாகி விடும். இதில் எனது தவறு என்ன இருக்கிறது ? அவர் என்ன தவறு செய்தார் என்று எனக்கு தெரியவில்லை.

2 மணி நேரம் காத்திருந்து திருமணம் நடந்த பின்னர் அழைத்துச் செல்லுங்கள். உங்கள் காலில் விழுந்து கெஞ்சுகிறேன்" என்று கூறி போலீஸார் காலில் அவர் விழுந்து அழுதார்.

ஆனால் போலீஸாரோ, "ஆகாஷ் மீது ஏராளமான வழக்குகள் உள்ளன. இவர்கள் திருட்டு கும்பலைச் சேர்ந்தவர்கள். சட்ட விரோதத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவரை விட முடியாது" என்று தெரிவித்துவிட்டு ஆகாஷை அழைத்துச் சென்றனர். இதைத் தொடர்ந்து திருமணம் நின்றுபோனது.

## மத்திய கிழக்கு பதற்றம் எதிரொலி: வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் ஏர் இந்தியா விமானங்களுக்கு மத்திய அரசு சலுகை!

புதுடெல்லி, மார்ச் 17:




மத்திய கிழக்கு பதற்றம் எதிரொலியாக, வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் ஏர் இந்தியா விமானங்களுக்கு மத்திய அரசு, விமானம் பறக்கும் நேரம் தொடர்பான விதிகளை தளர்த்தியுள்ளது.

ஈரான், இஸ்ரேல்-அமெரிக்கா இடையேயான போரால் மத்திய கிழக்கு ஆசியாவில் பதற்றம் நிலவுகிறது. இதனால் முன்னெச்சரிக்கையாக ஈரான், இராக் வான் பகுதியை பயணிகள் விமானங்கள் தவிர்த்து வருகின்றன.

குறிப்பாக, இந்தியாவில் இருந்து ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா நாடுகளுக்கு செல்லும் ஏர் இந்தியா விமானங்கள், ஈரான், இராக் வான் பகுதிகளை தவிர்த்து, எகிப்து வழியாக சுற்றி செல்கின்றன. இதனால் பயண நேரம் கூடுதலாகிறது.

இதை கருத்தில் கொண்டு மத்திய விமான போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) விமானிகளுக்கான பறக்கும் நேர கட்டுப்பாடு விதிகளை ஏப்ரல் மாதம் 30ஆம் தேதி வரை தளர்த்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது பறக்கும் நேரம் 1.30 மணி நேரம் முதல் 11.30 மணி நேரம் வரையும், பணி நேரம் 1.45 மணி நேரம் முதல் 11.45 மணி நேரம் வரையும் நீட்டிக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து ஏர் இந்தியா மற்றும் டிஜிசிஏ-வை தொடர்பு கொண்டு செய்தியாளர்கள் கூடுதல் விவரம் பெற முயற்சித்தனர். ஆனால் அதற்கு எந்தப் பதிலும் இல்லை.

இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு இண்டிகோ நிறுவனமும் விமானங்களை இயக்குகிறது.

அந்த நிறுவனத்துக்கும் விதிகள் தளர்வு அளிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து தகவல் இல்லை.

## டெல்லி, கொல்கத்தாவில் ரூ.14.13 கோடி மதிப்பிலான கடத்தல் தங்கம், பணம் பறிமுதல்

புதுடெல்லி, மார்ச் 17:



கொல்கத்தா நகரில் இருந்து டெல்லிக்கு ரெயில் மூலம் தங்க கடத்தல் நடைபெறுகிறது என கிடைத்த தகவலை தொடர்ந்து வருவாய் நுண்ணறிவு இயக்குநரகத்தின் அதிகாரிகள் உஷாரானார்கள். அவர்கள் புதுடெல்லி ரெயில் நிலையத்திற்கு வெளியே தயாராக இருந்தனர்.

அப்போது, வெளியே வந்த சந்தேகத்திற்குரிய நபரை பிடித்து விசாரித்ததில், அவர் தங்க கடத்தலில் ஈடுபட்டது தெரிய வந்தது.

இதுபற்றி மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், வெளிநாட்டு தங்கம் கடத்தப்பட்டு இந்தியாவுக்குள் ரெயில் வழியே, கொண்டு வரப்பட்டு உள்ளது.

அதனை உருக்கி, சட்ட விரோத வகையில் உருமாற்றம் செய்து, உள்ளூரில் கள்ளச்சந்தையில் விற்க முயன்றுள்ளனர். அவற்றின் மொத்த மதிப்பு ரூ.14.13 கோடியாகும்.

இதுதொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர் என தெரிவித்து உள்ளது.

அவர்களிடம் இருந்து ரூ.13.41 கோடி மதிப்பு கொண்ட 8.286 கிலோ தங்கம், ரூ.19.67 லட்சம் மதிப்பிலான 7.35 கிலோ வெள்ளி மற்றும் இந்திய மதிப்பில் ரூ.51.74 லட்சம் பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. சுங்க சட்ட பிரிவுகளின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# "இந்தியாவை இழிவுபடுத்துகிறார் ராகுல் காந்தி" - அமித் ஷா கடும் தாக்கு

புதுடெல்லி, மார்ச் 17:



டெல்லி ஏஐ மாநாட்டில் இளைஞர் காங்கிரஸார் அரை நிர்வாண போராட்டங்களை நடத்தியதன் மூலம் இந்தியாவை உலக நாடுகளின் மத்தியில் ராகுல் காந்தி இழிவுபடுத்தி வருகிறார் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று தெரிவித்தார்.

அசாம் மாநிலம் குவாஹாட்டியில் ரூ.2,092 கோடி மதிப்பிலான நலத் திட்டங்களை நேற்று தொடங்கி வைத்த அமித் ஷா பேசியதாவது: தலைநகர் டெல்லியில் பாரத் மண்டபத்தில் கடந்த மாதம் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தாக்க மாநாட்டின் போது, இளைஞர் காங்கிரஸார் மேலாடையின்றி அரைநிரவாணப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது, கடும் கண்டனத்துக்கு உரியது.

பிரதமர் மோடியையும் பாஜகவையும் விமர்சிக்கிறேன் என்ற பெயரில் ராகுல் காந்தி இந்தியாவையே இதுபோன்ற போராட்டங்களின் மூலம் எதிர்க்கத் தொடங்கியுள்ளார். சர்வதேச நாடுகள் பங்கேற்ற மாநாட்டில் ஆடையைக் களைந்து போராட்டம் நடத்தியதன் மூலம் காங்கிரஸ் கட்சி நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது. நாங்களும் எதிர்க் கட்சியாக இருந்திருக்கிறோம். ஆனால் வரைமுறைகளை தாண்டியதில்லை.

உலகம் முழுவதும் இந்தியாவின் வளர்ச்சியைப் பார்க்கவும், முதலீடு செய்யவும் திரண்டிருந்த வேளையில், அந்தத் தளத்தை ராகுல் காந்தி தனது சொந்த அரசியலுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்.

இந்தச் செயலுக்கு அவர் மன்னிப்புக் கேட்பதற்குப் பதிலாக, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சிங்க இதயம் கொண்டவர்கள் என்று பாராட்டி பேசியது அவரது பொறுப்பற்றத்தனத்தை எடுத்துக் காட்டுகிறது. பாஜகவை எதிர்ப்பதற்கு உங்களுக்கு முழு உரிமை உண்டு, ஆனால் உலக அரங்கில் இந்திய இளைஞர்களுக்கான வாய்ப்புகளை இது போன்ற போராட்டங்கள் முடக்கிப் போட்டுவிடும். உங்களை மக்கள் மன்னிக்க மாட்டார்கள். சுகாதாரத் துறையில் சாதனை சுகாதாரத் துறையில் அசாம் தன்னிறைவு பெற்றுள்ளது.

புற்றுநோய் சிகிச்சைக்காக சென்னை, மும்பை, கர்நாடகா மற்றும் டெல்லி போன்ற பல இடங்களுக்கு அலைந்த அசாம் மக்கள், இனி தங்கள் மாநிலத்திலேயே உயர் சிகிச்சை பெறும் வசதி செய்யப்பட்டுள்ளது. இங்கு மருத்துவம் படிப்பதற்கான வாய்ப்புகள் இருந்தால், இந்திய மாணவர்கள் வெளிநாடு செல்ல வேண்டிய தேவை இருக்காது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மேற்கு வங்கத்தில் அர்ச்சகர்கள் மதிப்பூதியம் ரூ.500 உயர்வு

கொல்கத்தா, மார்ச் 17:

மேற்கு வங்கம் உட்பட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் தேதிகளை தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

நமது சமூகங்களின் ஆன்மிக மற்றும் சமூக வாழ்க்கையை நிலை நிறுத்தும் நமது அர்ச்சகர்கள் மற்றும் மசூதிகளில் தொழுகைக்கு அழைப்பவருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர மதிப்பூதியத்தை ரூ.500 உயர்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம் அவர்கள் இனி மாதம் ரூ.2,000 பெறுவார்கள். மேலும், அனைத்து புதிய விண்ணப்பங்களும் ஏற்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நீதிமன்றங்கள் சேவை மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும்: உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி!

புதுடெல்லி, மார்ச் 17:

ஹிமாசல பிரதேச மாநிலம் மண்டியில் நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு தலைமை நீதிபதி சூர்ய காந்த் ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நாட்டினார். இதைத்தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், 'வழக்குகளை விசாரிப்பதற்கான வசதிகள் அதிகரிக்கும்போது, நீதித்துறைக்குப் பெரும் பொறுப்பு ஏற்படுகிறது.

விவாதங்களில் அடிப்படை உரிமைகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. அதேவேளையில், அடிப்படை கடமைகளும் அரசமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாகும். அந்தக் கடமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். இந்தக் கடமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

நிவாரணம் மற்றும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் நீதிமன்றத்தை நாடுகின்றனர். எனவே மருத்துவமனைகளைப் போல சேவை மனப்பான்மையுடன் நீதிமன்றங்கள் செயல்பட வேண்டும்' என்றார்.

## சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் இருக்கும் 3,525 பொதுநல வழக்குகள் - மத்திய சட்ட அமைச்சகம் தகவல்

புதுடெல்லி, மார்ச் 17:

பொதுமக்களின் நலனை பாதிக்கும் விஷயம் குறித்து பாதிக்கப்பட்ட நபரோ, வேறு ஒரு தனிநபரோ அல்லது அரசு சாரா அமைப்புகளோ கோர்ட்டில் தொடருவதுதான் பொதுநல வழக்கு ஆகும். பொதுமக்களின் கடிதங்கள் அல்லது ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் அடிப்படையில் தன்னிச்சையாகவே கோர்ட்டுகள் பொதுநல வழக்குகளை விசாரிக்க முடியும். சுற்றுச்சூழல் மாசு அடைவதை தடுத்தல், மனித உரிமை மீறல்கள், சாலை பாதுகாப்பு, ஊழல் ஒழிப்பு மற்றும் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் உள்ளிட்டவை இதன் நோக்கமாகும். இந்த நிலையில் கடந்த 10-ந்தேதி வரையிலான நிலவரப்படி சுப்ரீம் கோர்ட்டில் 3 ஆயிரத்து 525 பொதுநல வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில் 10 வருடத்தையும் கடந்த வழக்குகள் 698 ஆகும். கடந்த 2014 முதல் 2026 வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் 3 ஆயிரத்து 66 பொதுநலன் சார்ந்த வழக்குகள் தேக்கம் அடைந்திருக்கின்றன. இதில் அதிகபட்சமாக கடந்த ஆண்டு (2025) 570 வழக்குகள் தேங்கியிருக்கிறது. இதேபோல கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 1,872 பொதுநல வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தகவலை மத்திய சட்ட மற்று நீதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## டெல்லி மெட்ரோவில் 2025-ம் ஆண்டில் 235.8 கோடி பயணிகள் பயணம்

புதுடெல்லி, மார்ச் 17:

டெல்லி மெட்ரோ, உலகின் 3-ம் பெரிய மெட்ரோ நெட்வொர்க் என்ற பெருமையை கொண்டது. 26 நகரங்களில் 1,143 கி.மீ. தொலைவை உள்ளடக்கிய இந்த நெட்வொர்க்கை பயன்படுத்தி தினசரி சராசரியாக 1.15 கோடி பேர் பயணம் செய்கின்றனர்.

நாடு முழுவதும் உள்ள மெட்ரோ ரெயில் அமைப்புகளில் 55 சதவீதம் பேர் டெல்லி மெட்ரோவை பயன்படுத்தி வருகின்றனர். இதில், கடந்த 2025-ம் ஆண்டில் டெல்லி மெட்ரோவில் 235.8 கோடி பயணிகள் பயணம் செய்திருக்கின்றனர்.

இது, அதற்கு முந்தின 2024-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, (223.5 கோடி பேர்) 12.3 கோடி கூடுதல் ஆகும். இதேபோன்று, 2025-ம் ஆண்டில் தினமும் 64.60 லட்சம் பேர் டெல்லி மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். இதில், 2025-ம் ஆண்டு ஆகஸ்டு 8-ந்தேதி அதிக அளவாக 81 லட்சத்து 87 ஆயிரத்து 674 பேர் ஒரே நாளில் பயணித்தது சாதனை பதிவாக உள்ளது.

## கூகுள் பிளே ஸ்டோரில் சாட்ஜிபிடியை முந்திய இந்தியன் ஆயில் நிறுவனம்

புதுடெல்லி, மார்ச் 17:

ஈரான் - அமெரிக்கா போரால் சர்வதேச அளவில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தியை மூடியதால் அந்த வழியாக எண்ணெய் கப்பல்கள் செல்ல முடியாத நிலை உள்ளது. இந்தியா தனது எரிபொருள் தேவைக்கு பெரிதும் இறக்குமதியை நம்பியுள்ளது. இதனால், ஈரான் - அமெரிக்கா போரால் இந்தியாவில் எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு நிலவுவதால் ஹோட்டல்கள் பலவும் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. வீட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் கிடைத்தாலும் மக்கள் அச்சத்தில் அதிக அளவில் புக்கிங் செய்ய ஆரம்பித்துள்ளனர். செல்போன் எண் மூலமாக புக் செய்ய முடியவில்லை எனக் கூறி ஆயில் நிறுவனங்களின் செயலியை பதிவிறக்கம் செய்து புக்கிங் செய்யத் தொடங்கினர். இதனால், கூகுள் பிளே ஸ்டோரில் அதிகம் டவுன்லோடு செய்யப்பட்ட செயலிகள் பட்டியலில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் இந்தியன் ஆயில் ஒன் செயலி முதலிடம் பெற்றுள்ளது.

## ஆப்கனில் உள்ள ராணுவ மையம், சுரங்கம் மீது தாக்குதல் நடத்தினோம்: பாகிஸ்தான் ராணுவ வட்டாரங்கள் தகவல்



**இஸ்லாமாபாத், மார்ச் 17:**

பாகிஸ்தானில் நடைபெறும் தீவிரவாத சம்பவங்களுக்கு தெஹ்ரிக்-இ-தலிபான்கள் தான் காரணம் என்றும் இவர்களுக்கு ஆப்கானிஸ்தான் அடைக்கலம் கொடுப்பதாகவும் பாகிஸ்தான் குற்றம் சாட்டுகிறது. ஆனால் இதை ஆப்கானிஸ்தான் மறுக்கிறது. இந்த விவகாரம் காரணமாக பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் கடந்த சில வாரங்களாக மோதல் நடைபெறுகிறது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் உள்ள ராணுவ தலைமையகம் உட்பட 3 இடங்கள் மீது ஆப்கானிஸ்தான் ட்ரோன் தாக்குதல் நடத்தியது. அவற்றை பாகிஸ்தான் ராணுவம் தகர்த்தது. தலிபான்கள் பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதற்கு சரியான பதிலடி கொடுக்கப்படும் என பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி ஜர்தாரி கூறியிருந்தார். அதன்படி ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் உள்ள ராணுவ மையங்கள், மலைப்பகுதியில் உள்ள தலிபான் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் ஆகியவற்றை குறிவைத்து பாகிஸ்தான் நேற்று விமானம் மூலம் குண்டு வீசியது. தலிபான் தலைவர் ஹிபதுல்லா அகுந்ஜடா ஆகியோர் இருக்கும் காந்தகாரில் உள்ள தொழில்நுட்ப கருவிகள் மையம், கிடங்குகள் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டன. காந்தகாரில் ஆப்கன் தலிபான்கள், மற்றும் பாகிஸ்தானின் தெஹ்ரிக் இ தலிபான்கள் பயன்படுத்தும் சுரங்கங்கள் மீதும் பாகிஸ்தான் விமானப்படை தாக்குதல் நடத்தியது. காந்தகாரில் பாகிஸ்தான் போர் விமானங்கள் இரவு நேரத்தில் தாக்குதல் நடத்தியதாக காந்தகார் மக்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து தலிபான் அரசின் செய்தி தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் கூறுகையில், "காபூல், காந்தகார், பக்திகா ஆகிய இடங்களில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பாகிஸ்தான் விமானங்கள் குண்டு வீசின. இதில் பலர் இறந்தனர். காந்தகாரில் போதைப் பொருள் மறுவாழ்வு மையம் மற்றும் காலி கன்டெய்னர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தான் கூறும் ராணுவ மையங்கள் எல்லாம் வெகு தொலைவில் உள்ளன" என்றார்.

## போர் நீடிப்பு: துபாய், குவைத் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்

**துபாய், மார்ச் 17:**

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய், குவைத், சவுதி அரேபியா, பஹ்ரைன், கத்தாரை குறிவைத்து ஈரான் ராணுவம் நேற்று ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே நேற்று 16-வது நாளாக போர் நீடித்தது. ஈரானின் பார்சு மாகாண தலைநகர் சிராசுவில் அந்த நாட்டின் ராணுவ தளம் உள்ளது. அங்கு ஏவுகணைகள் சேமித்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதைத் தொடர்ந்து சிராசுவில் உள்ள ராணுவ முகாம்களை குறிவைத்து அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று தாக்குதல் நடத்தின.

இதில் ஈரான் ராணுவ தளங்கள் கடுமையாக சேதமடைந்தன. இதேபோல ஈரானின் இஸ்பகானில் உள்ள ராணுவ முகாம்களை குறிவைத்தும் அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் வான் வழி தாக்குதலை நடத்தின. ஈரான் முழுவதும் இதுவரை 1,400-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலுக்கு பதிலடியாக மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் நேற்று ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது. ஐக்கிய அரபு அமீரக தலைநகர் அபுதாபி, துபாய் பகுதிகளில் அமெரிக்க விமானப் படைத் தளங்கள் செயல்படுகின்றன. இந்த தளங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் நேற்று ஏவுகணைகளை வீசியது. மேலும் துபாய் மெரினா கடற்கரை, அல் சூபவ் பகுதிகளில் ஈரான் ஏவுகணைகள் விழுந்து வெடித்துச் சிதறின.

ஐக்கிய அரபு அமீரகத்தின் புஜாயிரா துறைமுகத்தின் மீது ஈரான் ராணுவம் நேற்று முன்தினம் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது.

## டிரம்ப் அச்சுறுத்தலை மீறி கால்பந்து உலகக் கோப்பையில் பங்கேற்க ஈரான் முடிவு!

**தெஹ்ரான், மார்ச் 17:**

ஈரான் ஆண்கள் கால்பந்து அணி அமெரிக்க அதிபரின் அச்சுறுத்தலை மீறி வரவிருக்கும் கால்பந்து உலகக் கோப்பை போட்டிகளில் பங்கேற்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளை இந்தாண்டு அமெரிக்கா, கனடா மற்றும் மெக்ஸிகோ நாடுகள் இணைந்து நடத்துகின்றன. வருகிற ஜூன் 11 முதல் ஜூலை 19 வரை இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன.




அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் போர் உச்சமடைந்துள்ள நிலையில் உலகக் கோப்பை போட்டிகளில் ஈரான் பங்கேற்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மேலும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது ட்ருத் சோசியல் சமூக வலைதளப் பக்கத்தில், "ஈரான் அணி உலகக் கோப்பை போட்டிகளுக்கு வரவேற்கப்படுகிறது. ஆனால், அவர்களின் உயிர் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த நேரத்தில் அவர்கள் இங்கு வருவது சரியாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

இதுதொடர்பாகப் பேசிய ஆசிய கால்பந்து கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் விண்ட்சர் பால் ஜான், "நாங்கள் ஈரான் அணி விளையாடுகிறதா, இல்லையா என்பது பற்றி தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். தற்போது வரை அவர்கள் உலகக் கோப்பையில் விளையாடுவது உறுதி. உலகக் கோப்பையில்பங்கெடுக்கவில்லை என அதிகாரப்பூர்வமாக ஈரான் அணி எங்கும் சொல்லவில்லை.

சிறந்த அணியான ஈரான் உலக அரங்கில் நடைபெறும் போட்டியில் கண்டிப்பாக விளையாட வேண்டும். எனவே, அவர்கள் தங்கள் பிரச்னைகளைத் சரிசெய்து உலகக் கோப்பையில் பங்கெடுப்பார்கள்" எனத் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் சமீபத்தில் நடைபெற்ற ஆசிய பெண்கள் கால்பந்து போட்டிகளில் ஈரான் பெண்கள் அணி பங்கேற்றது. இதில், ஈரான் தேசிய கீதத்தைப் பாட அவர்கள் மறுத்த நிலையில் அவர்களை ஈரான் 'துரோகிகள்' என அடையாளப் படுத்தியதாக செய்திகள் வெளியாகின.


இதனைத் தொடர்ந்து, ஈரான் கேப்டன் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைய வீரர்களுக்கு அனுமதி கேட்டிருந்த நிலையில் தற்போது அதனை மறுத்த அவர்கள், 2 பேர் தவிர்த்து அனைவரும் விமானம் மூலம் மலேசியா வழியே ஈரான் கிளம்பினர்.

ஈரான் பெண்கள் அணி வீரர்களுக்கு அவர்கள் குடும்பத்தினர் மூலம் அரசு கொடுத்த அழுத்தத்தால் அவர்கள் தங்களது முடிவை மாற்றியதாகக் கூறப்படுகிறது. ஆனால், ஆஸ்திரேலிய அரசு தங்களது வீரர்களை அங்கே தங்கவைக்க அழுத்தம் கொடுப்பதாக ஈரான் குற்றம்சாட்டியுள்ளது.

## துபாய் விமான நிலையம் அருகே ட்ரோன் தாக்குதல்: விமானப் போக்குவரத்து நிறுத்தம்

**துபாய், மார்ச் 17:**

துபாய் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் இன்று (திங்கள்கிழமை) அதிகாலை நடந்த ட்ரோன் தாக்குதலில் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. இதன் காரணமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



துபாயில் அமைந்துள்ள உலகின் மிகவும் பரபரப்பான சர்வதேச விமான நிலையத்தின் அருகே நடந்த இச்சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் துபாய் அதிகாரிகள் தெரிவித்தனர். தீயை அணைக்க துபாய் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுகுறித்து துபாய் ஊடக அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், "துபாய் சர்வதேச விமான நிலையத்திற்கு (DXB) அருகே நடந்த ட்ரோன் தாக்குதலில் எரிபொருள் தொட்டிகளில் ஒன்று பாதிக்கப்பட்டது. தீயை கட்டுக்குள் கொண்டுவர துபாய் பாதுகாப்பு படைகள் தற்போது தீவிரமாக பணியாற்றி வருகின்றன. இச்சம்பவத்தில் இதுவரை யாருக்கும் காயம் ஏற்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துபாய் விமான நிலைய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதால், ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸில் துபாய்க்கு செல்லும் மற்றும் அங்கிருந்து புறப்படும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

துபாய் விமான நிலையத்திற்கு அருகில் தாக்குதல் நடந்த சில மணி நேரங்களுக்குப் பிறகு, நகரத்தின் சில பகுதிகளில் வான் பாதுகாப்பு எச்சரிக்கைகள் ஒலித்தன. ஈரானில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை தங்கள் வான் பாதுகாப்பு அமைப்புகள் இடைமறித்து அழித்ததாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகள் அறிவித்தனர்.

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை தேடிச் சென்று கொல்வோம்: ஈரான் புரட்சிகர பாதுகாப்புப் படை சபதம்

**தெஹ்ரான், மார்ச் 17:**

மத்திய கிழக்கு நாடுகளில் 2 வாரங்களுக்கு மேலாக போர் நீடிக்கிறது. இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த சில நாட்களாக பொதுவெளியில் காணப்படவில்லை என்று தகவல் பரவி வருகிறது.



இந்த சூழ்நிலையில், ஈரானின் புரட்சிகர பாதுகாப்புப் படை வெளியிட்டுள்ள அறிக்கையில், "குழந்தைகளைக் கொல்லும் இந்தக் குற்றவாளி (நெதன்யாகு) உயிரோடு இருந்தால், எங்களது முழு பலத்தையும் கொண்டு அவரைப் பின் தொடர்ந்து தேடிச் சென்று கொல்வோம்" என கூறப்பட்டுள்ளது.

மார்ச் 12ம் தேதி வெளியான வீடியோ ஒன்றில், நெதன்யாகுவின் ஒரு கையில் ஆறு விரல்கள் இருப்பது போலத் தெரிவதைச் சுட்டிக்காட்டியுள்ள பல இணையதளப் பயனர்கள், அது செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மூலம் எடிட் செய்யப்பட்ட வீடியோவாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளனர்.

அந்த வீடியோவில், 76 வயதான நெதன்யாகு, ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கிய பிறகு தனது முதல் செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றினார். அதில் ஈரானின் புதிய உச்ச தலைவர் மோஜ்தாபா காமேனியை கொல்லப்போவதாக மறைமுகமாக அச்சுறுத்தியதுடன், இஸ்ரேலிய ராணுவத்தின் நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தினார்.

இதனிடையே அமெரிக்க அரசியல் வர்ணனையாளர் கேண்டஸ் ஓவன்ஸ் உட்பட பலரும், 'பிபி எங்கே?' (நெதன்யாகுவின் செல்லப்பெயர்) எனக் கேள்வி எழுப்பியுள்ளனர். இதனிடையே, பெஞ்சமின் நெதன்யாகு இறந்துவிட்டதாக சமூக வலைதளங்களில் பரவும் செய்திகளை அவரது அலுவலகம் மறுத்துள்ளதுடன், அவர் நலமாக உள்ளார் என்றும் தெரிவித்துள்ளது.

## ஈரானுக்கு 'ஏஐ' வதந்திகளைப் பரப்பும் ஆயுதமாகிவிட்டது: ட்ரம்ப் விமர்சனம்

**வாஷிங்டன், மார்ச் 17:**

கட்டிடங்களையும் கப்பல்களையும் ஈரான் ராணுவம் அழிப்பது போல செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட வீடியோக்கள் மூலம் ஈரான் பொய் தகவல்களை பரப்பி வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.



அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது கடந்த பிப். 28-ம் தேதி தாக்குதல்களை தொடங்கின. இதில், அந்த நாட்டின் உச்ச தலைவராக இருந்த அயதுல்லா அலி காமேனி உட்பட பல்வேறு தலைவர்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல்களுக்கு ஈரான் பதிலடி கொடுத்து வருகிறது. 17-வது நாளாக போர் நீடித்து வரும் நிலையில், ராணுவ ரீதியாக ஈரான் தோல்வி அடைந்துவிட்ட போதிலும் பொய்ப் பிரச்சாரங்களை அது வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

ட்ருத் சோஷியல் சமூக ஊடக பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ஈரான் நீண்ட காலமாக ஊடகங்களை கையாளுவதிலும் மக்கள் தொடர்பிலும் வல்லுநர் என்று அறியப்படுகிறது. ராணுவ ரீதியாக அவர்கள் திறனற்றவர்கள், பலவீனமானவர்கள். ஆனால், ஊடகங்களுக்கு தவறான தகவல்களை உண்மையைப் போல அளிப்பதில் பாராட்டத்தக்க அளவில் மிகவும் திறமையானவர்கள். இப்போது ஈரான் பயன்படுத்தும் மற்றொரு தவறான தகவல் ஆயுதமாக ஏ.ஐ. மாறியுள்ளது. ஈரான் ராணுவம் நாளுக்கு நாள் திறமையாக போரிட்டு வருவதாக செய்திகள் பரப்பப்படுகின்றன.

அவர்கள் போலியான ஆளில்லா படகுகளைக் காட்டினர். கடலில் பல்வேறு கப்பல்களை சுட்டினர். பார்ப்பதற்கு இது சக்திவாய்ந்த, கொடூர தாக்குதல்களைப் போன்று தோன்றுகிறது. ஆனால், அவர்கள் தாக்கிய படகுகள் உண்மையானவை அல்ல. ஈரான் ராணுவம் ஏற்கனவே தோற்டிக்கப்பட்டுவிட்டது. ஆனால், அந்த ராணுவம் மிகவும் வலிமையானது என்பதைப்போல காட்டுவதற்காக இவை அனைத்தும் செய்யப்படுகின்றன. ஐந்து அமெரிக்க எரிபொருள் நிரப்பும் விமானங்கள் தாக்கப்பட்டு அவை மோசமாக சேதமடைந்ததாக 'தி வால் ஸ்ட்ரீட்' ஜர்னல் பத்திரிகை உட்பட பல்வேறு பத்திரிகைகளில் வெளியான செய்திகள் உண்மையானவை அல்ல. ஐந்து விமானங்களில் ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் சேவையில் உள்ளன. அந்த ஒன்றும் விரைவில் வானத்தில் பறக்கும். தீப்பிடித்து எரிவதாகக் காட்டப்படும் கட்டிடங்கள், கப்பல்கள் ஆகியவை ஏ.ஐ ஆல் உருவாக்கப்பட்ட போலிச் செய்திகள். உதாரணமாக, உலகின் மிகப் பெரிய மற்றும் மிகவும் மதிப்புமிக்க கப்பல்களில் ஒன்றான நமது அபிரகாம் லிங்கன் விமானம் தாங்கிக் கப்பல், கடலில் கட்டுப்பாடு இல்லாமல் எரிவதைப் போல ஒரு வீடியோ வெளியாகி உள்ளது. அந்த கப்பல் எரியவில்லை என்பது மட்டுமல்ல, அது தாக்குதலுக்கு உள்ளாகவில்லை. கதை போலியானது. ஒரு குறிப்பிட்ட வழியில் அதை உருவாக்கிய அந்த ஊடக நிறுவனங்கள் தவறான தகவல்களைப் பரப்புவதற்காக துரோகக் குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று நீங்கள் கூறலாம்.

உண்மை என்னவென்றால், ஈரான் அழிக்கப்பட்டு வருகிறது. ஏ.ஐ மூலம் உருவாக்கப்படும் போர்களில் மட்டுமே அவர்கள் வெற்றி பெற்று வருகிறார்கள். ஆனால் பொய்ச் செய்திகள், ஊழல் நிறைந்த ஊடக நிறுவனங்களால் தொடர்ந்து பரப்பப்படுகின்றன. தீவிர இடதுசாரி பத்திரிகைகள் இதை நன்கு அறிந்திருக்கின்றன. ஆனால், தொடர்ந்து தவறான கதைகள் மற்றும் பொய்களுடன் அவை முன்னேறி வருகின்றன.

## ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் எண்ணெய் கப்பல்களுக்கு இந்திய கடற்படை பாதுகாப்பு

**தெஹ்ரான், மார்ச் 17:**

ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை கடக்கும் இந்திய எண்ணெய் கப்பல்களுக்கு இந்திய கடற்படையின் போர்க் கப்பல்கள் பாதுகாப்பு வழங்கி வருகின்றன.

அரபிக்கடலில் பெர்சியன் வளைகுடாவையும், ஓமன் வளைகுடாவையும் ஹார்முஸ் ஜலசந்தி இணைக்கிறது. இந்த ஜலசந்தி ஈரான் கடல் எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. ஆசிய நாடுகளுக்கான 85 சதவீத கச்சா எண்ணெய், சமையல் காஸ் ஏற்றுமதி ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே நடைபெறுகிறது.



அமெரிக்கா உடனான போர் காரணமாக இந்த ஜலசந்தியில் சரக்கு கப்பல் போக்குவரத்தை ஈரான் ராணுவம் முடக்கியுள்ளது. இதன்காரணமாக, இந்தியாவில் சமையல் காஸ் சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதற்கு தீர்வு காணபிரதமர் நரேந்திர மோடி, ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியனுடன் சமீபத்தில் தொலைபேசி வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன் பலனாக, 'ஷிவாலிக்', 'நந்தாதேவி' ஆகிய இந்திய கப்பல்கள் சுமார் ஒரு லட்சம் டன் சமையல் காஸுடன் நேற்று முன்தினம் ஹார்முஸ் ஜலசந்தியை பாதுகாப்பாக கடந்தன. இரு கப்பல்களும் இன்று அல்லது நாளை குஜராத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெர்சியன் வளைகுடா பகுதியில் சுமார் 22 இந்திய எண்ணெய் கப்பல்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளன. அந்த கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை பாதுகாப்பாக கடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக இந்திய கடற்படை வட்டாரம் கூறியதாவது: ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை கடக்கும் இந்திய எண்ணெய் கப்பல்களுக்கு இந்திய கடற்படையின் போர்க் கப்பல்கள் பாதுகாப்பு வழங்கி வருகின்றன.கடந்த 14-ம் தேதி ஹார்முஸ் ஜலசந்தியை 2 இந்திய கப்பல்கள் கடந்து சென்றன.

அந்த கப்பல்களுக்கு இந்திய போர்க்கப்பல்கள் பாதுகாப்பு வழங்கின. பெர்சியன் வளைகுடா பகுதியில் 3 இந்திய போர்க் கப்பல்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டு உள்ளன. தேவைக்கு ஏற்ப இவை பயன்படுத்தப்படும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## 6 ஆண்டுகளுக்கு பிறகு சீனா-வடகொரியா இடையே மீண்டும் விமான சேவை



**பீஜிங், மார்ச் 17:**

கொரோனா பரவல் காரணமாக கடந்த 2020-ம் ஆண்டு வடகொரியா தனது எல்லைகளை மூடியது. இதனால் சர்வதேச விமான போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டது. இந்த நிலையில், கடந்த 6 ஆண்டுகளாக முடக்கப்பட்டிருந்த சீனா- வடகொரியா இடையிலான விமானப் போக்குவரத்து மீண்டும் தொடங்குகிறது.

சீனாவின் தேசிய விமான நிறுவனமான 'ஏர் சீனா', பீஜிங்கில் இருந்து வடகொரிய தலைநகர் பியாங்யாங்குக்கு வரும் 30-ந்தேதி முதல் தனது சேவையைத் தொடங்க உள்ளது. முதல்கட் டமாக வாரத்திற்கு ஒருமுறை (திங்கட்கிழமை) இந்த விமானம் இயக்கப்பட உள்ளது.

ஏற்கனவே இரு நாடுகளுக்கும் இடையே ரெயில் போக்குவரத்து தொடங்கியுள்ள நிலையில், தற்போது விமான சேவையும் மீண்டும் வருவது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் சுற்றுலா மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# தமிழகம் முழுவதும் 2,106 பறக்கும் படை வீரர்கள் கண்காணிப்பு: ரூ.1.26 கோடி பறிமுதல்

## விஜய் அரசியலுக்கு வந்ததே முதலமைச்சர் ஆவதற்குத் தான்



## பத்ம விருதுகளுக்கான விண்ணப்பங்கள் தொடக்கம்: ஜூலை 31-இல் நிறைவு!

## விளாத்திகுளம் மாணவி வழக்கில் 5 பேரிடம் டிஎன்ஏ பரிசோதனை

## விண்வெளியில் இருந்து வரப்போகும் மின்சாரம்!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 17.03.2026 செவ்வாய்க்கிழமை இலவச இ-பேப்பர்